KEMENTERIAN PENDIDIKAN
JABATAN PENDIDIKAN NEGERI PERAK

YAYASAN PERAK

Ticket to Victory

# Bahasa Tamil



**TERBITAN:**

SEKTOR PEMBELAJARAN
JABATAN PENDIDIKAN NEGERI PERAK

EDISI KEDUA

KEMENTERIAN PENDIDIKAN
JABATAN PENDIDIKAN NEGERI PERAK

# PRAKATA

Jabatan Pendidikan Negeri Perak dengan kerjasama panel penggubal, guru cemerlang dan jurulatih utama mata pelajaran telah menghasilkan modul Ticket to Victory yang disediakan berdasarkan Kurikulum Standard Sekolah Menengah (KSSM) Tingkatan 4 dan 5. Penghasilan modul ini adalah hasil sumbangan tenaga guru - guru berpengalaman negeri Perak. Modul ini mengandungi contoh soalan mengikut topik dan skema jawapan bagi 21 mata pelajaran teras dan elektif terpilih berdasarkan format baharu peperiksaan Sijil Pelajaran Malaysia mulai tahun 2022.

Modul Ticket to Victory disediakan dalam format "pdf" dan boleh digunakan semasa pengajaran dan pembelajaran (PdP) atau digunakan sebagai bahan latihan pengukuhan, pengayaan dan ulangkaji di rumah. Bahan ini juga boleh dijadikan panduan kepada guru-guru untuk membina soalan mengikut format SPM. Justeru itu, diharap modul Ticket to Victory dapat dimanfaatkan sebaik mungkin demi kecemerlangan SPM di negeri Perak bertepatan dengan slogan Jabatan Pendidikan Negeri Perak iaitu "We Deliver".

Sektor Pembelajaran,
Jabatan Pendidikan Negeri Perak
Jalan Tawas Baru Utara,
Tasek Damai,
30010, Ipoh,
Perak Darul Ridzuan
Tel: 05-292 2745 / 05- 292 3603
Faks : 05 – 292 3851
2022

JABATAN PENDIDIKAN NEGERI PERAK
We Deliver



# PRAKATA PENGARAH PENDIDIKAN

Assalamualaikum warahmatullahi wabarakatuh dan salam sejahtera.

Setinggi-tinggi syukur ke hadrat Allah SWT kerana dengan izin-Nya, Modul Ticket To Victory ini berjaya dihasilkan untuk edisi kedua.

Modul ini dihasilkan oleh Sektor Pembelajaran, Jabatan Pendidikan Negeri Perak dengan kolaboratif panel penggubal, guru cemerlang dan jurulatih utama mata pelajaran yang berpengalaman. Modul ini mengandungi 21 mata pelajaran teras dan elektif terpilih merangkumi sukatan tingkatan 4 dan 5.

Pembinaan modul ini adalah seiring dengan perubahan format peperiksaan SPM bermula tahun 2021 berasaskan Kurikulum Standard Sekolah Menengah (KSSM). Modul ini juga diharapkan dapat membantu guru-guru dan calon-calon SPM menjalankan latih tubi berfokus agar mereka lebih bersedia untuk menghadapi peperiksaan SPM nanti.

Bagi pihak jabatan, saya ingin merakamkan setinggi-tinggi penghargaan kepada Sektor Pembelajaran JPN dan PPD serta guru-guru yang bergabung tenaga dan idea menghasilkan modul ini. Setinggi-tinggi penghargaan juga diucapkan kepada Yayasan Perak atas sumbangan dan sokongan yang berterusan dalam menjayakan pembinaan modul ini.

Akhir kata, semoga Allah SWT sentiasa memberkati usaha yang kita lakukan ini dan pendidikan di negeri Perak akan terus cemerlang.

Sekian. Terima kasih.

AZNAN BIN ALIAS, AMP
Pengarah Pendidikan Negeri Perak

JABATAN PENDIDIKAN NEGERI PERAK
We Deliver



# PRAKATA
# TIMBALAN PENGARAH PENDIDIKAN

Assalamualaikum warahmatullahi wabarakatuh kepada semua warga pendidik dan semua calon SPM negeri Perak.

Alhamdulillah, saya memanjatkan setinggi-tinggi kesyukuran ke hadrat Allah SWT dengan berkat izin dan limpah kurnia-Nya, Modul Ticket To Victory ini dapat direalisasikan untuk edisi kedua. Modul ini melibatkan 21 mata pelajaran teras dan elektif terpilih merangkumi sukatan tingkatan 4 dan 5.

Saya ingin mengucapkan terima kasih kepada semua bidang di Sektor Pembelajaran, JPN Perak dan semua panel penggubal modul yang terdiri daripada guru cemerlang, jurulatih utama mata pelajaran dan guru berpengalaman yang telah bertungkus lumus mengorbankan masa, tenaga dan buah fikiran sehingga berjaya menghasilkan modul ini mengikut masa yang ditetapkan.

Penghasilan Modul Ticket To Victory ini adalah salah satu inisiatif Jabatan Pendidikan Perak untuk menyediakan sumber pembelajaran dan latihan kepada calon-calon SPM. Pemilihan item soalan adalah merangkumi pelbagai aras kesukaran bagi setiap mata pelajaran. Soalan - soalan telah disusun berdasarkan format terkini peperiksaan SPM seiring dengan Kurikulum Standard Sekolah Menengah.

Modul pembelajaran ini akan disebarluaskan kepada guru-guru melalui blog Anjung Ilmu Guru Perak. Saya amat yakin penggunaan modul ini dan juga komitmen semua yang terlibat akan memberikan impak yang besar kepada kecemerlangan murid di negeri Perak dalam peperiksaan Sijil Pelajaran Malaysia nanti.

Sekian. Terima kasih.

HAJAH RAHIMAH BINTI MOHAMED, AMP
Timbalan Pengarah Pendidikan, Sektor Pembelajaran
Jabatan Pendidikan Negeri Perak

# Panel Penggubal Modul

## BAHASA TAMIL KERTAS 1 & 2



**ANTHONESAMY A/L KOLANDASAMY**
SMK PINJI
IPOH, PERAK

**GANESH A/L SABAPATHY MUNUSAMY**
SMK TUN PERAK
PADANG RENGAS, PERAK





**KARTHIGESU A/L LETCHUMANAN**
SMK KAMUNTING
KAMUNTING, PERAK

**D SIVA KUMAR A/L DORAISAMY**
SMK DATUK HJ.ABDUL WAHAB
SG.SIPUT (U), PERAK





**PATHMAWATHY A/P VELLUKUTTY**
SMK CLIFFORD
KUALA KANGSAR, PERAK

**PARAMESWARAN A/L M.LETCHUMANAN**
SMK KG. JAMBU
TAIPING, PERAK





**KLISWARI A/P KRISHNA**
SMK CONVENT
TAIPING, PERAK

**DEVENDRAN A/L CHADRAN**
SMK HAMID KHAN
TAPAH, PERAK





**SARAVANAN A/L SANTHIRAN**
SMK METHODIST (ACS)
KAMPAR, PERAK

**RAVI KUMAR A/L MUNIANDY**
SMK TOH INDERA WANGSA AHMAD
BATU GAJAH, PERAK





**PUSPAVATHY A/P LACHIMANA**
SMK AMBROSE
AYER TAWAR, PERAK

**PUVANAISWARY A/P KALIAPAN**
SMK BIDOR
BIDOR, PERAK



# Panel Penggubal Modul

## BAHASA TAMIL KERTAS 1 & 2



**TULASI A/P BASKEREN**
SMK KATHOLIK
TANJONG MALIM, PERAK

**PONNIAMAH A/P M MUNIANDY**
SMK SERI KOTA
TAIPING, PERAK





**RAJASEGAR A/L MANIAM**
SMK ISKANDAR SHAH
PARIT, PERAK

**SATHIAVANI A/P MANIAM**
SMK TASEK DAMAI
IPOH, PERAK





**PREMESHA A/P S.KUMARAN**
SMK BAGAN SERAI
BAGAN SERAI, PERAK

**KALAIMATHY A/P MANIAM**
SMK SUNGAI PARI
IPOH, PERAK





**RAMAKRISHNAN A/L APPADOO**
SMJK DINDINGS,
PUNDUT, LUMUT, PERAK

**MEINAKA A/P THYAGARAJAN**
SMK HUTAN MELINTANG
HUTAN MELINTANG, PERAK





**MURUGAIYA A/L MICHAEL**
SMK IDRIS SHAH
GOPENG, PERAK

# Isi Kandungan Modul


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| **தமிழ்மொழி தாள் 1 : பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை** | 1 |
| வழிகாட்டிக் கட்டுரை 1 : அலுவல் கடிதம் | 2 |
| வழிகாட்டிக் கட்டுரை 2 : நட்பு / உறவுக் கடிதம் | 5 |
| வழிகாட்டிக் கட்டுரை 3 : உரையாடல் | 8 |
| வழிகாட்டிக் கட்டுரை 4 : நேர்காணல் | 11 |
| வழிகாட்டிக் கட்டுரை 5 : கூட்டக் குறிப்பறிக்கை | 14 |
| வழிகாட்டிக் கட்டுரை 6 : செயலறிக்கை | 19 |
| வழிகாட்டிக் கட்டுரை 7 : நிகழ்வறிக்கை | 23 |
| வழிகாட்டிக் கட்டுரை 8 : ஆண்டறிக்கை | 26 |
| வழிகாட்டிக் கட்டுரை 9 : பிரியாவிடை உரை | 30 |
| வழிகாட்டிக் கட்டுரை 10 : பாராட்டுரை | 33 |
| வழிகாட்டிக் கட்டுரை 11 : உரை | 35 |
| **தமிழ்மொழி தாள் 1 : பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை** | 38 |
| திறந்தமுடிவுக் கட்டுரை 1 : கருத்து விளக்கக் கட்டுரை | 39 |
| திறந்தமுடிவுக் கட்டுரை 2 : கதை | 42 |
| திறந்தமுடிவுக் கட்டுரை 3 : வருணனை | 45 |
| திறந்தமுடிவுக் கட்டுரை 4 : வாதக் கட்டுரை | 47 |
| திறந்தமுடிவுக் கட்டுரை 5 : விவாதக் கட்டுரை | 49 |
| **தமிழ்மொழி தாள் 1 : பிரிவு அ & ஆ : பயிற்சிக்கும் முயற்சிக்கும்** | 51 |
| பயிற்சி 1 | 52 |
| பயிற்சி 2 | 54 |
| பயிற்சி 3 | 56 |
| பயிற்சி 4 | 58 |
| பயிற்சி 5 | 60 |
| **தமிழ்மொழி தாள் 2 : பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை) வினாக்கள் 1 முதல் 6 வரை** | 62 |
| பொதுவான விளக்கம் | 63 |
| எடுத்துக்காட்டு வினாக்கள் | 64 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 68 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 70 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 73 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 4 | 73 |

| | |
|---|---|
| **தமிழ்மொழி தாள் 2 : பிரிவு அ : கருத்துணர்தல் (உரைநடை) வினாக்கள் 7 முதல் 10 வரை** | 76 |
| பொதுவான விளக்கம் | 76 |
| எடுத்துக்காட்டு வினாக்கள் | 77 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 79 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 81 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 83 |
| **தமிழ்மொழி தாள் 2 : பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்) வினாக்கள் 11 முதல் 14 வரை** | 85 |
| பொதுவான விளக்கம் | 86 |
| எடுத்துக்காட்டு வினாக்கள் | 87 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 90 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 92 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 94 |
| **தமிழ்மொழி தாள் 2 : பிரிவு ஆ : தொகுத்தல் வினா 15** | 96 |
| பொதுவான விளக்கம் | 96 |
| கவிதை – தொகுத்தல் : எடுத்துக்காட்டு வினாவும் பரிந்துரைக்கப்படும் விடையும் | 98 |
| கவிதை – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 101 |
| கவிதை – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 102 |
| கவிதை – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 103 |
| உரைநடை – தொகுத்தல் : எடுத்துக்காட்டு வினாவும் பரிந்துரைக்கப்படும் விடையும் | 104 |
| உரைநடை – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 107 |
| உரைநடை – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 108 |
| உரைநடை – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 109 |
| புள்ளிவிவரப் பட்டியல் – தொகுத்தல் : எடுத்துக்காட்டு வினாவும் பரிந்துரைக்கப்படும் விடையும் | 110 |
| புள்ளிவிவரப் பட்டியல் – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 113 |
| புள்ளிவிவரப் பட்டியல் – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 114 |
| புள்ளிவிவரப் பட்டியல் – தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 115 |
| **தமிழ்மொழி தாள் 2 : பிரிவு இ : செய்யுளும் மொழியணியும் வினாக்கள் 16 - 19** | 116 |
| பொதுவான விளக்கம் | 117 |
| எடுத்துக்காட்டு வினா 16 - 18 | 118 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 119 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 120 |
| பொதுவான விளக்கம் வினா எண் 19 | 122 |
| எடுத்துக்காட்டு வினா 19 | 122 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 123 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 123 |

| | |
|---|---|
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 124 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 4 | 124 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 5 | 125 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 6 | 125 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 7 | 126 |
| செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 8 | 127 |
| **தமிழ்மொழி தாள் 2 : பிரிவு ஈ : இலக்கணம்<br>வினாக்கள் 20 - 22** | 128 |
| பொதுவான விளக்கம் | 129 |
| எடுத்துக்காட்டு வினா 20 | 129 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 129 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 130 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 130 |
| எடுத்துக்காட்டு வினா 21 | 131 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 | 131 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 | 131 |
| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 | 131 |
| எடுத்துக்காட்டு வினா 22 - பிழை ஆய்வு | 132 |
| பயிற்சி 1 | 133 |
| பயிற்சி 2 | 133 |
| பயிற்சி 3 | 134 |
| SET 1 HINGGA 17 | 135 - 153 |
| விடைப்பட்டி | 154 |

# தமிழ்மொழி தாள் 1

# பிரிவு அ :
# வழிகாட்டிக் கட்டுரை

## வழிகாட்டிக் கட்டுரை 1

### அலுவல் கடிதம்

அலுவல் கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:-

- அலுவல் கடித அமைப்பில் இருத்தல்
- அனுப்புநர், பெறுநர் முகவரி, நாள் சரியான முறையில் எழுதப்பட்டிருத்தல்
- பெறுநரை விளிக்கும் சொல், தலைப்பு, கடித்ததின் நோக்கம் எழுதப்பட்டிருத்தல்
- பத்திகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- முடிவு எழுதப்பட்டிருத்தல் - எதிர்பார்ப்பு, நன்றி
- கையொப்பம் இட்டிருத்தல்
- முடிப்பு - கடமையாற்றும், கையொப்பம், அனுப்புநர் முழுப்பெயர் (அடைப்புக்குறியில்)
- அனுப்புநர் பதவியும் கழகமும் குறிக்கப்பட்டிருத்தல்

**அலுவல் கடிதம் - சட்டகம்**

______________________
______________________ **1** — அனுப்புநர் முகவரி
______________________
________________________________________________ **2** — இடைக்கோடு

______________________
______________________ **3** — பெறுநர் முகவரி
______________________ ______________ **4** — நாள்

______________ **5** — விளிப்பு
________________________________________ **6** — தலைப்பு / கரு

**7** — கடித நோக்கம்
________________________________________________
________________________________________________
________________________________________________

2. ______________________________________________
________________________________________________
________________________________________________

3.____________________________________________________________

4.____________________________________________________________ 8

முடிவு

முடிப்பு

____________________ 9

.....................................................

(                                        )

**எடுத்துக்காட்டுக் கடிதம்**

உமது குடியிருப்புப் பகுதியில் குப்பைகள் பல நாள்களாக அகற்றப்படாமல் நிரம்பி வழிகின்றன. இதனால், பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, உமது குடியிருப்புப் பகுதி சங்கத்தின் செயலர் என்ற முறையில் தக்க நடவடிக்கை எடுக்கும்படி நகராண்மைக் கழகத்திற்கு அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.

| அமைப்பு | அலுவல் கடிதம் | கருத்து |
|---|---|---|
| 1. அனுப்புநர் முகவரி<br><br>2. இடைக் கோடு<br><br>3. பெறுநர் முகவரி<br><br>4. நாள்<br><br>5. விளிப்பு<br>6. தலைப்பு/கரு<br>7. கடித நோக்கம் | தாமான் மாணிக்கவாசகம் குடியிருப்போர் சங்கம்,<br>எண் 70, ஜாலான் 3,<br>தாமான் மாணிக்கவாசகம்,<br>34000 தைப்பிங்,<br>பேரா.<br>______________________________<br>தலைமை நிர்வாகி,<br>தைப்பிங் நகராண்மைக் கழகம்,<br>ஜாலான் தாமான் தாசிக்,<br>34000 தைப்பிங்,<br>பேரா. 29 நவம்பர் 2021<br><br>ஐயா,<br>**<u>குப்பைகள் அகற்றப்படா நிலை</u>**<br>வணக்கம். மேற்கண்ட முறையீடு தொடர்பாக தாமான் மாணிக்கவாசகம் குடியிருப்போர் சங்கத்தின் செயலர் என்னும் முறையில் எங்கள் குடியிருப்புப் பகுதியில் குப்பைகள் சில வாரங்களாக அகற்றப்படாமல் இருக்கும் சிக்கலை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கே இக்கடிதத்தை எழுதுகிறேன். | |

| | | |
|---|---|---|
| | 2. தாமான் மாணிக்கவாசகம் குடியிருப்போர் சங்கத்தின் செயலர் என்னும் முறையில் இந்தத் தகவலைத் தெரிவிக்கும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டுள்ளது. எங்கள் குடியிருப்புப் பகுதியில் ஒவ்வொரு வாரமும் மூன்று நாட்கள் குப்பைகள் அகற்றப்படுவது வழக்கமாகும். ஆனால், கடந்த மூன்று வாரங்களாகத் தங்களால் நியமிக்கப்பட்ட ஒப்பந்தப் பணியாளர்கள் குப்பைகளை அகற்றாததற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. இஃது இங்கு வசிப்பவர்களுக்குப் பல்வகை சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. | கருத்து 1 |
| | 3. குப்பைகள் பல நாட்கள் நிரம்பிக் கிடப்பதால் அவை அழுகி துர்நாற்றம் வீசத் தொடங்கிவிட்டது. துர்நாற்றம் எங்கும் பரவுவதால் வீட்டில் நிம்மதியாகக் குடியிருக்க முடியவில்லை. எந்நேரமும் வீட்டின் கதவையும் சாளரங்களையும் அடைத்தே வைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். | கருத்து 2 |
| | 4. அதுமட்டுமல்லாது, இக்குப்பைகளின் தேக்கத்தால் ஈக்களின் தொல்லையும் அதிகரித்துவிட்டது. வீட்டினுள் எந்நேரமும் ஈக்கள் மொய்க்கத் தொடங்கிவிட்டன. சமைக்கும்போதும் உணவு உண்ணும்போதும் ஈக்கள் தொல்லை பெரும் தொந்தரவாகவும் அருவருப்பாகவும் உள்ளது. நிம்மதியாக உணவு உண்ண இயலவில்லை. எந்த உணவையும் சிறிது நேரங்கூட திறந்து வைக்க முடிவதில்லை. இந்த ஈக்கள் தொல்லை 'காலரா' போன்ற வேறு பிரச்சனைகளுக்கு இட்டுச் சென்றுவிடும் அபாயம் இருப்பதால் மேலும் அச்சமாகவுள்ளது. | கருத்து 3 |
| | 5. வீடுகளில் வைக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டிகள் நிரம்பி வழிவதால் வேறு வழியின்றி குப்பைகளைக் கட்டி குப்பைத்தொட்டிகளின் அருகில் வைக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. தெரு நாய்களுக்கு இது பெரும் வேட்டையாகிவிட்டது. அவை உணவைத் தேடி இந்தக் குப்பைப்பைகளைக் கிழித்துக் குதறிச் சிதறடிக்கின்றன. இது குடியிருப்பாளர்களுக்குப் பெரும் தொந்தரவாக அமைகிறது. வீட்டுவாசல் சிதறிக்கிடக்கின்ற இக்குப்பைகளைச் சுத்தம் செய்வது எங்களின் தினசரி நடவடிக்கையாகிவிட்டது. | கருத்து 4 |
| | 6. இன்னும் எத்தனை நாள்களுக்கு நாங்கள் இத்தொல்லைகளை எதிர்நோக்க வேண்டும் என்று தெரியவில்லை. எங்கள் குடியிருப்பு மக்களுக்குப் பெருந்தொந்தரவாக அமைந்துள்ளது. இச்சிக்கலுக்கு உடனடித் தீர்வு காண முனைவீர்கள் எனப் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். | கருத்து 5 |
| 8. முடிவு | 7. இக்குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்களின் நலனுக்காக விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு எங்கள் குடியிருப்புவாழ் பொதுமக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.<br><br>நன்றி. | |
| 9. முடிப்பு | கடமையாற்றும், | |
| • கையொப்பம்<br>• முழுப்பெயர்<br>• பதவி & கழகம் | பொற்சுவை<br>...................................<br>(பொற்சுவை த/பெ முகுந்தர் )<br>செயலர்,<br>தாமான் மாணிக்கவாசகம் குடியிருப்போர் சங்கம்.<br>தைப்பிங். | |

## வழிகாட்டிக் கட்டுரை 2

### நட்பு / உறவுக் கடிதம்

நட்பு / உறவுக் கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:-

- நட்பு / உறவுக் கடித அமைப்பில் இருத்தல்
- அனுப்புநர் பெயர், முகவரி சரியான முறையில் எழுதப்பட்டிருத்தல்
- நாள் எழுதப்பட்டிருத்தல் & பெறுநரை விளிக்கும் சொல் எழுதப்பட்டிருத்தல்
- நலத்தைத் தெரிவித்தல் & நலம் விசாரித்தல்
- பத்தி பிரித்து எழுதப்பட்டிருத்தல்
- முடிவு எழுதப்பட்டிருத்தல் (எதிர்பார்ப்பு, விடைபெறுதல், நன்றி)
- முடிப்பு - இப்படிக்கு / அன்பு நண்பன், கையொப்பம்
- அனுப்புநரின் முழுப்பெயர் அடைப்புக்குறியில் எழுதப்பட்டிருத்தல்

### நட்பு / உறவுக் கடிதச் சட்டகம்

1 ________ முழுப்பெயர்
________ அனுப்புநர்
________ முகவரி

2 ________ நாள்

________ 3 விளிப்பு

________ 4 நலம் தெரிவித்தல்
________

________ 5 கடித நோக்கம்
________

________
________
________
________

________
________
________

______________________________________ 6 முடிவு / விடை பெறுதல்
______________________________________
______________________________________
______________________________________

______________ 7 முடிப்பு

..................................................

(                                        )

**எடுத்துக்காட்டுக் கடிதம்**

கோவிட் 19 பெருந்தொற்று பெருகிவருவதால் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் அவசியத்தை விவரித்து உன் தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக.

| அமைப்பு | நட்புக் கடிதம் / உறவுக் கடிதம் | கருத்து |
|---|---|---|
| 1. முழுப்பெயர் அனுப்புநர் முகவரி | சுகமதி த/பெ அறிவன்,<br>எண் 20, ஜாலான் 1,<br>தாமான் துன் சம்பந்தன்,<br>34000 தைப்பிங்,<br>பேரா. | |
| 2. நாள் | 29 நவம்பர் 2021 | |
| 3. விளிப்பு | அன்புள்ள தோழி ஆதினிக்கு, | |
| 4. நலம் விசாரித்தல் | வணக்கம். இறையின் கருணையினால் இங்கு நானும் என் குடும்பத்தாரும் நலமாக இருக்கின்றோம். அதேபோல் நீயும் உன் குடும்பத்தாரும் நலமோடு இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். | |
| 5. நோக்கம் | | கருத்து 1 |
| | உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். தகவல் அறிந்தேன். உன் குடியிருப்புப் பகுதியில் சிலருக்குக் கோவிட் 19 பெருந்தொற்று பரவியிருப்பது அறிந்து கலக்கம் கொள்கிறேன். உனக்குச் சில பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றி நினைவூட்டவே இக்கடிதத்தை எழுதுகிறேன். | கருத்து 2 |
| | தோழி, இப்பெருந்தொற்று விரைவாகப் பரவிவரும் இக்காலக் கட்டத்தில் தேவையில்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்க்கவும். அவசியமில்லை என்றால் வெளியில் செல்லாமல் இருப்பதே பாதுகாப்பு. அண்டை அயலாருடன் அளவளாவுதலையும் தற்காலிகமாகத் தவிர்ப்பது அனைவருக்கும் பாதுகாப்பு. | கருத்து 3 |
| | நீ அம்மாவுக்கு உதவியாகப் பொருள்கள், காய்கறிகள் வாங்க அடிக்கடி கடைக்கும் சந்தைக்கும் செல்வாய் என நான் அறிவேன். அப்படி வெளியே செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டாலும் மறவாமல் முகக்கவரியை அணிந்து செல்லவும். தற்போது இரட்டை முகக்கவரிகளை அணிந்து செல்வது மேலும் பாதுகாப்பானது. | கருத்து 4 |
| | அதுமட்டுமல்ல, வெளியே செல்லும்போது கூட்டமான இடங்களைத் தவிர்க்கவும். கடை, சந்தைக்குச் செல்லும்போது கூடல் இடைவெளியைக் கடைப்பிடிக்கவும். ஒரு மீட்டர் இடைவெளி விட்டே நில். கடைக்குச் செல்லும் முன் வாங்க வேண்டிய பொருள்களைப் பட்டியலிட்டுக் கொள். | |

| | | |
|---|---|---|
| | இது நீ தேவையானவற்றை விரைவில் வாங்கிக் கொண்டு அங்கிருந்து வெளியேற உதவும். அடிக்கடி கைத்தூய்மியைப் பயன்படுத்தி கைகளையும் சுத்தம் செய்து கொள்ளவும். மறந்தும் கைகளை உன் முகத்தில் வைத்துவிடாதே.<br><br>வீட்டிற்குத் திரும்பியதும் முதலில் கைகளைக் கழுவி விடு. பின்னர் குளித்து உடைகளை மாற்றிக் கொள்வது சாலச் சிறந்தது. வாங்கி வந்த பொருள்களையும் கிருமிநாசினி தெளித்துச் சுத்தம் செய்த பின்னரே பயன்படுத்தவும். அப்படியே எடுத்துப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். சுத்தம் சுகம் தரும் என்பதை மறந்துவிடாதே. இக்காலக் கட்டத்தில் அஃது எத்துணை உண்மை என்பது கண்கூடு.<br><br>பெரும்பாலோர் சுகாதார அமைச்சின் இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியதால்தான் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை எதிர்ப்பாரா அளவு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. இறப்பு எண்ணிக்கையும் அதிர்ச்சியளிக்கும் வகையில் அதிகரித்து வருவது வருத்தமளிக்கிறது.<br><br>நாம் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் இந்தப் பாதுகாப்பு விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடித்தால்தான் விரைவில் இப்பெருந்தொற்றிலிருந்து மீள முடியும். நடமாட்டக் கட்டுப்பாட்டுத் தடை நீங்கி எல்லோரும் ஏங்கித் தவிக்கும் அந்த இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இயலும். | கருத்து 5<br><br><br><br>கருத்து 6 |
| 6. முடிவு/ விடைபெறுதல் | என்றுதான் அந்த நாள் வருமோ என்று ஏக்கமாக உள்ளது. அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். நான் கூறிய பாதுகாப்பு விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்கவும். உன்னை நேரில் சந்திக்கும்வரை உன் பதில் கடிதத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.<br><br>நன்றி. | |
| 7. முடிப்பு<br>• கையொப்பம்<br>• முழுப் பெயர் | உன் நலன் விரும்பும் தோழி,<br><br>..............................சுகமதி<br>(சுகமதி த/பெ அறிவன்) | |

## வழிகாட்டிக் கட்டுரை 3

### உரையாடல்

உரையாடல் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை :

- உரையாடல் அமைப்பில் இருத்தல்
- சூழல் எழுதியிருத்தல் (யார்? எங்கு? என்ன?)
- முகமன் இருத்தல் (நலம் பாராட்டுதல், வணக்கம்)
- இருவர் பேசுவதாக அமைந்திருத்தல்
- இருவருமே கருத்துகளைப் பேசியிருத்தல்
- ஒருவர் குறைந்தது இரு முறையாவது பேசியிருத்தல்
- உரையாடலுக்குரிய குறியீடுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியிருத்தல் (துறைசார்மொழி)
- முடிவு - இருவருமே விடைபெறுதல்

### உரையாடல் - சட்டகம்

சூழல்: (2)

கலை : முகமன்: (3) ______________________________
______________________________

மாறன் : முகமன் : ______________________________
______________________________

கலை : ______________________________
______________________________
__________ (4) இருவர் பேசுவதாக அமைந்திருத்தல் (5) இருவருமே கருத்துகளைப் பேசியிருத்தல்

மாறன் : ______________________________
__________(ஒருவர் குறைந்தது இரு முறையாவது பேசியிருத்தல் 6)__________
______________________________

கலை : ______________________________
__________ (உரையாடலுக்குரிய குறியீடுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியிருத்தல் 7) ______________________________

மாறன் : ______________________________
______________________________

முடிவு: விடைபெறுதல் (8)

**எடுத்துக்காட்டு உரையாடல்**

**உரையாடல்**

உரையாடல் அமைப்பில் இருத்தல்

சூழல் கலையும் மாறனும் வங்கியில் மின்னணு சேவைப்பற்றி உரையாடுகின்றனர். (யார்? எங்கு? என்ன?)

கலை : வணக்கம். என்ன... மாறன், கப்பலே கவிழ்ந்து விட்டதைப் போல இவ்வளவு சோகமாக உட்கார்ந்து இருக்கீறீர்கள்? (3)

மாறன் : வணக்கம். வாருங்கள்... கலை, வங்கியில் பணம் செலுத்த வந்தேன். என்னுடைய முறை முப்பது எண்கள் தாண்டிப் பின்னால் இருக்கிறது. 2.30 மணிக்கு வேலைக்குப் போக வேண்டும். என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கலை : அடடா..! பணம் செலுத்த ஏன் வங்கிக்கு வந்தீர்கள்? வீட்டில் இருந்தே இணையத்தின்வழி செலுத்தி இருக்கலாமே.

மாறன் : என்ன இணையத்தின் வழி செலுத்தலாமா? என் மகனுக்கு அல்லவா பணம் அனுப்ப வேண்டும். இணையத்தின் வழி செலுத்தச் சாத்தியமாகுமா?

கலை : எந்தக் காலத்தில் இருக்கிறீர்கள் மாறன்? கணினியுகத்தில் இப்பொழுது எல்லாம் சாத்தியமே. உங்கள் மகனுக்கு மட்டுமன்று. இந்த மின்னணு வங்கிச் சேவையின் மூலம் நம் வங்கிக் கணக்கில் இருந்து மற்றொரு வங்கிக் கணக்கிற்குப் பணத்தை மாற்றுவது, மாதாந்திர கட்டணங்களைச் செலுத்துவது, மின்னியல் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்வது... இப்படி எல்லாவற்றையும் வீட்டிலிருந்தே செய்யலாம்.

மாறன் : நீங்கள் சொல்வதைப் பார்த்தால் திறன்பேசி, கையடக்கத் தொடர்புக் கருவிகள் வாயிலாகக்கூட, இருந்த இடத்திலிருந்தே வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் போல் தெரிகிறதே. (4 மற்றும் 5 வது கூறுகள்)

கலை : உண்மைதான் மாறன். ஒரேயொரு வேலைதான் செய்ய வேண்டும். இந்த மின்னணு வங்கித் தளத்தைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். வாடிக்கையாளர்கள், தங்களுக்கு வசதியான நேரங்களில் 24 மணி நேரமும் இந்தச் சேவையைப் பெறலாம். (4 மற்றும் 5 வது கூறுகள்)

மாறன் : இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில், குறிப்பிட்ட நேரத்திற்குள் வங்கிக்கு வந்து தன் தேவைகளை மேற்கொள்ள முடியாமல் தவிக்கும் என்னைப் போன்றவர்களுக்கு இந்த முறையானது புதிய வரவு மட்டுமன்று; புதிய வரம் என்றே சொல்ல வேண்டும் கலை.

கலை : சரியாகக் கூறினீர்கள். அதுமட்டுமல்ல மாறன், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளில் நாம் கட்ட வேண்டிய காப்புறுதி தொகைகள், வணிகம் வைத்திருந்தால் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய மாதச் சம்பளம் போன்றவற்றைக்கூட நாம் கேட்டுக் கொண்டால், வங்கி நமக்காக இந்த மின்னியல் சேவை வழி செலுத்திவிடும். (4 மற்றும் 5 வது கூறுகள்)

மாறன் : (6) அடடா...! எவ்வளவு அறியாமையில் இருந்து காலத்தை விரயமாக்கியுள்ளேன் பாருங்கள். நேரம் கிடைக்காததால் மின்கட்டணத்தைக்கூட இன்னும் கட்டாமல் இருக்கிறேன்.

கலை : கவலையை விடுங்கள். போனது போகட்டும். காசோலையைக்கூட பட்டுவாடா இயந்திரத்தில் செலுத்தும் காலம் வந்து விட்டது. இஃது அறிவியல் யுகம். உலகத்தோடு பொருந்தி வாழ்வதுதான் அறிவுடைமை என்பது வள்ளுவர் வாக்கு மாறன்.

மாறன் : (சிரிப்பு) (7). மிகச் சரி, நான்தான் தற்குறியாய் இருந்துவிட்டேன் போலிருக்கிறது.

கலை : ஐயையோ...! நான் அப்படிச் சொல்லவில்லை. காலத்திற்கு ஏற்ப மாறிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிக் கூறினேன். அதுசரி வேலைக்கு நேரமாகிறது என்று சொன்னீர்களே! பணத்தையும் படிவத்தையும் கொடுங்கள் நான் செலுத்தி விடுகிறேன்.

மாறன் : மிக்க நன்றி கலை. உற்ற நேரத்தில் இடுக்கண் களையும் தங்கள் அன்புக்கு நன்றி.

கலை : அடடா...! சிறு உதவிதானே...! இதற்கெல்லாம் எதற்கு நன்றி?

மாறன் : சரி கலை, நான் விடைபெறுகிறேன். அடுத்த வாரம் மடிக்கணினியோடு வீட்டுக்கு வருகிறேன். மின்னனு வங்கிச் சேவையின் இயக்கத்தைச் செயல்முறையோடு விளக்குங்கள். (8)

கலை : நல்லது மாறன். அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்.

## வழிகாட்டிக் கட்டுரை 4

### நேர்காணல்

உரையைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை :

1. • நேர்காணல் அமைப்பில் இருத்தல்
2. • சூழல் எழுதப்பட்டிருத்தல் – (யார்?,யாரை?,எங்கு?)
3. • நேர்காணல் செய்பவர் & செய்யப்படுபவர் பெயர் எழுதப்பட்டிருத்தல்
4. • அறிமுகம் எழுதப்பட்டிருத்தல்
5. • கேள்வி - பதில் அமைப்பில் எழுதப்பட்டிருத்தல்.
6. • துறைசார் மொழி பயன்படுத்தியிருத்தல்
7. • முடிவு – விடைபெறுதல் இருத்தல்
8. • நன்றி நவின்றிருத்தல்

### நேர்காணல் - சட்டகம்

**நிருபர் எனும் முறையில் பிரபல எழுத்தாளர் ஒருவரை வானொலிக்காக நேர்காணல் செய்கின்றீர். அந்நேர்காணலை எழுதுக**

(சூழல்: தமிழ் வானொலி நிருபரான நான் பிரபல எழுத்தாளர் திரு.முனியன் அவர்களை, அவரது வீட்டில் நேர்காணல் செய்கிறேன்)

| | | |
|---|---|---|
| நிருபர் | : | வணக்கம். ______________________________ ______________________________ |
| திரு. முனியன் | : | வணக்கம், திரு.குமரன். ______________________________ |
| நிருபர் | : | ______________________________ |
| திரு. முனியன் | : | ______________________________ |
| நிருபர் | : | ம்...மிகவும் ______________________________ |
| திரு. முனியன் | : | ______________________________ |
| நிருபர் | | அப்படியா ஐயா! ______________________________ |
| நிருபர் | | ______________ நன்றிகளைக் கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். |
| திரு. முனியன் | | ______________________________ நல்லது, போய் வாருங்கள். |

**எடுத்துக்காட்டு நேர்க்காணல்**

**நேர்க்காணல்**

உரையாடல் அமைப்பில் இருத்தல் 1

சூழல் 2 (அது பிற்பகல் நேரம். வங்கி ஒன்றில், மாறன் மட்டும் தனியே, சோகமே உருவாக இருக்கையில் அமர்ந்திருந்தார். காசோலையை வங்கிக் கணக்கில் சேர்க்க வந்த அவரின் நண்பன் கலை, அவரைக் கவனித்து நெருங்கி வந்து பேசுகிறார். அவர்கள் இருவரும் வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் மின்னனுச் சேவைகள் குறித்து உரையாடுகின்றனர்.
(3 கூறுகள்- யார் ?, எங்கு?, என்ன?)

கலை : 3 வணக்கம். என்ன... மாறன், கப்பலே கவிழ்ந்து விட்டதைப் போல இவ்வளவு சோகமாக உட்கார்ந்து இருக்கீறீர்கள்?

மாறன் : 3 வணக்கம். வாருங்கள்... கலை, வங்கியில் பணம் செலுத்த வந்தேன். என்னுடைய முறை முப்பது எண்கள் தாண்டிப் பின்னால் இருக்கிறது. 2.30 மணிக்கு வேலைக்குப் போக வேண்டும். என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கலை 4 : அடடா..! பணம் செலுத்த ஏன் வங்கிக்கு வந்தீர்கள்? வீட்டில் இருந்தே இணையத்தின்வழி செலுத்தி இருக்கலாமே.

மாறன் : என்ன இணையத்தின் வழி செலுத்தலாமா? என் மகனுக்கு அல்லவா பணம் அனுப்ப வேண்டும். இணையத்தின் வழி செலுத்தச் சாத்தியமாகுமா?

கலை : எந்தக் காலத்தில் இருக்கிறீர்கள் மாறன்? கணினியுகத்தில் இப்பொழுது எல்லாம் சாத்தியமே. உங்கள் மகனுக்கு மட்டுமன்று. இந்த மின்னனு வங்கிச் சேவையின் மூலம் நம் வங்கிக் கணக்கில் இருந்து மற்றொரு வங்கிக் கணக்கிற்குப் பணத்தை மாற்றுவது, மாதாந்திர கட்டணங்களைச் செலுத்துவது, மின்னியல் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்வது இப்படி எல்லாவற்றையும் வீட்டிலிருந்தே செய்யலாம்.

மாறன் : நீங்கள் சொல்வதைப் பார்த்தால் திறன்பேசி, கையடக்கத் தொடர்புக் கருவிகள் வாயிலாகக்கூட, இருந்த இடத்திலிருந்தே வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் போல் தெரிகிறதே. (4 மற்றும் 5 வது கூறுகள்) 5

கலை : உண்மைதான் மாறன். ஒரேயொரு வேலைதான் செய்ய வேண்டும். இந்த மின்னனு வங்கித் தளத்தைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். வாடிக்கையாளர்கள், தங்களுக்கு வசதியான நேரங்களில் 24 மணி நேரமும் இந்தச் சேவையைப் பெறலாம். (4 மற்றும் 5 வது கூறுகள்) 5

மாறன் : இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில், குறிப்பிட்ட நேரத்திற்குள் வங்கிக்கு வந்து தன் தேவைகளை மேற்கொள்ள முடியாமல் தவிக்கும் என் போன்றவர்களுக்கு இந்த முறையானது புதிய வரவு மட்டுமன்று; புதிய வரம் என்றே சொல்ல வேண்டும் கலை.

கலை 6 : சரியாகக் கூறினீர்கள். அதுமட்டுமல்ல மாறன், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளில் நாம் கட்ட வேண்டிய காப்புறுதி தொகைகள், வணிகம் வைத்திருந்தால் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய மாதச் சம்பளம் போன்றவற்றைக்கூட நாம் கேட்டுக் கொண்டால், வங்கி நமக்காக இந்த மின்னியல் சேவை வழி செலுத்திவிடும். (4 மற்றும் 5 வது கூறுகள்)

மாறன் : அடடா...! எவ்வளவு அறியாமையில் இருந்து காலத்தை விரயமாக்கியுள்ளேன் பாருங்கள். நேரம் கிடைக்காததால் மின்கட்டணத்தைக்கூட இன்னும் கட்டாமல் இருக்கிறேன்.

கலை : கவலையை விடுங்கள். போனது போகட்டும். காசோலையைக்கூட பட்டுவாடா இயந்தரத்தில் செலுத்தும் காலம் வந்து விட்டது. இஃது அறிவியல் யுகம். உலகத்தோடு பொருந்தி வாழ்வதுதான் அறிவுடைமை என்பது வள்ளுவர் வாக்கு மாறன்.

6

7

மாறன் : (சிரிப்பு). மிகச் சரி, நான்தான் தற்குறியாய் இருந்துவிட்டேன் போலிருக்கிறது.

7

கலை : ஐயையோ...! நான் அப்படிச் சொல்லவில்லை. காலத்திற்கு ஏற்ப மாறிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிக் கூறினேன். அதுசரி வேலைக்கு நேரமாகிறது என்று சொன்னீர்களே! பணத்தையும் படிவத்தையும் கொடுங்கள் நான் செலுத்தி விடுகிறேன்.

மாறன் : மிக்க நன்றி கலை. உற்ற நேரத்தில் இடுக்கண் களையும் தங்கள் அன்புக்கு நன்றி.

கலை : அடடா...! சிறு உதவிதானே...! இதற்கெல்லாம் எதற்கு நன்றி?

8

மாறன் : சரி கலை, நான் விடைபெறுகிறேன். அடுத்த வாரம் மடிக்கணினியோடு வீட்டுக்கு வருகிறேன். மின்னனு வங்கிச் சேவையின் இயக்கத்தைச் செயல்முறையோடு விளக்குங்கள்.

8

கலை : நல்லது மாறன். அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்.

## வழிகாட்டிக் கட்டுரை 5

### கூட்டக் குறிப்பறிக்கை (அமைப்பின் கூறுகள்)

கூட்டக்குறிப்பறிக்கையைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டியவை:

1. கூட்டக்குறிப்பறிக்கை அமைப்பில் இருத்தல்
2. தலைப்பு எழுதியிருத்தல்
3. நடவடிக்கைககளைத் துணைத் தலைப்புகளில் எழுதியிருத்தல்
4. துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
5. ‘அறிக்கை தயாரித்தவர்’ எனும் சொற்றொடர் முடிவில் இருத்தல்
6. நாள் தகுந்த இடத்தில் எழுதப்பட்டிருத்தல்.
7. கையொப்பமும் செயலாளரின் முழுப்பெயரும் இருத்தல்
8. பதவியும் கழகமும் குறிக்கப்பட்டிருத்தல்

**கூட்டக் குறிப்பறிக்கை - சட்டகம்**

____________________________________________
____________________________________________ தலைப்பு/ கழகப் பெயர்

____________________
____________________
____________________ நாள்<br>நேரம்<br>இடம்

____________________
____________________
____________________
____________________
____________________ வருகையாளர்

____________________
____________________ வருகை தராதோர்

1.0
____________________________________________
____________________________________________ வரவேற்புரை

2.0
____________________________________________
____________________________________________ தலைவர் உரை

3.0 ______________________ கடந்த கூட்டக் குறிப்பறிக்கையை ஏற்றல்

4.0 ______________________ எழும் சிக்கல்

5.0 ______________________ விவாதிக்கப்பட்ட கருத்துகள்

6.0 ______________________ இதர தகவல்கள் (பொது)

7.0 ______________________ நன்றி நவில்தல்

அறிக்கை தயாரித்தவர்,

______________________, : ______________ நாள்

.............................................................. கையொப்பம்

( ) முழுப் பெயர்

______________________ பதவி

______________________ கழகம்

______________________ பள்ளிப் பெயர்

**எடுத்துக்காட்டுக் கூட்டக்குறிப்பறிக்கை**

தமிழ்மொழிக் கழகத்தின் செயலாளர் எனும் முறையில், அண்மையில் நடைபெற்ற உமது கழகத்தின் முதலாம் செயற்குழுக் கூட்டத்தைப் பற்றிய கூட்டக்குறிப்பறிக்கையத் தயார் செய்க.

| அமைப்பு | அறிக்கை | கருத்து |
|---|---|---|
| 1. தலைப்பு | **திருவள்ளுவர் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் முதலாவது செயற்குழுக் கூட்டக்குறிப்பறிக்கை** | |
| 2. நாள்/ நேரம்/ இடம் | நாள் : 1 பிப்ரவரி 2021 (திங்கட்கிழமை)<br>நேரம் : காலை மணி 10.00<br>இடம் : பள்ளி நடவடிக்கையறை | |
| 3. வருகை | **வருகை புரிந்தோர் :**<br>1. ம. அறிவழகன் (கழகத் தலைவர்)<br>2. அ. பூங்குன்றன் (துணைத் தலைவர்)<br>3. த. கனிமொழி (செயலர்)<br>4. மு. தேன்மொழி (பொருளர்)<br>5. ஐ. மதியழகன் (செயலவை உறுப்பினர்)<br>6. கு. குமரன் (செயலவை உறுப்பினர்)<br>7. ந. முகுந்தன் (செயலவை உறுப்பினர்)<br><br>**வருகை தராதோர் :**<br>1. சு. இளவேந்தன் (செயலவை உறுப்பினர்) – காரணத்துடன் | கருத்து 1 |
| 4. துணை தலைப்பு இருத்தல் | **1.0 வரவேற்புரை**<br>கழகச் செயலாளர் த.கனிமொழி இறைவாழ்த்து பாடி வருகைத் தந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இன்றைய கூட்டம் சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொண்டார். மேலும், வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறினார் | கருத்து 1 |
| 5. துணை தலைப்புக்கு எண்ணிட் டிருத்தல் | **2.0 தலைவர் உரைரை**<br>கழகத் தலைவர் ம.அறிவழகன் அனைவருக்கும் வணக்கம் கூறியதோடு மட்டுமல்லாமல் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய செயலவை உறுப்பினர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், இவ்வாண்டு திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற செயலவை உறுப்பினர்கள் சிறந்த முறையில் பங்கினை ஆற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டார். இறுதியாக, இக்கூட்டம் பயன்விளையும் வகையில் ஆக்ககரமான சிந்தனைகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். | கருத்து 2 |
| | **3.0 கூட்டக் குறிப்பறிக்கை ஆய்ந்தேற்றல்**<br>கடந்த கூட்டக் குறிப்பறிக்கை செயலர் வாசித்தார். செல்வன் ஐ. மதியழகன் முன்மொழிய செல்வன் கு.குமரன் வழிமொழிய மாற்றங்கள் ஏதுமின்றி முழுமனத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. | கருத்து 3 |
| | **4.0 கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விவரங்கள்**<br>செயலவைக் கூட்டத்தில் இந்த ஆண்டிற்கான நடவடிக்கைகள் கலந்து பேசப்பட்டது. செயலவைக் கூட்டத்தில் ஏகமானதாக முடிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு. | கருத்து 4 |

| | | |
|---|---|---|
| | **4.1 பொங்கல் விழா**<br>பொங்கல் விழா பிப்ரவரி இரண்டாவது வாரம் சனிக்கிழமை நடத்த முடிவு செய்யப்பட்டது. இம்முறை இவ்விழா மிகச் சிறப்பாக நடத்த முடிவு செய்யப்பட்டது. தமிழ் மாணவர்களைத் தவிர்த்து, பள்ளியில் பயிலும் மலாய் மற்றும் சீன மாணவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென துணைத் தலைவர் செல்வன் அ.பூங்குன்றன் ஆலோசனை வழங்கினார். இதன்வழி, பல்லின மாணவர்களும் நம் உன்னத விழாவினை ஆழமாக அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் ஒற்றுமையும் வலுப்பெறும் என்றார். அவருடைய கருத்து ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. | கருத்து 5 |
| | **4.2 கல்விச் சுற்றுலா**<br>இக்கூட்டத்தில் கழக உறுப்பினர்களிடையே பொது அறிவு வளர்க்கும் பொருட்டு சுற்றுலா ஒன்று அவசியம் மேற்கொள்ள வேண்டுமென செல்வன் ந.முகுந்தன் முன்மொழிந்தார். அவருடைய பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கோலாலம்பூர் மலாயா பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் தமிழ் நூலகத்திற்குச் செல்ல முடிவு செய்யப்பட்டது. இச்சுற்றுலா பள்ளி இடைப்பருவ விடுமுறையில் மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. | கருத்து 6 |
| | **4.3 போட்டிகள்**<br>மேலும், இக்கூட்டத்தில் மாணவர்களிடையே தமிழ்மொழி ஆற்றலை வளர்க்க போட்டிகள் நடத்த உறுதி செய்யப்பட்டது. அவை பேச்சுப் போட்டி, தமிழ்மொழிப் புதிர்ப் போட்டி, இலக்கிய புதிர்ப் போட்டி, வாசிப்புப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்த ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போட்டிகள் கீழ்ப்படிவம் மற்றும் மேல்படிவம் என இரண்டு பிரிவாக நடத்தப்படும். பங்கெடுத்த மற்றும் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழும் கோப்பையும் வழங்கப்படும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. | கருத்து 7 |
| | **4.4 பிரியாவிடை மற்றும் பரிசளிப்பு விழா**<br>ஆண்டிறுதி நிகழ்வாக படிவம் ஐந்து பயிலும் மாணவர்கள் கழகத்திற்கு ஆற்றிய சேவையைப் போற்றும் வகையில் பிரியாவிடை நிகழ்ச்சி பள்ளி மண்டபத்தில் செய்ய முடிவு செய்யப்பட்டது. மேலும், ஆண்டு முழுவதும் நடைபெற்றப் போட்டிகளுக்குப் பரிசுகள் வழங்கவும் பரிசளிப்பு விழா சிறப்பாக நடத்தவும் திட்டம் வகுக்கப்பட்டது. செயலவை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக தலைவர் முன் வைத்த நடவடிக்கையை ஏற்றுக் கொண்டனர். | கருத்து 8 |
| | **5.0 கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட இதர விவரங்கள்**<br>5.1 பள்ளி நூலகத்தில் குறைவான தமிழ்மொழி நூல்களே உள்ளன. தமிழ் நூல்கள் அதிகரிக்க கழகம் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டது.<br>5.2 அதிகமான மாணவர்கள் கழக நடவடிக்கைகளில் ஈடுபட, ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் அமைய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.<br>5.3 மேலும், கழகத்திற்கென தனி 'டி – சட்டை' வடிவமைத்து, அதனை அனைவரும் வாங்கி ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் அணிய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. | கருத்து 9 |
| | **6.0 நன்றியுரை**<br>இறுதியாக செயலரின் நன்றியுரையுடன் கூட்டம் காலை மணி 11.30க்கு இனிதே முடிவுற்றது. | |

| | | |
|---|---|---|
| 6.அறிக்கை தயாரித்தவர்<br><br>7.கையொப்பம் & முழுப்பெயர்<br>8. பதவி & கழகம் | அறிக்கை தயாரித்தவர், 4 பிப்ரவரி 2021<br><br>கனிமொழி<br>..........................................<br>(கனிமொழி த/பெ தமிழ்வேந்தன்)<br>செயலாளர்,<br>தமிழ்மொழிக் கழகம்,<br>திருவள்ளுவர் தேசிய இடைநிலைப்பள்ளி,<br>தைப்பிங். | 7. நாள் |

## வழிகாட்டிக் கட்டுரை 6

### செயலறிக்கை

உரையைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:

1 • செயலறிக்கை அமைப்பில் இருத்தல்.
2 • தலைப்பு எழுதப்பட்டிருத்தல்
3 • நடவடிக்கைகளைத் துணைத் தலைப்புகளில் எழுதியிருத்தல்
4 • துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
5 • அறிக்கை தயாரித்தவர் எனும் சொற்றொடர் முடிவில் இருத்தல்.
6 • நாள் தகுந்த இடத்தில் எழுதப்பட்டிருத்தல்.
7 • கையொப்பமும் செயலாளரின் முழுப்பெயரும் இருத்தல்.
8 • பதவியும், கழகத்தின் பெயரும் குறிக்கப்பட்டிருத்தல்

1. கழகம் /இயக்கம் / (Persatuan / kelab / badan beruniform)

2. இவ்வறிக்கையைக் கழகத்தின் செயலாளர் தயாரிப்பார்.

3. சிறிய அளவில் கொண்டாடப்படும் நிகழ்ச்சிகள் செயலறிக்கையாக எழுதவேண்டும். (Mikro)

4. நிகழ்ச்சிகள்:

**எடுத்துக்காட்டு**
தமிழ்மொழித் தேர்வு பயிலரங்கு
கல்விச் சுற்றுலா
தமிழ்மொழி வாரம்
பண்பாட்டு விழா
பொங்கல் விழா

5. திறப்புரை / சிறப்புரை:

**எடுத்துக்காட்டு**
பள்ளி முதல்வர்
பள்ளி ஆசிரியர்கள்
கழக ஆலோசகர்

**செயலறிக்கை - சட்டகம்**

தொடக்கம் ______________________________________________
______________________________________________
______________________________________________

1.0 துணைத் தலைப்பு
______________________________________________
______________________________________________
______________________________________________

2.0 துணைத் தலைப்பு
______________________________________________
______________________________________________
______________________________________________

3.0 துணைத் தலைப்பு
______________________________________________
______________________________________________
______________________________________________

4.0 துணைத் தலைப்பு
(முடிவு)______________________________________________
______________________________________________
______________________________________________

அறிக்கை தயாரித்தவர், நாள்:____________________

கையொப்பம்

.................................
(முழுப் பெயர்)
பதவி,
கழகம்,
பள்ளியின் பெயர்

**எடுத்துக்காட்டுச் செயலறிக்கை**

(1) **டாருல் ரிட்வான் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழக ஏற்பாட்டில் நடைபெற்ற உலகத் தாய்மொழி நாள் கொண்டாட்டச் செயலறிக்கை** (2)

**1.0 தொடக்கம்** (3) (4)

டாருல் ரிட்வான் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 21 பிப்ரவரி 2021 காலை மணி 8.30 முதல் 10.30 வரை பள்ளி மண்டபத்தில் உலகத் தாய்மொழி நாள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் நோக்கம் ஒவ்வொரு மாணவரும் தங்களின் தாய்மொழியை மதித்து போற்ற வேண்டும் என்பதே ஆகும். இந்நிகழ்ச்சியில் அனைத்து இந்திய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

**2.0 வரவேற்புரை** (3) (4)

தொடக்க நிகழ்வாக, இறை வணக்கம் இடம்பெற்றது. பிறகு, தமிழ்மொழிக் கழகச் செயலாளர், செல்வன் கவின் பிரபாகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் உலகத் தாய்மொழி நாள் கொண்டாட்டம் கொண்டாடுவதின் நோக்கத்தையும், அதன் பின்னணியையும் தெரிவித்தார்.

**3.0 தலைமையுரை** (3) (4)

தமிழ்மொழிக் கழகத்தின் ஆலோசகர் திரு. பார்த்திபன் சதாசிவம் அவர்கள் தலைமையுரையாற்றினார். இவ்விழா கொண்டாடப்படுவதன் முக்கியத்துவத்தையும் பல்லின மக்கள் வாழும் மலேசியாவில் தாய்மொழி தொடர்ந்து காக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் பற்றிப் பேசினார்.

**4.0 சிறப்புரை** (3) (4)

இவ்விழாவிற்குப் சிறப்பு வருகையாளரான பள்ளி முதல்வர் சிறப்புரை ஆற்றினார். இன்றைய காலக்கட்டத்தில் பல்லின மக்களில் குறிப்பாகச் சிறுபான்மை மக்களிடையே தாய்மொழி பயன்பாடு குறைந்து வருவதாகவும், இவ்வேளையில் இவ்வாறான நிகழ்ச்சிகள் தாய்மொழி அவசியம் எனும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று தமது உரையில் கூறினார். மேலும், இவ்வருமையான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த தமிழ்மொழிக் கழகத்திற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். தொடர்ந்து, விழாவினை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

**5.0 மாணவர் படைப்பு** (3) (4)

இவ்விழாவில் பல்லின மக்களின் தாய்மொழியைப் பிரதிபலிக்கும் வகையில் வெவ்வேறு தாய்மொழிகளைச் சார்ந்த மாணவர்கள் பள்ளியின் சுலோகத்தைத் தத்தம் மொழிகளில் முழங்கினர். மேலும், தாய்மொழி நாளை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் பங்குபெற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**5.0 முடிவு** (3) (4)

இறுதியாக, தமிழ்மொழிக் கழகத் துணைச்செயலாளர் செல்வி கவியாழினி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். காலை மணி 10.30க்கு இந்நிகழ்ச்சி ஒரு நிறைவை எய்தியது. வருகையாளர்கள் மகிழ்ச்சியாக விடைபெற்றனர்.

அறிக்கை தயாரித்தவர், 5

22 பிப்ரவரி 2021 6

**கவின்**
.....................................
(கவின் த/பெ பிரபாகரன்) 7
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம், 8
டாருல் ரிட்வான் தேசிய இடைநிலைப்பள்ளி.

## வழிகாட்டிக் கட்டுரை 7

### நிகழ்வறிக்கை (அமைப்பின் கூறுகள்)

உரையைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:

1. நிகழ்ச்சியறிக்கை அமைப்பில் இருத்தல்
2. தலைப்பு எழுதப்பட்டிருத்தல்
3. நிகழ்ச்சிகளைத் துணைத் தலைப்புகளில் எழுதியிருத்தல்
4. துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
5. அறிக்கை தயாரித்தவர் எனும் சொற்றொடர் முடிவில் இருத்தல்
6. நாள் தகுந்த இடத்தில் எழுதப்பட்டிருத்தல்
7. கையொப்பமும் செயலாளரின் முழுப்பெயரும் இருத்தல்
8. பதவியும் கழகமும் குறிக்கப்பட்டிருத்தல்

**நிகழ்ச்சியறிக்கை - சட்டகம்**

(தலைப்பு) ______________________________ | அறிக்கை தலைப்பு

1.0 தொடக்கம் | துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்

____________________________________________
____________________________________________
____________________________________________ | 1.0 அறிக்கை தொடக்கம்

2.0 துணைத் தலைப்பு | துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல் | 2.0 துணைத் தலைப்பு

____________________________________________
______________________ (கருத்து 1) ______________________ | கருத்து
____________________________________________

3.0 துணைத் தலைப்பு | துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல் | 3.0 துணைத் தலைப்பு

____________________________________________
______________________ (கருத்து 2) ______________________ | கருத்து
____________________________________________

7.0 அறிக்கை முடிவு | துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல் | 7.0 அறிக்கை முடிவு

(முடிவு)________________________________________
____________________________________________
____________________________________________

அறிக்கை தயாரித்தவர், நாள்:_______________ நாள்

கையொப்பம்

................................ கையொப்பம் & முழுப்பெயர் அறிக்கை முடிப்பு
(முழுப் பெயர்)
பதவி, பதவி & கழகம்
கழகம்,
பள்ளியின் பெயர்

**எடுத்துக்காட்டு நிகழ்ச்சியறிக்கை**

அண்மையில் உமது பள்ளி தமிழ்மொழிக் கழகம் மாவட்ட ரீதியில் தமிழ் விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்தது. அக்கழகத்தின் செயலாளர் என்ற முறையில் அந்நடவடிக்கை குறித்து நிகழ்ச்சியறிக்கை ஒன்றனைத் தயார் செய்க.

| அமைப்பு | நிகழ்ச்சியறிக்கை | கருத்து |
|---|---|---|
| 1. தலைப்பு | **பாரதி தேசிய இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிக் கழக ஏற்பாட்டில் நடைபெற்ற மாவட்ட ரீதியிலான தமிழ் விழா நிகழ்ச்சியறிக்கை** | |
| 2. தொடக்கம் (நாள்/நேரம்/ இடம்/ கலந்து கொண்டோர்) | **1.0 தொடக்கம்**<br>பாரதி தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 15 மே 2021 காலை 9.00 மணிக்குக் பாரதி தேசிய இடைநிலைப்பள்ளி மண்டபத்தில் மாவட்ட ரீதியிலான தமிழ் விழா மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் 150க்கும் மேற்பட்ட தைப்பிங் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி தமிழ் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராகத் தைப்பிங் தமிழ் மணிமன்றத்தின் தலைவர் திரு. தினகரன் அவர்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தார். | |
| 3. துணைத் தலைப்பு முதியிருத்தல் | **2.0 வரவேற்புரை**<br>சிறப்பு விருந்தினராக வந்த திரு. தினகரன் அவர்கள் குத்துவிளக்கேற்றி அதிகாரப்பூர்வமாக இவ்விழாவைத் தொடக்கி வைத்தார். இவ்விழாவின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் செல்வி மணிமாலா இறைவாழ்த்துப் பாடினார். அதன் பிறகு, பள்ளியின் படிநிலை ஐந்து மாணவர்களின் பரதநாட்டிய நடனம் அரங்கேற்றப்பட்டது. நடன அரங்கேற்றத்திற்குப் பின் செல்வி மணிமாலா வரவேற்புரை ஆற்றினார். | கருத்து 1 |
| 4. துணைத் தலைப்புக்கு எண்ணிட் டிருத்தல் | **3.0 தலைமையுரை**<br>இவ்விழாவின் நாயகரான ஆசிரியை திருமதி மதிவழகி அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில் இவ்விழாவின் நோக்கத்தைப் பற்றிப் பேசினார். அதில் அவர் தமிழின் சிறப்பையும் பண்பாட்டையும் மாணவர்கள் அறிவதோடு மட்டுமல்லாமல் மாணவர்கள் தங்களின் திறமையை வளர்த்துக் கொள்ளவும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். | கருத்து 2 |
| | **4.0 மேடைப் பேச்சு**<br>இவ்விழாவின் முதல் போட்டியாக மேடைப் பேச்சு பள்ளி நூலகத்தில் இடம் பெற்றது. இப்போட்டியில் வெவ்வேறு பள்ளிகளிலிருந்து 20 மாணவர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களின் ஆர்வம் இப்போட்டியில் மிகுந்து காணப்பட்டது. 'தமிழ்மொழியின் சிறப்பு' என்ற தலைப்பில் மாணவர்கள் பேசினர். பல பள்ளிகளிலிருந்து | கருத்து 3 |

| | | |
|---|---|---|
| 5. துணை தலைப்புக்கு எண்ணிட்டிருத்தல் | தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ஆசிரியர்கள் நடுவர்களாக தொனி, உச்சரிப்பு மற்றும் கருத்துகளுக்குப் புள்ளிகள் வழங்கினர். .<br><br>**5.0 கவிதை ஒப்புவித்தல்**<br>பள்ளியின் மற்றொரு மண்டபத்தில் கவிதை ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் படிவம் மூன்று முதல் ஐந்து வரையிலான 20 மாணவர்கள் பங்கெடுத்தனர். மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து தலைப்புகளிலிருந்து ஒரு தலைப்பைத் தேர்வு செய்து ஒப்புவித்தனர். இம்மாணவர்களுக்கு நடுவர்கள் படைப்பு, உச்சரிப்பு மற்றும் தொனி ஆகிய கூறுகளில் புள்ளிகள் வழங்கி வெற்றியாளரைத் தேர்வு செய்தனர். | கருத்து 4 |
| | **6.0 நாடகம்**<br>மேடைப் பேச்சு மற்றும் கவிதை ஒப்புவித்தல் போட்டி நிறைவடைந்த பின் நாடகப் போட்டி மீண்டும் பள்ளி மண்டபத்திலேயே வருகை புரிந்த அனைவரும் பார்த்து இரசிக்கும் வகையில் நடத்தப்பட்டது. இப்போட்டியில் மாணவர்களின் பங்கெடுப்பானது குழுவாக இருந்தது. ஒரு குழுவில் மொத்தம் பத்து மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நாடக அரங்கேற்றம் 'தமிழர் பண்பாடுகள்' என்ற தலைப்பையொட்டி நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் தங்களின் நடிப்புத் திறமையைச் சிறப்பாகக் கையாண்டு கைத்தட்டல்கள் பெற்றனர். | கருத்து 5 |
| | **7.0 முடிவு**<br>இறுதியாக, நடத்தப்பட்ட போட்டியின் வெற்றியாளர்களுக்குத் திரு. தினகரன் அவர்கள் கோப்பையும் நற்சான்றிதழும் வழங்கினார். திரு. தினகரனுக்கும் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தினார். துணைச் செயலாளரான செல்வி இளம்பாரதி சிறப்பு விருந்தினருக்கும் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். பிற்பகல் 2.30 மணிக்குத் தமிழ் விழா இனிதே நிறைவை எய்தியது. | 7. நாள் |
| 6.அறிக்கை தயாரித்தவர்<br><br>7.கையொப்பம் & முழுப்பெயர்<br>8. பதவி & கழகம் | அறிக்கை தயாரித்தவர், 27 மே 2021<br><br>மணிமாலா<br>..........................................<br>(மணிமாலா த/பெ தேவன்)<br>செயலாளர்,<br>தமிழ்மொழிக் கழகம்,<br>பாரதி தேசிய இடைநிலைப்பள்ளி, பேராக். | |

## வழிகாட்டிக் கட்டுரை 8

### ஆண்டறிக்கை

ஆண்டறிக்கையைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:

- ஆண்டறிக்கை அமைப்பில் இருத்தல்
- தலைப்பு எழுதப்பட்டிருத்தல் - கழகம், பள்ளி, ஆண்டு
- நடவடிக்கைகளைத் துணைத் தலைப்புகளில் எழுதியிருத்தல் (தொடக்கம் & நடவடிக்கைகள்)
- துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- ‘அறிக்கை தயாரித்தவர்’ எனும் சொற்றொடர் முடிவில் இருத்தல்
- நாள் தகுந்த இடத்தில் எழுதப்பட்டிருத்தல். (வலது பக்கம்)
- கையொப்பமும் செயலாளரின் முழுப்பெயரும் இருத்தல்
- பதவி, கழகம், பள்ளியின் பெயர் குறிக்கப்பட்டிருத்தல்

**ஆண்டறிக்கை - சட்டகம்**

______________________________ தலைப்பு/ கழகப் பெயர்

______________________________ தொடக்கம்

1.0 ____________________ கழக நடவடிக்கைகள்

1.1 ______________________________ நடவடிக்கை 1

______________________________

1.2 ______________________________ நடவடிக்கை 2

______________________________

1.3 ______________________________ நடவடிக்கை 3

______________________________

1.4 ______________________________ நடவடிக்கை 4

______________________________

1.5 ______________________________ நடவடிக்கை 5
______________________________

2.0 ______________________________ முடிவு
______________________________

அறிக்கை தயாரித்தவர், ________ நாள்

........................................................ கையொப்பம்
( ) முழுப் பெயர்
______________________ பதவி
______________________ கழகம்
______________________ பள்ளிப் பெயர்

**எடுத்துக்காட்டு அறிக்கை**

தமிழ்மொழிக் கழகத்தின் செயலர் எனும் முறையில், ஆண்டு முழுவதும் தமிழ்மொழிக் கழகம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆண்டறிக்கை ஒன்றனைத் தயார் செய்க.

| அமைப்பு | அறிக்கை | கருத்து |
|---|---|---|
| 1. தலைப்பு | **தமிழ்மொழிக் கழகம்,**<br>**துன் சம்பந்தன் தேசிய இடைநிலைப்பள்ளி**<br>**ஆண்டறிக்கை 2021** | |
| 2. தொடக்கம் | **1.0 தொடக்கம்**<br>துன் சம்பந்தன் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் 2001-ஆம் ஆண்டு இப்பள்ளி தொடங்கப்பட்டதிலிருந்து இயங்கி வருகிறது. 2021-ஆம் ஆண்டு தமிழ்மொழிக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்று நடத்தியது. கழக உறுப்பினர்கள் அந்நடவடிக்கைகளில் கலந்து கொண்டு தங்களின் வற்றாத ஆதரவை வழங்கினர். | |
| 3. துணைத் தலைப்பு முதியிருத்தல் | **2021-ஆம் ஆண்டு செயலவையினர் பட்டியல்**<br>2021-ஆம் ஆண்டு செயலவை உறுப்பினர்கள் பட்டியல் பின்வருமாறு:<br><br>ஆசிரியர் திரு.ம.அமுதன் (ஆலோசகர்)<br>மு. அறிவன் (தலைவர்)<br>த. கதிரவன் (துணைத் தலைவர்)<br>க. எழிலரசி (செயலர்)<br>அ. அன்பரசி (பொருளாளர்)<br>இ. எழிலன் (செயற்குழு உறுப்பினர்)<br>பு. பூவரசி (செயற்குழு உறுப்பினர்)<br>ம. இளவேந்தன் (செயற்குழு உறுப்பினர்) | கருத்து 1 |

| | | |
|---|---|---|
| 4. துணைத் தலைப்புக்கு எண்ணிட் டிருத்தல் | **2.0 கழக நடவடிக்கைகள்**<br>**2.1 பொங்கல் விழா**<br>12 பிப்ரவரி 2021-ஆம் நாள் பள்ளி அளவில் எல்லா இன மாணவர்களும் கலந்து கொண்ட பொங்கல் விழாவைக் கழகம் மிகச் சிறப்பாக நடத்தியது. இவ்விழாவைப் பள்ளியின் முதல்வர் திரு. கி.இளங்கோவன் அவர்கள் தொடக்கி வைத்தார். இப்பொங்கல் விழாவை முன்னிட்டு கோலம் போடுதல், கோலாட்டம், குழு முறையில் பொங்கல் வைத்தல், பாரம்பரிய உடையலங்காரப் போட்டி ஆகியவை நடைபெற்றன. | கருத்து 2 |
| | **2.2 கல்விச் சுற்றுலா**<br>கழகம் கடந்த 30 மார்ச் 2021 ஆம் நாள் மலாயா பல்கலைக்கழகத்திற்குக் கல்விச் சுற்றுலா ஒன்றனை மேற்கொண்டது. இச்சுற்றுலாவில் 40 மாணவர்களும் கழகப் பொறுப்பாசிரியர்கள் ஐவரும் கலந்து கொண்டனர். இச்சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. இதன்வழி, மாணவர்கள் தங்கள் மேற்கல்வியை தமிழ்த்துறையில் மேற்கொள்வதற்கு ஆர்வம் கொண்டனர். | கருத்து 3 |
| | **2.3 மொழி வாரம்**<br>பள்ளியின் மொழி வாரம் 5.7.2021 முதல் 9.7.2021 வரை நடத்தப்பட்டது. இம்மொழி வாரத்தில் புதிர்ப் போட்டி, கவிதை ஒப்புவித்தல், பேச்சுப் போட்டி, ஒரு மணித்துளி வாசிப்புப் போட்டி போன்ற போட்டிகளைத் தமிழ்மொழிக் கழகம் வெற்றிகரமாக நடத்தியது. இப்போட்டிகளில் தமிழ் மாணவர்கள் சுமார் 120 பேர் ஆர்வமாகக் கலந்து கொண்டு பயனடைந்தனர். | கருத்து 4 |
| | **2.4 தமிழறிஞர் சொற்பொழிவுகள்**<br>14.8.2021 அன்று தமிழறிஞர் இர.திருச்செல்வனார் 'மூலப்பெருந்தமிழ் மரபு' எனும் தலைப்பில் உரையாற்றினார். இச்சொற்பொழிவில் சுமார் 110 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி மாணவர்கள் தமிழ்ச்சான்றோர்களின் பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் தெரிந்து கொள்ள வழிவகுத்தது. இவ்விழாவில் ஐயா இர.திருச்செல்வனார் எழுதிய நூல் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகக் வழங்கப்பட்டது. | கருத்து 5 |
| | **3.0 முடிவு**<br>கழகம் ஏற்று நடத்திய அனைத்து நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதற்கு உதவிக்கரம் நீட்டிய கழக உறுப்பினர் அனைவருக்கும், துன் சம்பந்தன் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் ஆழிய நன்றிதனைத் தெரிவித்துக் கொண்டது. | |
| 5. அறிக்கை தயாரித்தவர்<br>6. நாள்<br>7. கையொப்பம் & முழுப்பெயர்<br>8. பதவி & கழகம் | அறிக்கை தயாரித்தவர், 30 அக்டோபர் 2021<br>......................................<br>(எழிலரசி த/பெ கபிலன்)<br>செயலாளர்,<br>தமிழ்மொழிக் கழகம்,<br>துன் சம்பந்தன் தேசிய இடைநிலைப்பள்ளி,<br>தைப்பிங் | |

## வழிகாட்டிக் கட்டுரை 9

### பிரியாவிடை உரை

பிரியாவிடை உரையைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:

1. • பிரியாவிடை உரை அமைப்பில் இருத்தல்.
2. • அவை விளிப்பு இருத்தல் (அவை வணக்கம் கூறுதல்)
3. • கருத்துப் பகுதியைத் தொடங்கும் முன்பு விளிப்பு இருத்தல் (காட்டு: அவையோர்களே..., மாணவமணிகளே..., பெற்றோர்களே...)
4. • பத்தி பிரித்து எழுதப்பட்டிருத்தல்.
5. • பிரியாவிடை உரைக்குரிய குறியீடுகளும் உணர்ச்சிகளும் வெளிப்பட்டிருத்தல்
6. • தலைப்பை வலியுறுத்தும் கருத்து இறுதிப்பத்தியில் இருத்தல்..
7. • முடிவு - விடைபெறுதல் இருத்தல்.
8. • நன்றி நவின்றிருத்தல்.

**பிரியாவிடை உரை - சட்டகம்**

படிவம் ஐந்து மாணவர்களுக்குப் பிரியாவிடை நிகழ்வு

(தலைமை மாணவர் உரை)

**முன்னுரை**
- விளிப்பு
  எ.கா : தலைமையாசிரியர், ஆசிரியர், சகமாணவ நண்பர்கள்
- வாய்ப்பு வழங்கியமைக்குப் பெருமிதம் அடைதல்.

**கருத்து 1**
- ஆசிரியரின் சிறப்பைக் கூறுதல். (பண்பு நலன்கள், திறமைகள்)
- ஆசிரியர் மாணவர்களுக்காகச் செய்த தொண்டினை விளக்குதல்.
- மாணவர்களின் அறியாமையைப் போக்கிய பொக்கீஷங்கள்.

**கருத்து 2**
- படிவம் 5 மாணவர்களின் பள்ளி வாழ்க்கையின் ஞாபகங்களை மீண்டும் நினைவு கூறுதல்.
- நண்பர்கள், படித்த வகுப்பறைகள், வெற்றிபெற்ற கோப்பைகள். குறும்புகள் பற்றி கூறுதல்.

**கருத்து 3**
- மாணவர்கள் கற்றுக்கொண்ட படிப்பினைகள், திறமைகள்
- வாழ்க்கையை மேற்கொள்ள பெற்ற கல்வி
- தேர்ச்சி விவரம், செய்த தவறுகள், திருந்திய விதம்.

**கருத்து 4**
- எதிர்பார்ப்பு
- வாழ்வில் வெற்றிபெற வாழ்த்துகள் மற்றும் சிறந்து விளங்குதல்.

**கருத்து 5**

- மாணவர்கள் நன்றியைத் தெரிவித்தல்.
- உறுதிப்பூண்டல்
- ஆசீர்வாதம் பெறுதல்.

**முடிவுரை**

- ஆசிரியர்கள் மென்மேலும் சிறப்பாகப் பணியாற்றிட இறைவனைப் பிரார்த்தித்தல்.
- விடைபெறுதல்

**எடுத்துக்காட்டுப் பிரியாவிடை உரை**

1 **பிரியாவிடை உரை**

2

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைமையாசிரியர் அவர்களே, துணைத் தலைமையாசிரியர் அவர்களே, ஆசிரிய ஆசிரியைகளே, எங்கள் அன்பிற்குப் பாத்திரமான எங்கள் வகுப்பாசிரியர் திருமதி தேவசேனா அவர்களே, என் சக மாணவ நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என் இருகரம் கூப்பி வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன். இன்று நாம் நமது பள்ளியிலிருந்து விடைபெறும் நாள். அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இப்பிரியாவிடை நிகழ்வில் ஓரிரு வார்த்தைகள் கூற வாய்ப்புக் கிடைத்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்தாண்டுகள் இப்பள்ளியில் பயின்று நமது அடுத்தக்கட்ட வாழ்க்கைக்குச் செல்லவிருக்கிறோம். 4

என் அன்பு நண்பர்களே! 3

இது நமது வரலாற்றில் மறக்க முடியாத ஒருநாள். கண்ணிரோடு விடை கொடுக்கும் நாள். ஐந்தாண்டுகள் இப்பள்ளியில் பயின்று, நமது அடுத்தக்கட்ட வாழ்க்கைக்குச் செல்லவிருக்கும் நாம், ஆசிரியர்களை மட்டுமா விட்டுப் பிரிகிறோம்? நமது நண்பர்களையும் பிரிகிறோம். நமது நண்பர்கள் நிறையபேர் உயர்நிலை கல்விக்கும், வேலைக்கும் ஆங்காங்கே செல்லவிருப்பீர். தங்களை இனிமேல் சந்திக்க முடியுமா என்றுகூட தெரியாது. அதனால்தான் இன்று மறக்க முடியாத நாள் என்று கூறினேன். நமக்கு ஐந்தாண்டுகள் கல்வி போதித்த ஆசிரியர்களை விட்டுப்பிரிவது, மனதைக் கலங்கச் செய்கிறது. 4

எங்கள் அன்பு ஆசிரியர்களே! 3

ஒரு வெற்றுத் தாளாய் இப்பள்ளியில் காலடி எடுத்துவைத்தோம். அந்த நாளை நினைத்துப் பார்க்கின்றேன். தொடக்கப் பள்ளி முடிந்து ஒரு புதிய உலகத்திற்கு வந்த எங்களை ஒரு தாயாய், தந்தையாய், சகோதரர்களாய் நீங்கள் எங்களை அரவணைத்தது எங்கள் கண்களில் நீரை வரவழைக்கிறது. இந்த வெற்றுத்தாள் ஒரு புத்தகமாய் வெளியேற நீங்கள் ஆற்றிய பங்கு சொல்லலாகாது. எங்கள் கல்விக் கண்களைத் திறந்து வைத்த தெய்வங்கள் நீங்கள். நீங்கள் பாய்ச்சிய இந்த அறிவு வெளிச்சம் காலந்தோறும் எங்களை வழிநடத்தும். எஸ்.பி.எம். தேர்வில் நாங்கள் சிறப்புத் தேர்ச்சி பெறவேண்டுமென்று நீங்கள் அல்லும் பகலும் பாடுபட்டதை எங்களால் மறக்க இயலுமா? எங்களின் அறியாமையைப் போக்கி, அன்புடன் கலந்த கண்டிப்பை 5 வழங்கிய உங்களை நாங்கள் அவ்வளவு எளிதில் மனதை விட்டு விலக முடியுமா? உங்கள் உழைப்புக்கு ஏற்றபடி எங்கள் வாழ்க்கையில் நாங்கள் வெற்றிப் பெறுவோம் என்பதை இவ்வினிய வேளையில் உறுதியாய் கூறுகிறோம். 4

சக மாணவ மாணவிகளே! 3

நமது இந்த ஐந்தாண்டு பயணங்கள் நமக்கு நிறைய ஞாபங்களை வழங்கிருக்கும். நாம் அனைவரும் இப்பள்ளியில் ஐந்தாண்டு காலங்கள் ஒன்றாகக் கடந்திருக்கின்றோம். சிலர் தொடக்கப்பள்ளியிலிருந்தே இடைநிலைப்பள்ளிவரை ஒன்றாகவே படித்திருப்பீர்கள். அப்படிப்பட்ட நட்பைப் பிரிய வேண்டும்

என்று நினைக்கையில் என் மனம் கலங்குகிறது. இப்பள்ளியில் உள்ள அனைத்துச் சுவர்களிலும் இடங்களிலும் நமது கை, கால் தடம் மற்றும் நம்முடைய பேச்சொலிகள் பதிந்திருக்கும். நாம் அனைவரும் ஒன்றாகப் படித்த வகுப்பறை நமது சுக துக்கங்களை ஞாபகப்படுத்தும். அந்த வகுப்பறையில் ஒன்றாகப் படித்து, சிரித்தது அனைத்தையும் மறக்க முடியுமா? வகுப்பறையை அழகுபடுத்த நாம் ஒன்றாகச் செய்த நடவடிக்கைகளும் அதற்காகப் பெற்ற கோப்பைகளையும் நினைக்கும் பொழுது மனம் மலர்போல் பூக்கின்றது. இப்பள்ளி முழுவதும் நம் ஞாபகங்கள் நிறைந்திருப்பதுபோல, நம் மனத்தில் அது நீங்கா நினைவுகளாய் நிறைந்திருக்கும்.

4

என் தோழர்களே! 3

நாம் இப்பள்ளியை விட்டு எங்குச் சென்றாலும் இப்பள்ளியும் இப்பள்ளி ஆசிரியர்களும் நம் மனத்தில் என்றென்றும் நிலைத்திருப்பர். அவர்கள் நமக்குக் காட்டிய நன்னெறிப்பண்புகளையும் படிப்பினைகளையும் மறக்கக்கூடாது. இப்பள்ளியில் நாம் கற்ற பாடங்களை நன்முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறவேண்டும். எங்குச் சென்றாலும் நம் பள்ளிக்கும் ஆசிரியர்களுக்கும் நற்பெயரைச் சேர்க்கவேண்டும். நாம் அனைவரும் எஸ்.பி.எம். தேர்வில் சிறந்த தேர்ச்சிப் பெறவேண்டும் என்பதற்காக உழைத்த ஆசிரியர்களுக்குப் பரிசாகத் தேர்வில் நன்மதிப்பைப் பெற்று உயர்நிலைக்கல்விக்குச் செல்லவேண்டும்.

4

என் அன்பிற்கினிய நண்பர்களே! 3

உங்கள் தோழனாக நான் எதிர்பார்ப்பது ஒன்றுதான். நாம் அனைவரும் வாழ்வில் முன்னேற வேண்டும். எதிர்க்காலத்தில் நல்ல நிலைமைக்கு வந்து, சமூகத்திற்கும் நாட்டிற்கும் நம் பள்ளிக்கும் நமது சேவைகளை வழங்க வேண்டும். இனித்தொடந்து நாம் அனைவரும் சுயமாகச் சமூகத்தை எதிர்நோக்கப் போகிறோம். போகின்ற பாதையில் நிறைய மேடு பள்ளங்களையும் நன்மை தீமைகளையும் சந்திப்போம். அதை அனைத்தையும் தாண்டி நாம் முன்னே செல்ல வேண்டும். நீங்கள் அனைவரும் வாழ்வில் வெற்றிப்பெற நான் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4

ஆசிரியர்களே! 3

இப்பள்ளியில் நாங்கள் பயின்ற காலத்தில் எங்களை அறியாமல் பல தவறுகள் செய்திருக்கலாம். நாங்கள் அறிந்தோ அறியாமலோ உங்கள் மனதைப் புண்படுத்தியிருக்கலாம். அதற்காக இவ்வேளையில் மாணவர்களின் சார்பில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை நாங்கள் செய்த 6 தவறுகளைப் பொறுத்து, எங்களை நல்வழிப்படுத்திய உங்களுக்கு நாங்கள் இருகரம் கூப்பி நன்றி தெரிவிக்கிறோம். இறுதியாக, இப்பள்ளி ஆசிரியர்களாகிய நீங்கள் மென்மேலும் சிறப்பாகப் பணியாற்றி சிறந்த மாணவர்களை உருவாக்க இறைவன் அருள் புரிவாராக! இத்துடன் 7 என் உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம். 8

## வழிகாட்டிக் கட்டுரை 10

### பாராட்டுரை

பாராட்டுரையைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:

1 • பாராட்டுரை அமைப்பில் இருத்தல்.

2 • அவை விளிப்பு இருத்தல் (அவை வணக்கம் கூறி வரவேற்றுப் பேசி இருத்தல்)

3 • ஒவ்வொரு கருத்துப்பகுதி தொடங்கும் முன்பு விளிப்பு இருத்தல். (எடுத்துக்காட்டு: அவையோர்களே..., மாணவ மணிகளே..., பெற்றோர்களே...)

4 • பத்தி பிரித்து எழுதப்பட்டிருத்தல்.

5 • பாராட்டு உரைக்குரிய குறியீடுகளும் உணர்ச்சிகளும் வெளிப்பட்டிருத்தல்.

6 • தலைப்பை வலியுறுத்தும் கருத்து இறுதிப்பத்தியில் இருத்தல்.

7 • முடிவு - விடைபெறுதல் இருத்தல்.

8 • நன்றி நவின்றிருத்தல்.

### பாராட்டுரை - சட்டகம்

**தொடக்கம்**

அவை விளிப்பு : அவைத் தலைவருக்கு நன்றியும் வணக்கமும் கூறுதல்; அவையோருக்கு வணக்கம் கூறுதல்.

---

**கருத்து 1** : **இடை விளிப்புடன் தொடங்கி**, சிறந்த செயற்பாடுகளுக்குப் பாராட்டு வழங்குதல்.

---

**கருத்து 2** : **இடை விளிப்புடன் தொடங்கி**, சிறப்புகளைக் குறிப்பிடுதல்.

---

**கருத்து 3** : **இடைவிளிப்புடன் தொடங்கி**, கடுமையான உழைப்புகளைப் போற்றுதல்.

---

**கருத்து 4** : **இடை விளிப்புடன் தொடங்கி**, இன்னும் வெற்றிப்பெற வாழ்த்துதல்; மகிழ்ச்சி உணர்வை வெளிப்படுத்துதல்

---

**முடிவு** : **விளிப்புடன் தொடங்கி**, மேன்மேலும் சிறப்புப்பெற வாழ்த்தி விடைபெறுதல்; நன்றி நவின்றிருத்தல்.

---

**எடுத்துக்காட்டுப் பாராட்டுரை**

1

**பாராட்டுரை : சாதனைச்சுவடு**

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

2 பெரு மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, மலேசியத் தமிழ் இளைஞர் கழகத்தின் தலைவர் அவர்களே, இப்பாராட்டு விழாவின் நாயகன் அன்புமிகு தமிழ்க்கதிர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் இவ்வினிய வேளையில் முத்தான முத்தமிழ் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3 அவையோரே,

தமிழ்க்கதிர் அவர்களை வாழ்த்திப் பேச வாய்ப்பளித்தமைக்கு ஏற்பாட்டுக் குழுவினருக்கு உளமார்ந்த பாராட்டுதலையும் நன்றிதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்க்கதிர் அவர்கள் தமது உயர்க்கல்வியை அமெரிக்காவில் முடித்தவர். அமெரிக்கப் பொறியியல் பல்கலைக்கழகத்தில் முதல் நிலையில் தேர்ச்சிப் பெற்றவர் என்பது பாராட்டத்தக்கது. மேலும், இவர் அப்பல்கலைக்கழகத்திலேயே முனைவர் பட்டப்படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று அறிகையில் உள்ளம் பேருவகை கொள்கின்றது. என் மாணவரொருவர் இத்தகைய உயரிய நிலையை அடைந்திருப்பது பேரானந்தத்தை என்னுள் ஏற்படுத்துகிறது. 4

3 சபையோரே,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

என்பது வான்புகழ் வள்ளுவரின் திருவாக்கு, அவ்வாக்கினுக்குச் சான்றாய் நம் முன்னே அடக்கத்துடன் அமர்ந்திருக்கிறார் தமிழ்க்கதிர் அவர்கள். தாய் தந்தையர்க்குப் பெருமை சேர்த்திருக்கிறார் என்பதை நான் சொல்லி அறிய வேண்டியதில்லை. இடைநிலைப்பள்ளியில் பயிலும்போது கல்வியில் அதிக நாட்டமில்லாதவராய்த் தமிழ்க்கதிரை நான் முதலில் கண்டது கட்டொழுங்கு அறையில்தான் என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஏட்டுக் கல்வியில் நாட்டம் மிகக் குறைவாக இருப்பதாகவும் வகுப்பறைக் கற்றலில் தம்மால் ஈடுபட முடியவில்லை என்றும் என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார். அஃது ஒரு நாள். 4

3 அவையோரே,

அவரிடம் நான் சொன்னதெல்லாம் ஒன்று தான், "தொழிற்கல்வி வாய்ப்புகள் நம் நாட்டில் நிறைய உள்ளன. அதன்வழி நீ பெருமளவில் சாதிக்கும் வாய்ப்புகளும் உள்ளன. ஆனால், அதற்கு அடிப்படை, படிவம் ஐந்து கல்வியை நீ முடித்திருக்க வேண்டும். படிவம் ஐந்து கல்வியில் அடிப்படைத் தேர்ச்சிப் பெற்றுவா! பிறகு பார்க்கலாம்," என்றேன். இப்பொழுது நான் மட்டுமல்லன்; இவ்வுலகமே இவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இவர் சாதனையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அவரை மனதாரப் பாராட்டுவதில் பெருமை அடைகிறேன். 5

3 அவையினரே,

'வெற்றி வேண்டுமா? முயற்சி செய்; இல்லையேல் பயிற்சி செய்!' என்பர். தமிழ்க்கதிர் அவர்கள் விடா முயற்சியும் தொடர் பயிற்சியும் செய்து மிகப்பெரிய வெற்றியை ஈட்டியுள்ளார். இவர் ஒழுக்கம், அடக்கம், பணிவு என எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்குபவர். இன்று நம் அனைவருக்கும் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார். இவருக்கு இது வெறும் தொடக்கமே. இவர் அடையவேண்டிய உச்சம் இன்னும் இருக்கிறது. அவ்வுச்சத்தை நிச்சயம் இவர் அடைவார்;
6 அடைய வேண்டுமென்று இறைவன் திருவருளை வேண்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

7 8

## வழிகாட்டிக் கட்டுரை 11

### உரை

உரையைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை :

1 • உரை அமைப்பில் இருத்தல்
2 • அவை விளிப்பு இருத்தல். (அவை வணக்கம் கூறுதல்)
3 • கருத்துப் பகுதியைத் தொடங்கும் முன்பு விளிப்பு இருத்தல்
(எ.கா: அவையோர்களே..., மாணவ மணிகளே..., பெற்றோர்களே...)
4 • பத்தி பிரித்து எழுதப்பட்டிருத்தல்
5 • உரைக்குரிய குறியீடுகளும் உணர்ச்சிகளும் வெளிப்பட்டிருத்தல்
6 • தலைப்பை வலியுறுத்தும் கருத்து இறுதிப்பத்தியில் இருத்தல்
7 • முடிவு – விடை பெறுதல் இருத்தல்
8 • நன்றி நவின்றிருத்தல்.

### உரை - சட்டகம்

| | | |
|---|---|---|
| 1. | அவைத் தலைவரை வணங்குதல் | அவைத்தலைவர் அவர்களுக்கு வணக்கம் |
| 2. | அவை விளிப்பு | தலைமை ஆசிரியர் அவர்களே!<br>ஆசிரியர் பெருமக்களே!<br>பெற்றோர்களே!<br>மாணவர்களே!<br><br>**குறிப்பு:**<br>**விளித்தல்கள் பதவி அடிப்படையில் வரிசைக்கிரமமாக அமைய வேண்டும்.** |
| 3. | முகமன் கூறுதல் | ஆகிய அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>**(மேற்சொன்னவர்களுக்கு வணக்கம் கூறுதல்)** |
| 4. | தலைப்பு அறிமுகம் | நான் இங்கே பேச வந்துள்ள தலைப்பு... |
| 5. | தலைப்பை ஒட்டிய கருத்துகள் | கொடுக்கப்பட்ட கருத்துகள். |
| 6. | இடைவிளித்தல் | **சூழலுக்குத் தகுந்தவாறு**<br>அவையோர்களே!<br>சபையோர்களே!<br>மாணவர்களே!<br>ஆன்றோர்களே!<br>பெற்றோர்களே!<br>ஆசிரியர்களே!<br>தோழர்களே!<br>**ஏற்ற இடைவிளித்தல்களைத் தெரிவு செய்க.** |

| | | |
|---|---|---|
| 7. | முன்னிலை கூற்று / தன்மை கூற்று (சூழலுக்குத் தகுந்தவாறு) | இதை நீங்கள் அறிவீர்கள்தானே? / நான், நாம், நாங்கள் |
| 8. | நன்றி | பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி. இதுவரை உரையைக் கேட்டமைக்கு நன்றி. |
| 9. | முடிவுரை | அனைவருக்கும் வணக்கம் கூறி விடைபெறுகிறேன் |

**எடுத்துக்காட்டு உரை**

(1) **உரை - ஆரோக்கிய வாழ்வின் அவசியம்**

(5) (2)

(4) மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியப் பெருந்தகைகளே, மாணவ மணிகளே! உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கில், வடகிந்தா மாவட்ட கல்வி அதிகாரியான நான் 'ஆரோக்கிய வாழ்வின் அவசியம்' எனும் தலைப்பில் உரையாற்ற வந்துள்ளேன்.

மாணவ மணிகளே, (3)

(4) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது வார்த்தை அலங்காரத்திற்காக மட்டும் சொல்லப்படும் பழமொழியல்ல. முற்றிலும் அர்த்தமுள்ள, பொருள் பொதிந்த முதுமொழியாகும். ஒருவர் என்னதான் கல்வி, செல்வம் முதலியவற்றைப் பெற்றிருந்தாலும் உடல் நலத்தோடும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வது மிகவும் முக்கியமாகும். இல்லாவிட்டால் நாம் எவ்வளவுதான் செல்வம் பெற்றிருந்தாலும் அந்தச் செல்வத்தை அனுபவிக்கக்கூடிய மனநிலையைப் பெற்றிருக்க முடியாது. மாறாக எந்நேரமும் கவலையும் வைத்திய செலவும்தான் ஏற்படும். ஆகவேதான் உடல் ஆரோக்கியமே அனைத்திலும் முக்கியம் வாய்ந்தது என்கிறோம்.

மாணவச் செல்வங்களே! (3) (5)

(4) உடல் நலத்துடன் கூடிய வாழ்வு பலகோடி மதிப்புடைய சொத்துக்குச் சமமானது. அதனை நோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் கேட்டால் அனுபவித்துச் சொல்வர். ஆகவே தான் உடல் ஆரோக்கியம் என்பது மிகமிக முக்கியமாகக் கருதப்படுகிறது. "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்" என்பதற்கேற்ப நாம் எவ்வளவு திறமைப்படைத்திருந்தாலும், உடல் நலத்தோடு இருந்தால்தான் அதை வெளிப்படுத்த முடியும். ஆகவே, நாம் நம் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். அதற்கு நல்ல உணவு பழக்கமும், உடற்பயிற்சியும், நெறிமிக்க வாழ்க்கை முறையும் இன்றியமையாததாகும்.

மாணவ மணிகளே, (3)

(4) இளவயது பருமன் என்பது ஒரு நோயாகவே உருவெடுத்துவிட்டது. ஆகவே, நல்ல உணவுப் பழக்கமே இதனை வராமல் தடுக்கச் செய்யமுடியும்.

மாணவர்களே! (3) (5)

(4) நீங்கள் கண்ட நேரத்தில் உண்பதையும், அதிகமாக வெளியே உண்பதையும் தவிர்க்க வேண்டும். பொறித்த உணவுகள், துரித உணவுகள் மற்றும் குளிர்பானங்கள் இவைகளும் ஆரோக்கிய வாழ்வுக்குக் கேடு விளைவிப்பதாகும். ஆகவே நாம் நல்ல ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை என்றும் கைக் கொள்ள வேண்டும். நம் முன்னோர்கள் உண்ட ஆரோக்கியமான பாரம்பரிய உணவுகளும், சிறு தானியவகைகளான கொள், கேழ்வரகு, எள், பயிறுவகைகள் மூலம் சமைக்கப்பட்ட

உணவு வகைகளும் இப்போது புழக்கத்தில் வந்துள்ளது. அவற்றை நாம் விரும்பி உணவில் சேர்க்க வேண்டும்.

மாணவ செல்வங்களே! 3 5

4 மேற்கத்திய உணவு வகைகளுக்குச் சிறிது சிறிதாக நாம் விடை கொடுக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நோய்களுக்கும் விடை கொடுக்கலாம். அதைப்போலவே உரம், பூச்சி மருந்தில்லா காய்கறிகளைச் சிறிய இடம் கிடைத்தாலும், அல்லது தொட்டிகளிலோ அவரவர் வீட்டிற்குத் தேவையானதைப் பயிர் செய்ய வேண்டும். இது பணத்தையும் 4 மிச்சப்படுத்தும். ஆரோக்கியமான காய்கறிகள் கிடைப்பதோடு நல்ல உடற்பயிற்சியும் ஆகிவிடும். இவையெல்லாம் ஆரோக்கிய வாழ்க்கைக்கு அடித்தளமாகும்.

மாணவ மாணவிகளே! 3 5

4 அடுத்து உடற்பயிற்சியும் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். உடற்பயிற்சி உடல் நலத்தையும், மனநலத்தையும் ஒருசேர தரவல்லது. ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் உடற்பயிற்சி செய்வதில் இருந்து தவறக்கூடாது. வாழ்க்கையின் அன்றாட ஓர் அம்சமாக உடற்பயிற்சியைக் கொள்ளவேண்டும். அதைப்போலவே உடல் ஆரோக்கியத்திற்கு நல்ல பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நெறிகள் முக்கியமானது. புகைப்பிடித்தல், மது, போதைப்பொருள், இவற்றிற்கு வாழ்வில் தடை விதிக்க வேண்டும். நல்ல பயனுள்ள பொழுதுப்போக்கு, நட்பு வட்டாரம் மனமகிழ்வைக் கொடுக்கும். செய்யும் எதையும் ஈடுபாட்டோடு செய்ய வேண்டும். அப்போதுதான் மன அழுத்தம் இல்லாமல் இருக்கும். எதற்கும் கவலைப்படக் கூடாது. 'மனக்கவலை பலக்குறைவு' அது பற்பல வியாதிகளுக்கு வழிவகுக்கும். ஆகவே எல்லாவற்றையும், "இதுவும் கடந்துபோகும்" என்று தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். கோபம், பொறாமை போன்ற எதிர்மறை எண்ணங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

அன்பான மாணவர்களே! 3 5

4 இவ்வாறு ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, ஒழுக்கமுள்ள வாழ்க்கை முறை, மகிழ்வான சூழல் ஆகியவை ஆரோக்கிய வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது; முதன்மையானது. தூய்மையான சுற்றுச்சூழலும் ஆரோக்கிய வாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாகும். தனிமனித ஆரோக்கியம், ஒரு நாட்டின் ஆரோக்கியத்திற்கு வித்திடுகிறது. இதனால் நாடு தேவையில்லாத வைத்தியத்திற்குச் செலவு செய்யாமல் நல்ல காரியங்களுக்குச் செலவு செய்யலாம். ஆரோக்கியமான மக்கள் நாட்டின் தொழிலாளர்களின் தேவையைப் பூர்த்திச் செய்வர். மனமகிழ்ச்சியுடன் வாழும் மக்கள் சாதிப்பது நிறைவாக இருக்கும்.

ஆகவே மாணவர் செல்வங்களே! 3 5

6

4 இவ்வாறு நமது வாழ்க்கையை ஆரோக்கியமாக வைத்திருந்தால், நமது வாழ்க்கை இனிமை நிறைந்ததாக இருக்கும். நோய்கள் இன்றி சாதிக்க வேண்டிய லட்சியங்களையும் சாதிக்கலாம் என்றால் அதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆகவே ஆரோக்கியமான வாழ்க்கையே நமக்கு மிகவும் அவசியம் என்று வலியுறுத்தி, இதுவரை எனது உரையைச் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்க

7 8

தமிழ்மொழி தாள் 1

# பிரிவு ஆ :

# திறந்தமுடிவுக் கட்டுரை

## திறந்தமுடிவுக் கட்டுரை 1

### கருத்து விளக்கக் கட்டுரை

இடைநிலைப்பள்ளி , தர ஆவணம் படிவம் 5
3.4.29 - 250 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.
(தேர்வு வாரியம் 300 சொற்கள் எழுதும்படி முன்வைத்துள்ளது)

- கருத்து விளக்கக் கட்டுரையை அணுகும் போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:

  1. கருத்து விளக்கக் கட்டுரை ஒரு சொல் தலைப்பு என்று மாணவரிடையே அறியப்பட்டுவருகின்றது. ஆனால், தலைப்பு ஒரு சொல்லாகவோ சொற்றொடராகவோ இடம் பெறலாம்.

  2. இத்தலைப்பு மாணவர்கள் பல கூறுகளில் அணுகலாம்.

  3. இதன் தலைப்பை விளக்குதல் நலம்.

  4. கருத்துகளை நிறுவிச் செல்வதில் முதிர்ச்சியையும் தனித்தன்மையையும் நிலைநாட்ட வேண்டும்.

  5. பத்திகளுக்குரிய கட்டமைப்பில் இருக்க வேண்டும்.
     (கருத்து, துணைக்கருத்து/விளக்கம், சான்று, முடிபு)

**எடுத்துக்காட்டுக் கருத்து விளக்கக் கட்டுரை**

### சேமிப்பு

'சேமிப்பு இல்லாத குடும்பம், கூரையில்லாத வீடு' என்கின்றது முதுமொழி. தற்காலத்தில், பணம், மழை நீர், மின்சாரம், உணவுப் பொருள், நேரச் சேமிப்புப் போன்றவை நமது அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகிறது. எனவே, சேமிப்பு எனும் நல்லதொரு பழக்கத்தை நாம் உள்வாங்கிக் கொண்டால் எண்ணிலடங்கா நன்மைகள் அடைவது திண்ணம்.

பெற்றோரின் சேமிப்புப் பணம் தங்கள் பிள்ளைகள் தரமான மேற்கல்வியைப் பெறுவதற்குப் பெரிதும் உதவுகிறது. தனியார்க் கல்லூரிகளிலோ வெளிநாடுகளிலோ பிள்ளைகள் மேற்கல்வியைத் தொடங்குவதற்கு இவர்களின் சேமிப்புப் பணம் பெருந்துணைபுரிகின்றது. அதிக வட்டியுடன் கூடிய கடனுதவி பெறாமல் தங்கள் சேமிப்புப் பணத்தைக் கொண்டு பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விச் செலவைச் சமாளிக்க முடியும். எடுத்துக்காட்டாக, படிவம் ஐந்து தேர்வுக்குப் பின் அரசாங்கக் கல்லூரிகளில் விரும்பிய துறைகளில் பயில வாய்ப்புக் கிட்டாத மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விரும்பும் துறைகளில் அவர்களைப் படிக்க வைக்கலாம். இது அவர்கள் சேமித்திருந்தால் மட்டுமே சாத்தியமாகும்.

மேலும், நமக்கு ஏற்படும் மருத்துவச் செலவுகளுக்கு உற்ற தோழன் சேமிப்பு எனில் மிகையில்லை. சுய சேமிப்பு மற்றும் காப்புறுதிச் சேமிப்புப் பணம் இருப்பின், பிறரிடம் கையேந்தாமல் சுயமாகவே சிகிச்சை பெறலாம். இன்றைய சூழலில் அநேகர், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதையே விரும்புகின்றனர். இதற்காக அவர்கள் அதிக கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. இத்தகு சூழலில் சுய சேமிப்பு இல்லாதவர்கள் கடன் வாங்கும் நிலை ஏற்படும். மேலும், தங்களிடம் இருக்கும் சொத்துகளை அடைமானம் வைத்து சிகிச்சைக்கான கட்டணத்தைச் செலுத்த

வேண்டியுள்ளது. எனவே, 'வருமுன் காப்போம்' என்பதற்கொப்ப சேமிப்பை அனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், ஒருவர் பணத்தைச் சேமிப்பதன் வழி, சொத்துடைமைகளைப் பெருக்கிக் கொள்ளலாம். உதாரணத்திற்கு, சேமிக்கும் பழக்கம் கொண்டவர் அதிகமான வங்கிக்கடன் அல்லது கடன் பெறாமலே தன் சேமிப்புத்தொகையைப் பயன்படுத்திச் சொந்த வீடு, நிலம், வாகனங்கள் போன்றவற்றை வாங்கி வாழ்வாதாரத்தை வளப்படுத்திக் கொள்ளலாம். இதன்வழி அவர்களின் அடுத்த தலைமுறை கடனில்லாமல் பல சொத்துடைமைகளப் பெற்றுச் சிறப்பான ஒரு வாழ்க்கையை வாழ வழிகோலலாம். 'சேமிப்பு நாட்டைக் காக்கும்' என்பது போல் மக்களின் சொத்துடைமையானது நாட்டின் பொருளாதாரத்தையும் வளப்படுத்தவல்லது.

பணத்தை மட்டுமல்லாமல் நீர், மின்சாரம் போன்றவற்றையும் நாம் சேமிக்கப் பழக வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்வில் இவற்றை முறையாகச் சேமிக்கப் பழகாவிட்டால் வீண் விரயம் ஏற்படுவதோடு பண விரயமும் ஏற்படும். இந்த வீண் விரயத்திற்கு மாதம் மாதம் பண செலவு ஏற்படுவதோடு மட்டுமின்றி நம்மால் திட்டமிட்டபடி சேமிப்பை மேற்கொள்ள இயலாது. நீர், மின்சாரக் கட்டண உயர்வைத் தடுப்பதற்கு முறையான திட்டமிடுதல் அவசியமாகிறது. பயன்படுத்திய பிறகு நீர் குழாயை முறையாக அடைப்பது, பொது நீர்க் குழாயில் நீர் வெளியாவது அல்லது கசிந்தால் உடனே நீர் வாரியத்துக்குத் தெரியபடுத்துவது போன்ற செயல்கள் நீர் விரயத்தைத் தடுப்பதற்குச் சில வழிகளாகும்.

பல நன்மை பயக்கும் இச்சேமிப்புக்கு அடிப்படையே திட்டமிட்ட வரவு செலவு எனில் மிகையில்லை. வீட்டின் அன்றாட வரவு செலவு கணக்கு எழுதும் பழக்கத்தை இங்குக் குறிப்பிடலாம். திட்டமிட்ட வரவு செலவு, பல நேரங்களில் நாம் செய்யும் பயனற்ற செலவுகளைக் கண்டறிந்து நீக்க உதவுகிறது. வரவு செலவு போக எஞ்சியிருக்கும் பணத்தைச் சிறுகச் சிறுகச் சேமித்து வந்தால் நாளடைவில் பெருந்தொகையாகி நம் எதிர்கால வளத்திற்கு வழி வகுக்கும் என்பது நிதர்சனமான உண்மை. இதனை உணர்ந்ததால்தான், நம் முன்னோர்கள் 'சிறுகக் கட்டி பெருக வாழ்' என்று கூறிச் சென்றுள்ளனர்.

சேமிப்பு என்ற சொல்லை ஆழ்ந்து நோக்கினால், அது வெறும் பணத்தை மட்டும் குறிப்பதன்று. ஆகவே, எதிலும் வீண் விரயத்தையும் வீண் செலவையும் தவிர்ப்பது நன்மை அளிக்கும். இச்சேமிப்புப் பழக்கத்தை எல்லா நிலையிலும் துறையிலும் கடைப்பிடித்தால் ஒரு தனிநபருக்கு நன்மையளிப்பது மட்டுமல்லாமல் உலக நலனுக்கும் பங்காற்றுகிறது. சேமிப்பே நம் வாழ்நாள் சிக்கலுக்கான தடுப்பூசி என்பதை உணர்ந்து செயலாற்றுவதே அறிவார்ந்த செயலாகும்.

**எடுத்துக்காட்டுக் கேள்விகள்**

1. சுற்றுச்சூழல்
   இத்தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.

2. குடும்பம்
   இத்தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.

3. போக்குவரத்து
   இத்தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.

திறந்தமுடிவுக் கட்டுரை 2

**கதை (சிறுகதை)**

இடைநிலைப்பள்ளி, தர ஆவணம் படிவம் 5
3.4.36 - 250 சொற்களில் கதை எழுதுவர்.
ஏதேனும் ஒரு செய்தி, நிகழ்ச்சி அல்லது கற்பனையான ஒன்றை மையமாக வைத்துச் சுவையுடன் சொல்லப்படுவது.)

- **கதைக்கான கூறுகள்**:
  - கொடுக்கப்பட்ட **கருப்பொருளைக்** கொண்டு கதை நகர்ச்சி அமைதல்.
  - **ஆர்வத்தைத்** தூண்டும் வகையில் இருத்தல்.
  - பல்வேறு **உத்திகளைக்** கையாண்டிருத்தல்.
  - சரளமான **மொழிநடையில்** இருத்தல்.
  - **ஏற்ற துறைசார்** மொழியைப் பயன்படுத்தி இருத்தல்.
  - **கதைப்பின்னல்** இருத்தல்.

- **குறிப்பு** :
  - கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு படிவம் 4 மற்றும் 5க்கான பாடத்திட்டத்தில் 3.4.36 கற்றல் தரத்தில் கதை எழுதுதல் இடம் பெற்றிருக்கிறது. இஃது ஒரு பொதுவான கட்டளையாக உள்ளது.
  - ஒருவேளை, கதை எழுதுக என்ற கட்டளைக்கு மாணவர்கள் அம்புலி மாமா கதை, நீதிக் கதைகள், ஈசாப் கதைகள், தெனாலிராமன் கதைகள், நாடோடிக் கதைகள், சிறுவர் கதைகள், தொடர் கதைகள், ஒரு பக்கக் கதை, கடுகுக்கதை எனப் பல வகையான கதைகளை எழுதிவிட்டார்களெனில், அவற்றை மதிப்பீடு செய்வதில் தேர்வு வாரியத்திற்குச் சிக்கல் ஏற்படும்.
  - எனவேதான், இச்சிக்கலைத் தவிர்ப்பதற்கான கதையின் ஒரு கூறாகச் சிறுகதை இருப்பதாலும் எஸ்.பி.எம். தேர்வில் தாள் ஒன்றில் கடந்த காலங்களைப் போலவே சிறுகதை எழுதும் திறன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**எடுத்துக்காட்டுக் கதை**

**பொறாமை**

நாற்பதாண்டு காலமாக நடத்திவரும் ஜவுளிக்கடையில் எத்தனையோ பணியாளர்கள் வேலைக்கு வருவதும் ஓரிரு மாதங்களில் வேலையை விட்டுப் போவதுமாக இருந்தார்கள்.

ஆனால், இந்த வேலன் பதினைந்து ஆண்டுகளாக என்னோடு இருந்தவன். ஒன்றுமே தெரியாமல் வந்து இன்று ஒரு ஜவுளிக்கடையை வழி நடத்துமளவுக்கு அனுபவம் பெற்றுவிட்டான்.

ஒரு வாரத்திற்கு முன்பு,

"முதலாளி...உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..." மிகவும் பணிவாகக் கேட்டான்.

நான்கூட ஏதோ சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கச் சொல்லக் கேட்கப் போகிறான் போல என்று நினைத்தேன்.

“சொந்தமா ஒரு ஜவுளிக்கடை வைக்கலாம்னு முடிவு பண்ணிருக்கேங்க...கொஞ்சம் தயவு பண்ணுங்க முதலாளி...உங்க ஆசீர்வாதத்தோட....” வேலன் முடிக்கவில்லை.

“ஓ... முடிவே பண்ணீட்டீயா... அப்புறம் எதுக்கு என்னோட ஆசீர்வாதம்.... ம்ம்... நடத்து... நடத்து...” கடுகடுவெனக் கூறினேன்.

“முதலாளி... உங்ககிட்ட இவ்வளவு நாளா வேல செஞ்ச நான் சொந்தமா தொழில் ஆரம்பிக்கிறது உங்களுக்குப் பெருமைதானே... மனசுல ஏதும் வச்சுக்காம எனக்கு நல்லவழி காட்டுங்க முதலாளி...” அடக்கமாகத்தான் பேசினான். ஆனால், எனக்குத்தான் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

“டேய் வேலா... எனக்கு இந்தத் துறையில 40 வருச அனுபவம். உனக்கு அதுல பாதி அளவுகூட இல்ல...பத்திரம். முடிவு பண்ணிட்ட...உங்கிட்ட பேசுரதுல அர்த்தமில்ல. மாசம் முடிய இன்னும் பத்து நாள் இருக்கு. அதுக்குள்ள உன்னுடைய கணக்க தீர்த்திட வேண்டியதுதான்” என்றேன் எரிச்சலின் உச்சத்தில்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் வேலனைக் கண்காணிப்பதே என் தலையாய வேலையாகி விட்டது. இதிலே, கடைக்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் அவனையே நாடி நின்றார்கள்.

அவனது தொழில் பக்தியும் சுறுசுறுப்பும் நான் நன்கு அறிந்திருந்தாலும், இப்போது அதை நினைத்து என்னால் பெருமைகொள்ள முடியவில்லை! என்னுடைய வாடிக்கையாளர்களிடத்தில் அவன் பழகுகின்ற ஒவ்வொரு கணமும் என் வியாபாரத்திற்கு விழுகின்ற அடியென்றே நான் உணர்ந்தேன்.

அவன் எனக்குப் போட்டியாக வந்து விடுவானோ என்ற காழ்ப்புணர்ச்சி என்னுள்ளம் எங்கும் விஷமாகப் பரவியது. நாளுக்கு நாள் அவன் மீது வெறுப்பு வளர்ந்தது. மாதம் முடிய இன்னும் மூன்று நாள்கள் இருந்தபோதும் தாங்க முடியவில்லை. சம்பளத்தைக் கணக்குப் பண்ணி கொடுத்து வேலனைக் கிளம்பச்சொல்லி அவசரப்படுத்தினேன்.

வேலன் ஒருகணம் கலங்கித்தான் நின்றான்.

“முதலாளி...திறப்பு விழாவுக்குக் கண்டிப்பாக வந்திடுங்க முதலாளி..” தந்தையிடம் தனயன் கெஞ்சுவதுபோல கூறினான்.

“ஆம்..பார்க்கலாம்...பார்க்கலாம்...” வெறுப்பின் உச்சியில் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

திட்டமிட்டபடி வேலனின் புதிய கடைத் திறப்பு விழா வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்தது. கொஞ்ச நாளிலேயே அவனது வளர்ச்சி ஊரில் பேச்சானது. அஃது இன்னும் என் மனத்தைக் காய்ச்சிய இரும்புப் குழம்பால் குளிப்பாட்டியது.

அவ்வப்போது என் பணியாளை அவன் கடைக்கு வேவு பார்க்க அனுப்பினேன். என்னிடம் வளர்ந்தவன் என்னையே வளைத்து ஒடித்து விடுவானோ என்ற வக்கிர எண்ணங்கள் என்னைச் சும்மா இருக்க விடவில்லை.

ஒரு நாள், என் பழைய நண்பன் சுகுமாறன், பலே கில்லாடி அவனைப் பார்க்க அவன் எப்போதும் கதியாய்க் கிடக்கும் அந்த முடிவெட்டும் கடைக்குச் சென்று எட்டிப் பார்த்தேன். என்னைப் பார்த்ததும்...

“வாங்க முதலாளி....என்ன ஆளையே பார்க்க முடியல. சுகு ஐயாவ பார்க்க வந்தீங்களா.? வர்ற நேரந்தான். நீங்க உள்ள வாங்க. நீங்க முடி வெட்டனுங்களா?” பழைய தொனியிலேயே பேசினான் கடைக்குச் சொந்தக்காரன் பூபதி.

“வெட்டனும்தான். ஆனா நிறைய பேரு காத்திருக்காங்கபோல. ஆமா... எங்க கடையில ஒரு பையனை வேலைக்கு வச்சிருந்தீங்களே... ஆளைக் காணலியே...” என்றேன்.

“நம்ம முரளியத்தானே கேக்குறீங்க...நல்ல பையன்ங்க. ரெண்டு வருசத்துல தொழில கத்துக்கிட்டான். சொந்தமா தொழில் செய்யப் போறேன்னு சொன்னான். இங்கிருந்து ஆறாவது கடை... நான்தான் இடம் பிடிச்சுக் கொடுத்தேன். முன்னுக்கு வரணும்னு நினைக்கிறவனை முட்டுக்கட்டையா நின்னு தடுக்கிறது நியாயமில்லிங்களே. நல்ல கைராசிக்காரன்...சீக்கிரம் மேலே வந்திடுவான். முதலாளி... நீங்ககூட இப்போ அங்க போனீங்கனா உடனே வெட்டிகலாம். அவனோட வாடிக்கைங்க எல்லாம் இளவட்டங்க... மதியத்திற்கு மேலதான் வருவாங்க...இப்போ ஆள் இருக்காது.”

பேசி முடித்த பூபதியை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. அவன் கண்களின் ஒளி என் உள்மனத்தை அடித்து நொறுக்கியது. நான் பார்த்து வளர்ந்த பையன் இந்தப் பூபதி. அவனது நல்ல எண்ணம் எனக்கு இல்லாமல் போனதை நினைத்து முதன் முதலாக வருத்தமுற்றேன்.

தன் கடைக்கு வந்த வாடிக்கையாளரை அடுத்தவருக்கு விட்டுக்கொடுக்கும் மனம் எல்லோருக்கும் வருமா? பூபதி என் முன்னே மலையாக நின்றான். மடுவாக நிற்பதற்குக்கூட தகுதியற்றவனாகத் தடுமாறினேன்.

என் மனத்திரையில் வேலன் நின்றிருந்தான். மாசு மருவற்றவனை ஒழிப்பதற்குத் திட்டம் தீட்டத்தான் சுகுவைப் பார்க்க வந்தேன். நல்லவேளை! பூபதி என் மனக்கண்களைத் திறந்துவிட்டான்.

எம்.ஆர்.தனசேகரன், *2007*
*(சில மாற்றங்களுடன்)*

**எடுத்துக்காட்டுக் கேள்விகள்**

1. நெஞ்சே எழு
   இதனைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதை எழுதுக.

2. எதிர்நீச்சல்
   இதனைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதை எழுதுக.

3. போராட்டம்
   இதனைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதை எழுதுக.

## திறந்தமுடிவுக் கட்டுரை 3

### வருணனை

இடைநிலைப்பள்ளி, தர ஆவணம் படிவம் 5
3.4.32 250 சொற்களில் வருணனைக் கட்டுரை எழுதுவர்.

நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் விவரிப்பு. இந்த விவரிப்பின் வெளிப்பாடாக அமைந்த பேச்சு அல்லது எழுத்து.

- **வருணனைக் கூறுகள்**:

  காட்சிப்படுத்துதல் : கற்பனை வளம் / மொழி வளம் / மெருகூட்டல் / உவமை / உருவகம் / இனிய சொல்லாட்சி, சொற்றொடர் / அணிச்சிறப்பு

  காலம் : நிகழ்காலத்தில் இருத்தல் அவசியம்

- **கவனத்திற்கு:**
  நிகழ்ச்சியின் தொகுப்பாகவோ விமர்சனமாகவோ அனுபவக் கட்டுரையாகவோ எழுதக்கூடாது.

  ❖ வருணனைக்கு ஏற்ற முருகியல் கூறுகள் அமைந்திருத்தல்.
  - உவமை (Simile)
  - உருவகம் (Metafora)
  - சிலேடை (Pun)
  - இனிய சொற்றொடர் (Bahasa Bunga)
  - குறியீடு (Pelambangan)
  - தற்குறிப்பேற்ற அணி (Personifikasi)
  - உயர்வு நவிற்சி (Hiperbola)

**எடுத்துக்காட்டு வருணனைக் கட்டுரை**

### இரவுச் சந்தை

அந்தி வானம் வெய்யோன் அருளால் செந்நிற ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. புள்ளினங்கள் தங்கள் கடமையை முடித்துத் தத்தம் கூடுகளை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. அந்த மாலைநேர ரம்மியமான காட்சிகளோடு ஈப்போ, தாமான் பெர்த்தாமாவின் கடை வீதிகள் பரபரப்படைய ஆரம்பித்துவிட்டன. அன்று வெள்ளிக்கிழமையாகையால் இரவுச் சந்தைக்கான ஏற்பாடுகள் மும்முறமாக நடந்து கொண்டிருந்தன. மூடுந்துகளும் சிறு சிறு கனவுந்துகளும் அவ்விடத்தை நோக்கிப் படையெடுக்க, நேற்றுப் பெய்த மழையில் முளைத்த திடீர் காளான்கள்போல் ஆங்காங்கே அங்காடிக் கடைகள் துளிர்விடத் தொடங்கிவிட்டன.

இயற்கை தன் கடமையைச் செவ்வன செய்துகொண்டிருந்தது. சந்திரன் தனது அழகிய வதனத்தை மெல்ல காட்டத் தொடங்கியிருந்தான். மக்கள் கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க ஆரம்பித்திருந்தது. அவ்விடம் திருவிழாக் கோலமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை பலவிதமான அங்காடிக் கடைகள். பழக்கடைகள், காய்கறிக் கடைகள், துணிக்கடைகள், உணவுக்கடைகள், பாத்திர பண்டங்கள் விற்கும் கடைகள் இப்படிப் பல கடைகள் வரிசை பிடித்துக் கொண்டிருந்தன. ஒரு பேரங்காடியே திரண்டு வந்து நர்த்தனமாடுவது போலிருந்தது.

'மரி! மரி! தீகா பாராங் லீமா ரிங்கிட்', எனும் கூக்குரல் ஒலிப்பெருக்கியில் அலற, மக்கள் கூட்டமும் ஈக்கள் மொய்ப்பதுபோல் அக்கடையைச் சுற்றி நிற்கின்றனர். வீட்டிற்குத் தேவையான கத்திகள், துணி மாட்டும் கம்பிகள், நகவெட்டிகள், நெகிழிப் பாத்திரங்கள் போன்ற இத்யாதி பொருட்களை மக்கள் நான் முந்தி நீ முந்தியென்று வாங்கிக் கொண்டிருந்தனர். எதிர்புறத்தில் போடப்பட்டிருந்த துணிக்கடைகளிலோ கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண உடைகள், 'என்னை வாங்குங்கள், வாங்குங்கள்' என்று பயனீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தன. சின்னஞ் சிறு வாண்டுகள் முதல் பல்விழுந்த பெரியவர்கள் வரை தாங்கள் விரும்பும் துணிகளை வாங்குவதற்குக் கடைக்காரருடன் பேரம் பேசிக்கொண்டிருந்தனர். மலேசிய மக்களிடையே 'பசார் மாலாம்' என்று பிரசித்திப் பெற்ற இந்த இரவுச் சந்தைகளின் சிறப்பே பேரம் பேசும் அழகுதான்.

அடுத்து, பழக்கடைகளிலும் காய்கறிக் கடைகளிலும் செழிப்பான, பசுமையான பழங்களும் காய்கறிகளும் குவிந்து கிடந்தன. பல நிறங்களில் தளதளவென்றிருந்த அவற்றைக் குடும்ப மாதர்கள் பார்த்துப் பார்த்து வாங்கும் அழகோ அழகுதான். இரவுச் சந்தையில் விற்கப்படும் பொருள்கள் தரம் வாய்ந்தவையல்ல என்ற பலரின் எண்ணத்தைப் பொய்ப்பித்துக் காட்டிக்கொண்டிருந்தன அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பழங்களும் காய்கறிகளும். இரவுச் சந்தையிலும் தரமான பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்கும் என்பதற்கு அவை சாட்சிகளோ?

இரவுச் சந்தையின் இன்னொரு சிறப்பு அம்சம் உணவுக் கடைகளாகும். பொரித்த கோழியா? அவித்த சோளமா? வேர்க்கடலையா? 'நாசி லெமாவா'? 'மீ கோரெங்கா'? என்ன வேண்டும் உண்பதற்கு? மூவின உணவுப் பண்டங்களும் தேசிய ஒருமைப்பாட்டைப் பறைசாற்றிக்கொண்டு பசியைத் தூண்டிக்கொண்டிருந்தன. தாகத்தைத் தணிக்க பலவகை குளிர்ப்பானங்களுக்குக் கொஞ்சமும் பஞ்சமில்லை. சிறார்களுக்குத்தான் ஒரே கொண்டாட்டம். பெரும்பாலான பிள்ளைகளின் கையில் ஏதாவதொரு தின்பண்டம் இல்லாமல் இல்லை. வாயும் கையும் வேலை செய்ய தன் பெற்றோர்களின் பின்னால் பரபரவென்று சென்று கொண்டிருந்தனர்.

அதோ, தெருக்கோடியில் போடப்பட்டிருந்த கடையிலிருந்து ஏதோ பாட்டுச் சத்தம் கேட்கிறதே?, ஓ! குறுந்தட்டுகள் விற்பனை கடையா? 'ஆளுமா டோலுமா ஐசா லக்கடி மாலுமா' என்றவாறு ஒலிப்பெருக்கி ஓலமிட்டுக்கொண்டிருக்க, இளவட்டங்களில் சிலர் இசைக்கு ஏற்ப ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தனர். பொருளற்ற வரிகள், நாகரிகமற்ற ஆட்டங்கள். காதைப் பிளக்கும் சத்தம். ஆயினும் யாரும் எதையும் பொருட்படுத்தவில்லை. அவரவர் கருமமே கண்ணாய் இருந்தனர்.

இரவுச் சந்தையின் கடைகளைப் பற்றி விவரிக்க வேண்டுமென்றால் அதற்கு முற்றுப்புள்ளியே இருக்காது. எண்ணற்ற கடைகள்; எண்ணிலடங்கா பொருள்கள். கூட்ட நெரிசலோடு, ஒரே இரைச்சல். இவற்றோடு பிச்சைக்காரர்களின் கையேந்தல் வேறு. இத்தனைக்கும் மத்தியில் பொருள்களை வாங்கும் அவசரத்தில் பிள்ளைகளின் கையை விட்டு விட்டு அவர்களைத் தேடும் பெற்றோர். இவையாவும் ஒவ்வொரு வெள்ளியும் அரங்கேறும் காட்சிகள்தாம்.

இரவு மணி பதினொன்றை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்தது. மெல்ல மெல்ல மக்கள் கூட்டம் குறைய ஆரம்பிக்க, வியாபாரிகளும் தங்கள் பொருள்களை மூட்டைக் கட்ட ஆரம்பித்தனர். சற்று நேரத்தில் அக்கடைத்தெரு வெறிச்சோடி நின்றது. தெருவெல்லாம் குப்பைக் கூளங்கள். துர்நாற்றத்திற்கும் குறைவில்லை. மலேசியர்கள் பொது இடங்களில் தூய்மையைப் பேணுவதில் சற்றுப் பிந்தங்கிய நிலையில்தான் உள்ளனர் என்பதற்கு இந்த இரவுச் சந்தையே நல்ல உதாரணமாகும். ஆயினும், அவ்விடம் அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் இரவுச் சந்தைக்கு வழி மேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறது.

**எடுத்துக்காட்டுக் கேள்விகள்**

1. கோறணி தொற்று நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை முடிவடைந்து பள்ளிக்குத் திரும்புகிறாய். பள்ளியின் சூழலை **வருணித்து** ஒரு கட்டுரை எழுதுக.

2. உன் பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விளையாட்டுப் போட்டியை **வருணித்து** எழுதுக.

3. உன் வசிப்பிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கணினி கண்காட்சியை வருணித்து **வருணனை** கட்டுரை ஒன்றனை எழுதுக.

## திறந்தமுடிவுக் கட்டுரை 4

### வாதக் கட்டுரை

இடைநிலைப்பள்ளி, தர ஆவணம் படிவம் 5
3.4.30 250 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுவர்

தலைப்பைச் சார்ந்தோ மறுத்தோ தகுந்த சான்றுகளுடன் கருத்துகளைக் கோர்வையாக முன்வைத்துக் கூறப்படுவது.

- கொடுக்கப்பட்ட தலைப்பைச் சார்ந்து (ஒட்டி அல்லது மறுத்து (வெட்டி) எழுதுதல்.
- முன்னுரையில் தனது நிலைபாட்டை வலியுறுத்துதல்.
- பத்திகளுக்குரிய கட்டமைப்பில் இருத்தல்.
  (கருத்து, துணைக்கருத்து/விளக்கம், சான்று, முடிபு)
- முடிவுரையில் தனது நிலைப்பாட்டைவலியிறுத்திக் கட்டுரையை நிறைவு செய்தல்

**எடுத்துக்காட்டு வாதக் கட்டுரை**

**இன்றைய இளையோர் ஒழுக்கச் சீர்கேட்டிற்குத் தமிழ்த்திரைப்படங்களே காரணம்.**

மனத்திற்கு இன்பம் தரவும் கலை பண்பாடுகள் வளரவும் நடைமுறை வாழ்வுக்குப் பொருந்தும் வகையில் கொனண்டுவரப்பட்டதுதான் தமிழ்த்திரைப்படம். இயல், இசை, நாடகமென முத்தமிழ் இரசத்தையும் ஒன்றாய்த் தேன் சொட்டச் சொட்டத் தருவது தமிழ்த்திரைப்படம். நல்ல பாடல்கள், இன்னிசை, பக்தி, தன்முனைப்பு, நன்னெறிக்கோட்பாடு, தமிழர்ப்பண்பாடு , குடும்பப்பாசம், நாட்டுப்பற்று ஆகியவை சிதறிப்போகாது சிறப்பாக வழங்கியது அன்றைய தமிழ்த்திரைப்படங்கள். ஆனால் இன்றைய தமிழ்த்திரைப்படங்களோ இளையோரின் செயலிலும் சிந்தனையிலும் பெரு மாற்றத்தை ஏற்படுத்தி விடுவதோடு ஒழுக்கச் சீர்கேட்டிற்கும் வித்திடுகிறது என்பது சற்றும் மறுப்பதற்கு இடமில்லாக் கருத்தாகும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்! தமிழ்ச் சமுதாயத்தின் முதுகெழும்பாய் திகழ வேண்டிய இளையச் சமுதாயம் எந்நேரமும் நடிகர் நடிகைகளைப் பற்றியே பேசுவதும், அவர்கள்பால் மோகம் கொள்வதும், அவர்கள் பாணியைப் பின்பற்றுவதிலுமே தங்கள் பொன்னான நேரத்தை வீணடிக்கின்றனர். மற்ற முக்கியக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. நம் வாழ்க்கை நெறிக்குப் பொருந்தாத வெளி நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றுவதிலேயே இன்றைய இளையோர் நாட்டம் கொண்டுள்ளனர். இதனால் கலாச்சாரச் சீரழிவுக்கு வித்திடுகின்றனர்.

அடுத்து இன்றைய தமிழ்த்திரைப்படங்களில் கருத்தாழமிக்க விரசமில்லாத வரிகள் கொண்ட திரைப்பாடல்கள் மிகவும் அருகிவிட்டன. அத்தி பூத்தாற் போல் ஒரிரு பாடல்களைத் தவிர மற்றவை விரசத்தைத் தூண்டும் பாடல்களாகத்தான் இருக்கின்றன. புரியாத வார்த்தைகள், இரட்டை அர்த்தம், ஆபாச வரிகள் கொண்ட பாடல்களே இளையோரிடையே தீயச் சிந்தனைகளைத் தூண்டித் தீயச் செயல்களுக்கு இட்டுச் செல்கின்றன. கருத்துகள் குன்றிய பாடல்களைக் கேட்கும் இன்றைய பெரும்பாலான இளைஞர்கள் சிந்தனையாற்றல் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். பாடல் ஒரு புறமிருக்க, இசையும், வீணையின் நாதமும், ஏழிசை இராகமும் எத்தனை பேர் மனங்களில் பதிந்துள்ளன? மேற்கத்திய பாணியிலமைந்த இசைகளே அவர்களை ஆக்கிரமித்துள்ளன. இரைச்சலுக்குள் இசையைத் தேடும் நிலையிலேயே இன்றைய இளையோர் உள்ளனர்.

மேலும் காதலுக்கு திரைத்துறையினர் கொடுக்கும் விளக்கங்களும் வியாக்கியானங்களும் அதிகம். தமிழ்த்திரைப்படங்களின் தாக்கத்தினால் பல பதின்ம வயதினர் சிறுவயதிலேயே காதல் வயப்பட்டு தங்கள் இளமைக்காலத்தை வீணடித்து விடுகின்றனர். இதனால் அவர்களது கல்வி பாதிப்படைவதோடு தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் அவமானத்தை விளைவிக்கின்றனர்

என்பதனையும் உணர மறுக்கின்றனர். மேலும் காதலில் தோல்வியடைந்தால் கழுத்தறுப்புகளும் அமில வீச்சுகளும், தற்கொலையுமே தீர்வு என நம்புகின்றனர். மனதில் தோன்றும் சின்னச் சின்னச் சலனங்களுக்கு மரணம்தான் தீர்வு எனத் திரைபடங்களில் கண்டு பல இளங்காதலர்கள் தற்கொலை முயற்சியில் இறங்குகின்றனர். இதனால் மரணமுறும் இளையோர்தான் எத்தனை பேர்!

அடுத்து இன்றைய தமிழ்த்திரைப்படங்கள் வன்முறையை வரையரையின்றி காட்டுகின்றன. யார் யாரை வேண்டுமானலும் வெட்டலாம், குத்தலாம் என்ற நிலையாகிவிட்டது. தற்போது கல்விக்கூடங்களில் காணப்படும் ஒழுங்கீனச்செயல்களும் தமிழ்த்திரைப்படங்களின் பிரதிபலிப்புகளாகவே தென்படுகின்றன. கல்வியில் நாட்டம் செலுத்த வேண்டிய மாணவர்கள் புகை பிடித்தல், மது அருந்துதல், குண்டர் கும்பலில் ஈடுபடுதல், அடிதடி, சண்டை, வெட்டுக் குத்து, கொலை எனப் பல்வேறு தீயச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இன்றைய தமிழ்த்திரைப்படங்கள் ஒற்றுமையாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மனங்களில் பிரிவினையையே உண்டாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன என்றால் யாராலும் மறுக்க இயலாது.

தமிழ்த்திரைப்படங்கள் இந்த அளவிற்கு மட்டுன் நம்மினத்தை இழுத்துச் செல்லவில்லை. இளம்பெண்களுக்கு அரைகுறை ஆடைகள்தான் அழகென்று அறிவுறுத்துகின்றன. நாகரீகம் எனும் போர்வையில் நமது பண்பாட்டிற்கு ஒவ்வாத ஆபாச உடைகளே அதிகம் காட்டப்படுகிறது. நம் இந்தியப் பெண்களும் அவ்வாறான ஆடைகளால் ஈர்க்கப்பட்டு அது போலவே ஆடைகளை அணிந்து கொள்வதைக் காணும்போது மனம் வேதனைக்குள்ளாகின்றது. பார்ப்போரை முகம் சுளிக்கச் செய்கின்றது. இத்தகைய நிலை தொடர்ந்தால் நாளடைவில் எங்கே நம் பண்பாட்டு உடைகள் மறந்து போய்விடுமோ என்னும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

மனதை மகிழ்விப்பது நகைச்சுவை ஆனால் திரைப்பட நகைச்சுவைகளில் ஆபாசமே மிகுந்துள்ளன. நகைச்சுவைகளில் இரட்டைப் பொருள் தரும் பேச்சு முறை நாகரீகமாகிவிட்டது. விரசமான சொற்களைக் கொண்ட திரைப்படங்களே அதிகம் வெளிவருகின்றன. சாவடி, பெரிசு, மூடு, அடங்கு போன்ற சொற்களைப் பேசும் நடிகர்களை இளையோர் பின்பற்றிப் பேசி மகிழ்கின்றனர். முதியோர்களையும் பெண்களையும் புண்படுத்துகின்றனர்; கேலி செய்கின்றனர். இதைப் பார்க்கும் கள்ளமில்லாப் பிஞ்சுகள் கூட சினிமா மொழிகளை, உரையாடல்களைப் பின்பற்றுவது மிகுந்த வேதனையை அளிக்கிறது. தமிழ்த்திரைப்படங்களே தமிழ்மொழிக்குக் களங்கம் ஏற்படுத்துவதோடு மொழிச் சிதைவுக்கும் காரணமாகின்றன.

மொத்தத்தில் தமிழ்த்திரைப்படங்கள் ஒழுக்கச் சீர்கேட்டின் ஆயுதமாகவும் கையேடாகவும் திகழ்கின்றன. இதனால் ஒழுக்கச் சீர்கேட்டைத் தவிர நன்மைகள் எதுவும் இல்லை என்பது நிதர்சனமான உண்மையாகும். பாதிப்புற்ற பின் வருந்தி என்ன பயன். இளைஞர்கள் மனதில் ஊடுருவும் தன்மை திரைப்படங்களுக்கு இருப்பதால், அப்படியே அவற்றில் மூழ்கிவிடாமல், அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து, எடுத்துக் கொள்ள வேண்டியவற்றை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறவற்றை மனதில் புகாமல் ஒதுக்கி விடக் கற்றுக் கொள்ள வேண்டும். வருமுன் காப்போனாக இருப்பதே இளைய தலைமுறையினருக்குச் சிறப்பு.

**எடுத்துக்காட்டுக் கேள்விகள்**

1. இளைஞர்களின் போதைப்பொருள் பழக்கத்தினால் மட்டுமே நாட்டின் வளர்ச்சி பாதிப்படைகின்றன. இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்துத் துறையே முக்கியக் காரணம். இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3. நலமான வாழ்வுக்கு உணவுப் பழக்கமே முக்கியப் பங்காற்றுகிறது இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

## திறந்தமுடிவுக் கட்டுரை 5

### விவாதக் கட்டுரை

இடைநிலைப்பள்ளி, தர ஆவணம் படிவம் 5
3.4.31 250 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுவர்

ஒரு தலைப்பையொட்டிய சார்பு, எதிர்பு கருத்துகளை வெளிப்படுத்தி, சீர்த்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருதல்.

- கட்டாயம் இரண்டு நிலையிலும் (சார்பு / எதிர்பு) தலைப்பை விவாதம் செய்திருக்க வேண்டும்.
- முன்னுரை - தலைப்பையொட்டிய முன்னோட்டம் / விளக்கம்.
- முடிவுரை - தொகுப்பு / பரிந்துரை

**எடுத்துக்காட்டு விவாதக் கட்டுரை**

**தொடர் நாடகங்களைப் பார்ப்பதால் ஏற்படும் விளைவுகள்.**

‘தொடரும், மலரும், மீண்டும் பூக்கும், மீண்டும் வருவாள்....’ இவையனைத்தும் நாடகம் முடிந்தவுடன் அதன் தொடரைக் காண்பதற்கு முன் போடப்படும் சொற்கள். இதனை வைத்தே நாளை என்ன நடக்கும் என்ற ஆவலோடு இரசிகர்கள் வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருப்பர். இன்னும் சொல்லப் போனால் தொடர்நாடகம் என்பது ஐந்தாறு நாள்களில் முடியும் நாடகம் அல்ல. ஈராண்டு, ஆறாண்டு காலம் கூட சில தொடர் நாடகங்கள் தொடர்கின்றன. இவ்வரிசையில் மெட்டி ஒலி, சித்தி, கல்யாண வீடு, ராஜா ராணி என பல தொடர் நாடகங்களும் உள்ளடங்கும். முதன் முதலில் ஒளி பரப்பப்பட்ட ஒரு சில தொடர்நாடகங்கள் ஓரிரு மாதங்களில் முடியக்கூடியவனவாய் இருந்தன. அதன் பிறகு, இரசிகர்களின் ஆதரவோ என்னவோ தெரியவில்லை, பல நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டன. இத்தகு தொடர்நாடகங்களைப் பார்ப்பதால் பல விளைவுகள் ஏற்படுகின்றன.

இந்தத் தொடர்நாடகங்கள் பார்ப்பவரை மன உளைச்சலுக்கு இட்டுச் செல்கிறது என்பதில் ஐயமில்லை. ஆராய்ச்சியின் ஆதரங்களும் இதைத்தான் சொல்கின்றன. இன்று ‘தொடரும்’ என்று முடிந்த நாடகம், நாளை என்ன நடக்கும்? இவளை யார் திருமணம் புரிவார், அவர் இறந்து விடுவாரா? என்றெல்லாம் யோசிக்க வைக்கிறது தொடர்நாடகம். இளகிய மனம் படைத்த இரசிகர்களோ தங்களையே கதாப்பாத்திரத்தில் ஒருவராக மாற்றி, அக்கதாப்பாத்திரத்திற்கு நேர்ந்த சோகத்தில் தங்களையும் ஆழ்த்திவிடுகின்றனர். இதுவே, அவர்களின் மன உளைச்சலுக்குக் காரணமாக அமைகின்றது.

அதுமட்டுமல்லாமல், இல்லத்தரசிகள் தொடர்நாடகங்களிலேயே மூழ்கி விடுகின்றனர் எனும் குற்றச்சாட்டும் காலங்காலமக இருந்து கொண்டுதான் வருகிறது, இதை மறுக்கவும் முடியாது. சமைக்கின்ற நேரங்களில் ஒளிப்பரப்படும் தொடர்நாடகங்களைப் பார்க்கும் சாக்கில் சமையலே செய்யாமல் உண்ணும் நிலை கூட இருக்கவே செய்கின்றது. மற்றக் குடும்பப் பொறுப்புகளையும் சரிவரச் செய்ய முடியாத சூழ்நிலையையும் இத்தொடர் நாடகங்கள் ஏற்படுத்தி விடுகின்றன. வேலை விட்டு வீட்டிற்கு வந்த கணவரைக் கவனிக்காமல் தொடர்நாடகத்தில் மூழ்கியிருந்த மனைவியின் மேல் கோபப்பட்டு தொலைக்காட்சி பெட்டியை உடைத்தார் கணவர் எனும் செய்தி நாளிதழில் வெளிவந்து அனைவரும் அறிந்ததே.

மேலும், தொடர்நாடகங்கள் இரசிகர்கள் மத்தியில் எதிர்மறை சிந்தனையைத் தூண்டுகிறது என்று சொன்னால் அது உண்மையே. பொதுவாகத் தொடர்நாடகங்களில் ஒருவர், இருவரைத் திருமணம் புரிவதும், மனைவியோ கணவனோ அவரவர் துணைக்குத் துரோகம் புரிவதும் அதிகமாகக்

காட்டப்படுகிறது. தொடர்நாடகத்திலே மூழ்கியிருக்கும் ஒருவருக்கு ‘இது சரிதானோ?’, ‘செய்தால் சரிதானே’ என்ற எதிர்மறை சிந்தனையைத் தூண்டுகிறது. இத்தொடர்நாடகங்களில் வரும் மாமியார் மருமகள் பாத்திரம் கூட வழக்கத்திற்கு மாறாகத் காட்டப்படுகின்றது. நடைமுறை வாழ்க்கைக்கு இஃது ஒத்துவராது என்பதைத் தொடர்நாடகம் எடுத்துரைப்பதில்லை. இன்றைய நிலையில் நமது சமுதாயத்தின் கலாச்சார மாற்றத்திற்கு இது போன்ற தொடர்நாடகங்கள் பெரிதும் துணைபோகின்றன என்பதில் ஐயமில்லை.

எல்லாம் நன்மைக்கே எனும் காலம்போய் இதுவும் தீமைதான் தருகிறது என்றாகிவிட்டது. இதுகாறும் தொடர் நாடகங்களினால் தீமையே என்று பார்த்தாலும் ஒரு சில நன்மைகளும் இருக்கவே செய்கின்றன. தொடர்நாடகங்கள் குடும்ப உறவை வலுப்படுத்துகின்றது என்று சொல்லத்தான் வேண்டும். இப்போதைய காலக்கட்டத்தில் தொடர்நாடகங்கள் குடும்பத்தோடு பார்க்கப் படுகின்றன. அனைத்துக் குடும்ப உறுப்பினரும் ஒன்றாய் அமர்ந்து நாடகங்களைப் பார்க்கின்ற சூழல் குடும்ப ஒற்றுமையை மேலோங்கச் செய்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. மேலும், குறிப்பாகக் கணவன் மனைவிக்கிடையே நல்லதோர் உறவைத் தொடர்நாடகங்கள் வளர்க்கவே செய்கின்றன.

தொடர்நாடகங்கள் தமிழ்ச் சினிமாப் போல் பாலியல் சிந்தனையையோ ஆபாசங்களையோ கொண்டிருப்பதில்லை. வன்முறைக் காட்சிகளும் குறைவே. தமிழ்ச் சினிமாவில் வன்முறைக்கு அளவேது? மேலும், சினிமாப் போல் தொட்டதற்கெல்லாம் பாடல், பாடல்களில் ஆபாசம், ஆடைக் குறைப்புப் போன்ற அவலங்கள் தொடர்நாடகங்களில் அரங்கேறுவதில்லை. எனவே, இஃதை அதிகமானோர் பார்க்க விரும்புகின்றனர். அதுவும் குடும்பத்துடன் பார்க்கின்றனர். ஆதலால், குடும்ப உறவு மேம்படவும் வழி பிறக்கின்றது.

“செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்”

என்பது வான்புகழ் வள்ளுவர் வாக்கு. செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் போனாலும், செய்யக்கூடாத காரியங்களைச் செய்தாலும் அதன் விளைவு நன்மை அளிக்காதென்பது இறுதியான முடிவு. அவ்வகையில், தொடர்நாடகங்களின் விளைவும் குறள் உணர்த்தும் கருத்தும் ஒன்றே. ஆதலால், தொடர்நாடகங்கள் பார்த்தலைத் தவிர்த்தல் நலம்.

எடுத்தாளப்பட்டது
*(சில மாற்றங்களுடன்)*

**எடுத்துக்காட்டுக் கேள்விகள்**

1. அறிவியல் வளர்ச்சியினால் மனித குலத்திற்கு ஏற்படும் விளைவுகள்.
   இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

2. நாட்டின் தொழில்துறையில் பணியாற்ற அந்நிய தொழிலாளர்களைக் கொண்டு வருவதால் ஏற்படும் விளைவுகள்.
   இத்தலைப்பில் **விவாதக்** கட்டுரை எழுதுக.

3. சமூக ஊடகப் பயன்பாட்டால் மாணவர் வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகள்.
   இத்தலைப்பை **விவாதக்** கட்டுரை எழுதுக.

தமிழ்மொழி தாள் 1

# பிரிவு அ & ஆ

# பயிற்சிக்கும் முயற்சிக்கும்

**பயிற்சி 1**

**பொதுக்கட்டளை:**
இக்கேள்வித்தாள், பிரிவு அ, பிரிவு ஆ என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக இரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**
[பரிந்துரைக்கப்படும் நேரம்: 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதிக்கு ஏற்ப **வழிகாட்டிக் கட்டுரை** ஒன்றனை எழுதுக.

**அரவின் குமார்**
**சதுரங்க விளையாட்டாளர்**



**சாதனை**
இரண்டு ஆண்டுகளாகத் தேசிய அளவிலான சதுரங்கப் போட்டி வெற்றியாளர்

**ஆதரவு**
பெட்ரோனாஸ் நிறுவனம், சி.ஐ.எம்.பி வங்கி

**குறிக்கோள்**
ஆர்வமுள்ள ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்

**வெற்றியின் இரகசியம்**
சுய கட்டொழுங்கு, பயிற்சியில் முழுமையான ஈடுபாடு

**பயிற்சி**
உள்நாடு, வெளிநாடு - 6 மாதப் பயிற்சி

1. ‘நட்சத்திர சதுரங்க வீரர்’ எனும் விருது பெற்ற உன் நண்பனை வாழ்த்தி **நட்புக் கடிதம்** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

2. சதுரங்கப் போட்டியில் அதிக ஈடுபாடு கொண்டுள்ள உன் நண்பரோடு உரையாடுகின்றீர். **அவ்உரையாடலை** எழுதுக.

**அல்லது**

3. ‘நட்சத்திர சதுரங்க வீரர்’ எனும் விருது பெற்ற தேசிய விளையாட்டு வீரர் அரவின் குமார் அவர்களை நேர்காணல் செய்கிறாய். **அந்நேர்காணலை** எழுதுக.

[ 30 புள்ளி ]

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1. உடல் ஆரோக்கியம்
   இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

2. தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் விளைவுகள்
   இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3. தந்தையின் தியாகம்
   இதனைக் கருப்பொருளாகக் கொண்டு ஒரு **சிறுகதை** எழுதுக.

[70 புள்ளி]


தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது
KERTAS PEPERIKSAAN TAMAT

**பயிற்சி 2**

**பொதுக்கட்டளை:**
இக்கேள்வித்தாள், பிரிவு அ, பிரிவு ஆ என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக இரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**
[பரிந்துரைக்கப்படும் நேரம்: 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதிக்கு ஏற்ப **வழிகாட்டிக் கட்டுரை** ஒன்றனை எழுதுக. கீழ்க்காணும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.




1. தமிழ்மொழிக் கழகச் செயலாளராகிய நீர், உன் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய விழாவின் நிகழ்ச்சியறிக்கையைத் தயார் செய்யப் பணிக்கப்பட்டுள்ளாய். **அந்நிகழ்ச்சியறிக்கையை** எழுதுக.

**அல்லது**

2. உன் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய விழாவினைப் பற்றி உன் நண்பனோடு உரையாடுகிறாய். **அவ்வுரையாடலை** எழுதுக.

**அல்லது**

3. நாளிதழ் நிருபர் என்ற முறையில் மாவட்ட அளவிலான இலக்கிய விழாவின் ஏற்பாட்டுக் குழுத்தலைவரை நேர்காணல் செய்கிறாய். **அந்நேர்காணலை** எழுதுக.

[30 புள்ளி]

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1. இயற்கைப் பேரிடர்
   இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

2. நலமான வாழ்வுக்கு உணவுப் பழக்கமே முக்கியப் பங்காற்றுகிறது
   இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3. கோறணி தொற்று நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை முடிவடைந்து பள்ளிக்குத் திரும்புகிறாய். பள்ளியின் சூழலை **வருணித்து** ஒரு கட்டுரை எழுதுக.

[70 புள்ளி]

தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது
KERTAS PEPERIKSAAN TAMAT

**பயிற்சி 3**

**பொதுக்கட்டளை:**
இக்கேள்வித்தாள், பிரிவு அ, பிரிவு ஆ என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக இரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**
[பரிந்துரைக்கப்படும் நேரம்: 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதிக்கு ஏற்ப **வழிகாட்டிக் கட்டுரை** ஒன்றனை எழுதுக. கீழ்க்காணும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.

**மாவட்ட நிலையிலான குறுக்கோட்டப் போட்டி**

**பரிசுகள்**
முதல் பரிசு : ரி.ம 500.00
50 ஆறுதல் பரிசுகள்



**நாள்** : 28.11.2021

**நேரம்** :
காலை மணி 8.00 முதல் 10.30 வரை

**பங்கேற்பாளர்**
தைப்பிங் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவர்கள்

**இடம்** :
தைப்பிங் நகராண்மைத் திடல், தைப்பிங்,பேரா.

**ஏற்பாடு**:
தைப்பிங் மாவட்ட விளையாட்டு மன்றம்

**நுழைவு** : இலவசம்

**நோக்கம்**
- மாணவர்கள் மன மகிழ
- மன அழுத்தத்திலிருந்து விடுபட

**திறப்புரை** – தைப்பிங் நாடாளுமன்ற உறுப்பினர்
**உரையின் சாரம்** – ஏற்பாட்டாளரைப் பாராட்டுதல்/ நன்கொடை வழங்குதல்.

1. வெளியூரில் வசிக்கும் உன் தங்கைக்கு மாவட்ட நிலையிலான குறுக்கோட்டப் போட்டியைப் பற்றி விவரித்து ஓர் **உறவுக்கடிதம்** எழுதுக.

**அல்லது**

2. மாவட்ட நிலையிலான குறுக்கோட்டப் போட்டி குறித்து உன் நண்பரோடு உரையாடுகின்றீர். **அவ்வுரையாடலை** எழுதுக.

**அல்லது**

3. தைப்பிங் மாவட்ட விளையாட்டு மன்றச் செயலாளர் என்ற முறையில் மாவட்ட அளவில் நடந்த குறுக்கோட்டப் போட்டியை ஒட்டி **செயலறிக்கை** எழுதுக.

[30 புள்ளி]

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1. கோவிட் 19
   இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை ஒன்றனை எழுதுக.

2. அறிவியல் வளர்ச்சியினால் மனித குலத்திற்கு ஏற்படும் விளைவுகள்.
   இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3. வெற்றி
   இதனைக் கருப்பொருளாகக் கொண்டு **சிறுகதை** எழுதுக.

[70 புள்ளி]

தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது
KERTAS PEPERIKSAAN TAMAT

**பயிற்சி 4**

**பொதுக்கட்டளை:**
இக்கேள்வித்தாள், பிரிவு அ, பிரிவு ஆ என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக இரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**
[பரிந்துரைக்கப்படும் நேரம்: 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதிக்கு ஏற்ப **வழிகாட்டிக் கட்டுரை** ஒன்றனை எழுதுக. கீழ்க்காணும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.

**தமிழர் கலைகள்**

**கட்டடக் கலை**
- அழகுக் கலைகளில் முதலாவது
- வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள், கோவில்கள் கட்டுவது.
- மரம், செங்கல், சுண்ணாம்பு பொருள்களால் உருவாக்குதல்





**மருத்துவக் கலை**
- சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம்
- மூலிகை, தாது, விலங்கு உறுப்புகள் பயன் படுத்தப்பட்டன
- கிராமப்புற மக்கள் அதிகம் பயன்படுத்துவர்

**சிற்பக் கலை**
- கலைகளுள் இரண்டாவது. மிகவும் நுட்பமானது.
- இயற்கை உருவங்களையும் (மனிதன், விலங்கு...) கற்பனை உருவங்களையும் (கடவுள், தெய்வம், தேவர்...)
- கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனதிற்கு இன்பம் கொடுக்கும்.



**இசைக் கலை**
- முத்தமிழ்களில் ஒன்று
- அழகுக் கலைகளில் நான்காவது
- இசைத்தமிழ் என்றும் கூறுவர்

**நடனக் கலை**
- முத்தமிழ்களில் ஒன்று
- தொல்காப்பியம், சிலப்பதிகாரத்தில் சான்றுகள் உண்டு
- தமிழர் வாழ்வில் அழகியலையும், கலைநுட்பத்தையும் வெளிப்படுத்துகின்றன





1. அயல் நாட்டில் வசிக்கும் உன் நண்பன் தமிழர்களின் கலைகள் குறித்து அறிய விரும்புகின்றான். அவனுக்குத் தமிழர்களின் கலைகள் குறித்து விளக்கி **நட்புக் கடிதம்** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

2. தமிழர் கலைகள் குறித்து உன் நண்பனுடன் உரையாடுகின்றாய். **அவ்வுரையாடலை** எழுதுக.

**அல்லது**

3. உமது பள்ளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மொழி வாரத்தில் தமிழர் கலைகள் குறித்து உரையாற்றுகின்றாய். **அவ்வுரையை** எழுதுக.

[30 புள்ளி]

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1. குடும்பம்
   இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை ஒன்றனை எழுதுக.

2. இளைஞர்களின் போதைப்பொருள் பழக்கத்தினால் மட்டுமே நாட்டின் வளர்ச்சி பாதிப்படைகின்றன.
   இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3. உன் வசிப்பிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கணினி கண்காட்சியை வருணித்து **வருணனை** கட்டுரை ஒன்றனை எழுதுக.

[70 புள்ளி]

தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது
KERTAS PEPERIKSAAN TAMAT


**பயிற்சி 5**

**பொதுக்கட்டளை:**
இக்கேள்வித்தாள், பிரிவு அ, பிரிவு ஆ என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக இரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**
[பரிந்துரைக்கப்படும் நேரம்: 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதிக்கு ஏற்ப **வழிகாட்டிக் கட்டுரை** ஒன்றனை எழுதுக. கீழ்க்காணும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.

**சுற்றுச்சூழல் தூய்மைக்கேட்டிற்கான காரணங்கள்**




1. சுற்றுச்சூழல் தூய்மைக்கேட்டிற்கான காரணங்கள் குறித்து உன் நண்பனோடு உரையாடுகிறாய். **அவ்வுரையாடலை** எழுதுக.

**அல்லது**

2. உமது குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் தூய்மைக்கேட்டிற்கான காரணங்களை விளக்கி மாவட்ட இலாகா இயக்குநருக்கு, **அலுவல் கடிதம்** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

3. மனிதனின் பொறுப்பற்ற செயல்கள் சுற்றுச்சூழலுக்குப் பெருங்கேட்டை விளைவிக்கின்றன. இத்தலைப்பில் ஓர் **உரை** எழுதுக.

[30 புள்ளி]

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்துத் துறையே முக்கியக் காரணம்.
   இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

2. நாட்டின் தொழில்துறையில் பணியாற்ற அந்நியத் தொழிலாளர்களைத் தடை செய்வதால் ஏற்படும் விளைவுகள்.
   இத்தலைப்பில் **விவாதக்** கட்டுரை எழுதுக.

3. கருணை உள்ளம்
   இதனைக் கருப்பொருளாகக் கொண்டு **சிறுகதை** எழுதுக.

[70 புள்ளி]

தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது

KERTAS PEPERIKSAAN TAMAT

தமிழ்மொழி தாள் 2

# பிரிவு அ:
# கருத்துணர்தல்
# (பல்வகை)

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
**வினாக்கள் 1 முதல் 6 வரை**
**[ 12 புள்ளி ]**

**பொதுவான விளக்கம்**
*வினாக்கள் 1 முதல் 6 வரை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் தூண்டல் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் கேட்கப்பட்டிருக்கும்.

- கருத்துப்படம் / விளக்கப்படம்
- சுவரொட்டி / பதாகை / கையேடு
- உரைவீச்சு / புதுக்கவிதை / ஹைக்கு
- துண்டுப்பிரசுரம் / சிறுகுறிப்பு
- அறிவிப்பு / அழைப்பிதழ் / நிகழ்ச்சி நிரல் / செய்தி
- கடிதம் / நினைவுக்குறிப்பு / சிறு பனுவல்
- அட்டவணை / வரிப்படம் / வரைபடம் / குறிவரைவு (பட்டை, வட்டம், கோடு)
- நகைச்சுவைத் துணுக்கு / கேலிச்சித்திரம் / துணுக்கு
- உள்நாட்டு/ வெளிநாட்டுப் படைப்பாளர்கள் (மொழி, இலக்கியம், கல்வி, விளையாட்டு, கலை, அறிவியல், தகவல் தொழில்நுட்பம், ஊடகம், பொது)
- கேள்விகள் 5 முதல் 6 வரை 80% உள்நாட்டினர் பற்றியதாக அமைந்திருக்கும்.

**வினா 1**
- மாணவர்கள் விளக்கப்படத்திலுள்ள கருத்தை எழுத வேண்டும்.
- வாக்கியம் முழுமையாக இருக்க வேண்டும் (ஒரே வாக்கியத்தில் எழுத வேண்டும்).
- வாக்கியத்தில் இரு செய்திகள் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- கொடுக்கப்பட்ட துணைச்சொற்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.
- மொழியணிகளை விடையாக எழுதக்கூடாது. எ.கா:நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**வினா 2**
- மாணவர்கள் விளக்கப்படத்திலுள்ள கருத்தை எழுத வேண்டும்.
- வாக்கியங்களை அப்படியே எழுதக்கூடாது.
- மறைபொருள் அறிந்து எழுத வேண்டும்

**வினா 3**
- வினா – அட்டவணை, குறிவரைவு (பட்டை, புள்ளி, கோடு, வட்டம்), வரிபடக்கருவி, விளம்பரம், வரைபடம் போன்ற அமைப்புகளில் அமைந்திருக்கும்.
- விடை – புதைநிலைக் கருத்தாக இருக்க வேண்டும்.


**வினா 4**
- புதுக்கவிதை/ உரைவீச்சு வடிவத்தில் இருக்கும்.
- கவிதை வரிகளை விடையாக எழுதக்கூடாது.

**வினா 5**
- உள்நாட்டு / வெளிநாட்டுப் படைப்பாளர்கள் (சாதனையாளர்கள், தமிழறிஞர்கள், விளையாட்டாளர்கள், சமூகத் தலைவர்கள்) பற்றிய பனுவலாக அமைந்திருக்கும்.
- கேள்வியைக் கூர்ந்து கவனித்து; கேள்வியில் கருமையாக்கப்பட்ட சொல்லை அடையாளம் காண வேண்டும்.
- இரண்டு விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் (இரண்டுக்கு மேல் எழுதப்பட்ட கருத்துகள் மதிப்பிடப்படாது).

**வினா 6**
- இரண்டுக்கு மேல் எழுதப்பட்ட கருத்துகள் மதிப்பிடப்படா.
- மாணவர்கள் பனுவலை முழுமையாக வாசிக்க வேண்டும்.
- கேள்விக்கான பதில் கொடுக்கப்பட்ட பனுவலில் இருக்கும்.

**மாதிரி வினாக்கள்**

1. கீழ்க்காணும் படம் உணர்த்தும் **கருத்து** யாது? (2புள்ளி)




✓ முதியவர்களுக்குத் தெரிந்திருக்கும் உடற்பயிற்சியின் அருமைகூட இன்றைய இளையோர்ககளுக்குத் தெரியவில்லை.

♦ முதல் செய்தி: முதியவர்களுக்குத் தெரிந்திருக்கும் உடற்பயிற்சியின் அருமைகூட. (1 புள்ளி)

♦ இரண்டாம் செய்தி: இன்றைய இளையோர்களுக்குத் தெரியவில்லை. (1 புள்ளி)

✓ முதியோர்போல இன்றைய இளையோர் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

2. கீழ்க்காணும் பனுவல் வழி எழுத்தாளர் உணர்த்த வரும் முக்கியக் கருத்து யாது? (2புள்ளி)

**சமுதாயச் சிற்பிகள்**

நமது சமுதாயத்தின் மீது அளவற்ற அக்கறை கொண்டு நல்வழி காட்டியவர்கள் பலர். திரு. வி. கலியாண சுந்தரனார், மறைமலை அடிகளார், டாக்டர் மு. வரதராசனார், மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரனார் போன்றோர் நமக்கு நல்லாசான்களாக இருந்து வாழ்க்கைக்கு வழிகாட்டியுள்ளனர். இந்தச் சமுதாய சிற்பிகள், சமுதாயம் தரணியில் சிறந்தோங்கி தமது சீரிய எண்ணங்களைப் படைப்புகளின் மூலம் உணர்த்தியுள்ளனர்.

டாக்டர் மு. வரதராசனாரின் தம்பிக்கு, தங்கைக்கு, நண்பருக்கு, காந்தி அண்ணல் ஆகிய நூல்கள் இன்றைய சமுதாயத்திற்கு ஆலோசனை தரும் அரிய நூல்களாகும். இளைஞர்கள் எவ்வாறு வாழ வேண்டும்? இளைஞர்கள் எவற்றைப் பின்பற்றி வாழ வேண்டும்? என்பனவற்றை இந்நூல்களில் உய்த்துணரலாம்.


மகாகவி பாரதியாரின் எழுச்சிப் பாடல்களும் கதைகளும் கடிதங்களும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு கொடுப்பவனாக உள்ளன. வெந்ததைத் தின்று வேகாததைப் பேசி சீரழியும் சமுதாயத்திற்கு 'மனதில் உறுதி வேண்டும்', 'அச்சமில்லை அச்சமில்லை' ஆகிய பாரதியாரின் பாடல்கள் அனைவருக்கும் அருமருந்தாக உள்ளன. நம் முன்னோர் எழுதியவற்றை பின்பற்றி நடந்தாலே நாம் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

✓ இன்றைய இளைஞர்கள் முன்னோர்களின் வழிகாட்டுதல்களைப் படிப்பினையாகக் கொண்டு நன்னெறிப் பண்பாளராக மாற வேண்டும்.

✓ நாம், சான்றோர்களின் நூல்களை வாசித்து நல்ல பண்புகளைக் கொண்டவர்களாக வாழவேண்டும்.

✓ இன்றைய சமுதாயம் நல்ல படைப்பாளர்களின், வழிகாட்டும் நூல்களை வாசித்து ஒழுக்கமுள்ள மனிதர்களாக வாழவேண்டும்.

3. கீழ்க்காணும் குறிவரைவு உணர்த்தும் **உட்கருத்து** யாது? (2புள்ளி)



- ✓ நம் நாட்டு மக்களிடையே உடற்பருமன் குறித்த விழிப்புணர்வு குறைந்தே காணப்படுகிறது.
- ✓ சிறார்களிடையே அதிகரித்துவரும் உடற்பருமனைத் தவிர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.
- ✓ சிறார்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைப் பின்பற்றினால் உடற்பருமனைத் தவிர்க்கலாம்.

4. கீழ்க்காணும் புதுக்கவிதையில் **கவிஞரின் எதிர்பார்ப்பு** யாது? (2புள்ளி)

**எழுவாய் தமிழா !!!**

தமிழா! தமிழா! துயின்றது போதும்,
தடைகள் தகர்க்க நீ எழுவாய்
தரித்திரம் தன்னில் திளைத்தது போதும்
சரித்திரம் படைக்க நீ எழுவாய்
கனவில் காலம் கரைந்தது போதும்
உண்மையை உணர்த்த நீ எழுவாய்
முடியும் என்ற வார்த்தையைத் தவிர
மற்றதை மறந்து நீ எழுவாய்.

- ✓ தமிழர்கள் முன்னேற்றப் பாதையை நோக்கி பீடுநடை போட வேண்டும்.
- ✓ தமிழர்கள் சவால்களை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டும்.

5. கீழ்க்காணும் பனுவல் வழி எழுத்தாளர் உணர்த்த வரும் முக்கியக் கருத்து யாது? (2புள்ளி)



எம். துரைராஜ் மலேசிய எழுத்தாளர்களுள் ஒருவராவார். 1950ஆம் ஆண்டு முதல் இவர் மலேசியத் தமிழ் இலக்கியத்துறையில் ஈடுபட்டு வந்தார். பெரும்பாலும் கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். இவரது 'பாதைகளும் பயணங்களும்' எனும் நூல் மலேசியாவிலும் தமிழகத்திலும் லண்டன் தமிழ்ச் சங்கத்திலும் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் வெளியீடு கண்டுள்ளது. அஃது ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1963ஆம் ஆண்டு முதன்முதலில் மலேசியத் தொலைக்காட்சி, தமிழ்ச்செய்தி ஒளிபரப்பைத் தொடங்கியபோது, அந்தச் செய்தியைத் தொகுத்து வழங்கிய பெருமை இவருக்குண்டு. இவர் சிங்கப்பூரில் 'புதுயுகம்' இதழின் ஆசிரியராகவும் இருந்தவர். மலேசியாவின் 'தமிழ் நேசன்' பத்திரிகை துணை ஆசிரியராகவும் ஞாயிறு பதிப்பின் பொறுப்பாசிரியராகவும் இருந்தவர். மலேசியத் தொலைக்காட்சித் தமிழ்ச்செய்திப் பிரிவின் பொறுப்பாசிரியராகவும் 14 வருடங்களாகத் தகவல் அமைச்சின் 'உதயம்' இதழ் ஆசிரியராகவும் இருந்தவர்.

- ✓ சிங்கப்பூரில் 'புதுயுகம்' இதழின் ஆசிரியராக இருந்தவர்.

- ✓ தமிழ் நேசன் பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்தார்.
- ✓ தமிழ் நேசன் பத்திரிகையின் ஞாயிறு பதிப்பின் பொறுப்பாசிரியராக இருந்தார்.
- ✓ 14 வருடங்களாகத் தகவல் அமைச்சின் ‘உதயம்’ இதழ் ஆசிரியராக இருந்தவர்.

(ஏதேனும் 2 விடை)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்து கிசோனா செல்வதுரை பற்றிய இரண்டு சிறப்புகளை எழுதுக. (2 புள்ளி)

**பூப்பந்து உலகின் புதிய சகாப்தம்**
**கிசோனா செல்வதுரை**






விளையாட்டுத் துறையில் மலேசிய இந்தியர்களின் பெயரை ஓங்கச் செய்தவர்கள் பலர். அவர்களில் இன்று நமது இந்தியர்களின் பெயரை மலேசியப் பூப்பந்து அரங்கில் மட்டுமல்லாமல் உலக அளவில் பெயரைப் பதிக்கத் தொடங்கியுள்ளார் கிசோனா செல்வதுரை. இவர் தனது பத்து வயதில் 2009ஆம் ஆண்டு எம்.எஸ்.எஸ்.எம் பூப்பந்து போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தை வென்று பலரை அதிர்ச்சியடையச் செய்தார். பத்து வயதில் அப்பட்டத்தை வென்று சாதனைச் செய்தார். 2019-ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் சீ போட்டியில் மலேசியாவிற்குப் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கத்தை வென்று நம் நாட்டின் பெருமைமிக்க பூப்பந்து விளையாட்டாளர்களில் ஒருவராக உருவெடுத்தார். தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு சுவிடன் நாட்டில் நடைபெறவுள்ள உலகப் புகழ்ப் பெற்ற ‘ஊபர்’ கிண்ணப் பூப்பந்து போட்டிக்கு மலேசியாவைப் பிரதிநிதிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது மலேசிய இந்தியர்களுக்கான பெருமை.

- ✓ பத்து வயதில் எம்.எஸ்.எஸ்.எம் பூப்பந்து போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தை வென்றார்.
- ✓ பிலிப்பைன்ஸ் சீ போட்டியில் மலேசியாவிற்குப் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கத்தை வென்று தந்தார்.
- ✓ சுவிடன் நாட்டில் நடைபெறவுள்ள உலகப் புகழ்ப் பெற்ற ‘ஊபர்’ கிண்ணப் பூப்பந்து போட்டிக்கு மலேசியாவைப் பிரதிநிதிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (கருத்துணர்தல் - பல்வகை)**

1. கீழ்க்காணும் கருத்துப்படத்தைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

**"எண்ணம் போல் வாழ்க்கை"**



**தீய சிந்தனை** | **நற்சிந்தனை**

இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது? [2 புள்ளி]

.


2. கீழ்க்காணும் கடிதத்தில் மகனின் **எதிர்பார்ப்பு** யாது? [2 புள்ளி]

அன்புள்ள அம்மாவுக்கு,
வணக்கம். ராணுவ தளத்தில் இருந்து...
நான் திரும்பாவிட்டால் சோர்ந்துவிட வேண்டாம். ஏனெனில், கடவுள் எல்லாவற்றையும் சரியாகத்தான் செய்வார். அடுத்த பிறவியில் நான் மறுபடியும் உங்களைச் சந்திப்பேன் என்பதை மறந்துவிட வேண்டாம். நான் இதை எப்படி எடுத்துக் கொள்கிறேன் என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் சுவாமி சுகபோதானந்தா எழுதிய 'மனமே ரிலாக்ஸ் ப்ளீஸ்' என்ற தன்னம்பிக்கை நூலைப் படியுங்கள். கடவுள் நம்பிக்கை முழுமையாக இருப்பதால் எனக்குப் பயமில்லை.

அன்புடன்
மகன்

3. கீழ்க்காணும் குறிவரைவு உணர்த்தும் **உட்கருத்து** யாது? [2 புள்ளி]

**மலேசிய அனைத்துலகப் புத்தகக் கண்காட்சிக்கு வருகை புரிந்தவர்கள்**




4. கீழ்க்காணும் புதுக்கவிதையின் வழி கவிஞர் கூறவரும் **கருத்து** யாது? [2 புள்ளி]

> **"வலிமை" நிறைந்தவர்கள்**
> **சபையில் இருக்கும்போது**
>
> **வாய்மையும்**
> **தன் "வலிமை" இழந்து**
> **பொய்மையாகிவிடும்...!**
>
> **பொய்மையும்**
> **"வலிமை" பெற்று**
> **வாய்மையாகி விடும்!**

5. ஔவை துரைசாமி ஆற்றிய இரண்டு **தமிழ்ப்பணிகளை** எழுதுக. [2 புள்ளி]

> ஔவை துரைசாமி தமிழுக்காகப் பல சேவைகளை ஆற்றியுள்ளார். தமிழ்மொழியின் பற்றுதலின் காரணமாகத் தாம் பார்த்து வந்த உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் பணியில் இருந்து விலகி, அதன் பின் தமிழ்க் கற்று தமிழறிஞராக உயர்ந்தவர். இவர் தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ் முதலிய தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதியுள்ளார். சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார். அந்நூல்கள் பல்கலைக்கழகத்தின் வெளியீடுகளாக வெளியிடப்பட்டன. இவர் ஐங்குறுநூறு உரை, புறநானூறு உரை, நற்றிணை உரை எனப் பல வரலாற்று நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளார்.

6. மலேசிய வரலாற்று ஆய்வில் வி.நடராஜன் ஆற்றிய இரண்டு **பணிகளை** எழுதுக. [2 புள்ளி]



வி. நடராஜன் மலேசிய நாட்டில் விரல் விட்டு எண்ணக்கூடிய வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவர். மலேசியாவின் வடப்பகுதியான கெடா மாநிலத்தில் அமைந்துள்ள பூஜாங் பள்ளத்தாக்கு, தமிழ் வரலாற்றில் புகழ்ந்து கூறப்படும் கடாரத்தின் வரலாற்றை நூல் வடிவில் பதிவு செய்தவர். இங்கு நடத்தப்பட்ட அகழ்வாராய்வுகளில் தோண்டி எடுக்கப்பட்ட அரும்பொருள்களைக் கொண்டு மலேசிய அரசு இங்கு ஓர் அருங்காட்சியகத்தை அமைத்துப் பராமரித்து வருகிறது. இந்தப் பகுதி பற்றித் தெரியாத பல உண்மைகள் பற்றி மலேசியத் தமிழரான வீ. நடராஜா "பூஜாங் வேலி: தி வொண்டெர் தெட் வாஸ் என்சியன் கெடா" என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதியுள்ளார். இந்நூல் "சோழன் வென்ற கடாரம்" என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. கடாரத்தில் தமிழர்களின் வரலாற்றுச் சுவடுகளைச் சான்றுகளுடன் படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும், வெறும் வரலாற்றுக் கதைபோல் இல்லாமல் பேராய்வு கொண்ட நூலாக இது விளங்குகிறது. இந்நூல் இருபது கால ஆய்வுக்குப் பின் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (கருத்துணர்தல் - பல்வகை)**

1. கீழ்க்காணும் **கருத்துப்படத்தைக்** கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.




இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது? [2 புள்ளி]

.

2. கீழ்க்காணும் அறிவிப்பு உணர்த்தும் **கருத்து** யாது? [2 புள்ளி]

**நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமா???**


ஒரு நாளில் 10,000 அடிகள் நடப்பது சிறந்த உடற்பயிற்சி.

60 நிமிடத்தில் 4.8 கி. மீ தூரம் நடப்பது 265 கலோரிகளை ( ஒரு ரொட்டிச்சானாய் உணவின் கலோரி அளவு) எரிக்கும்.

**அலுவலகத்தில்**
1. மாடிக்குச் செல்ல படிக்கட்டுகளை உபயோகித்தல்
2. தூரத்தில் வாகனத்தை நிறுத்தி நடந்து செல்லுதல்
3. அலுவலகத்தில் தொலைபேசியைப் பயன்படுத்தாமல் அலுவலகத்தில் தோழருடன் நடந்து சென்று உரையாடுதல்
4. மதிய உணவுக்குப்பின் பத்து நிமிடம் வரை நடக்க நேரம் ஒதுக்குதல்

**வீட்டில்**
1. கடைக்கு நடந்து செல்வது
2. ஓய்வு நேரத்தில் குடும்பத்தினருடன் நடப்பது
3. வீட்டைச் சுத்தம் செய்வது
4. நம் வாகனத்தை நாமே கழுவுவது

3. கீழ்க்காணும் குறிவரைவு உணர்த்தும் **உட்கருத்து** யாது? [2 புள்ளி]



4. கொடுக்கப்பட்டுள்ள உரைவீச்சின் **உட்கருத்து** யாது? [2 புள்ளி]

**யாரங்கே...!**
**இளைஞனா....**
**ஏன் தலை குனிந்து நடக்கிறாய்?**
**ஓ...!**
**கையில் கைப்பேசி..**
**நிமிர்ந்து**
**பார்ப்போற்ற வாழ்வது எப்போது...!**

*(சரஸ், பினாங்கு)*

5. தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் **சிறப்புகள்** இரண்டனை எழுதுக. [2 புள்ளி]

தமிழவேள் கோ.சாரங்கபாணி தமிழர்களின் வாழ்க்கையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தவராவார். மலேசியாவில் தமிழர் திருநாள் தமிழரின் ஒற்றுமைத் திருநாளாக உருவாகப் பாடுபட்டவராவார். இளைஞர்களைத் தமிழ்மொழியோடு எழுச்சி பெற வைக்க, மாணவர் மணிமன்ற மலரைத் தொடங்கியதோடு, தமிழ் இளைஞர் மணிமன்றத்தையும் தோற்றுவித்தார். மாணவர் மணிமன்றத்தின் மூலம் நாட்டில் தமிழ் எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியப் பெருமை இவரைச் சேரும். தந்தை பெரியாரின் கருத்துகள் மீது ஈர்ப்புக் கொண்ட இவர் 1934-இல், தாம் தொடங்கிய 'தமிழ் முரசு' வார இதழில், முற்போக்குக் கருத்துகள் மற்றும் சாதி ஒழிப்பு ஆகியவற்றை முதன்மை இலக்காகக் கொண்டு எழுதினார். தனித்துவமாக இயக்கிய இப்பத்திரிக்கை, மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று ஓராண்டில் தினசரி பத்திரிக்கையாக வெளிவரத் தொடங்கியது.

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்து, ஸ்குவாஷ் வீராங்கனை சிவசங்கரி சுப்ரமணியம் பெற்ற இரண்டு **சிறப்புகளை** எழுதுக. [2 புள்ளி]

சிவசங்கரி சுப்ரமணியம் (பிறப்பு: 24 ஜனவரி 1999) கெடா, சுங்கை பட்டாணியில் பிறந்த மலேசியா நாட்டின் ஸ்குவாஷ் வீராங்கனை ஆவர். இவர் மே 2018இல், உலக தரவரிசையில் 38ஆவது நிலையை அடைந்தார். இதுவே, இதுவரை இவர் பெற்றச் சிறப்புத் தரவரிசையாகும். 2018ஆம் ஆண்டு இவர், சடோமி வாடனபே-வைத் தோற்கடித்து பிரிட்டிஷ் ஜூனியர் ஓபன் சான்பியன்ஷிப் பட்டத்தை வாகை சூடினார். இவர் 2011-இல் மலேசிய விளையாட்டு மன்றத்தின் சிறந்த வளர்ந்துவரும் விளையாட்டாளர் விருந்தைப் பெற்றார். ஜூலை 8- 2018இல் நடைபெற்ற 34ஆவது ஓஹன தேசிய நிலை ஸ்குவாஷ் போட்டியில் லோ வீ வெர்ன்-யை வெற்றிக்கொண்டு வெற்றியாளர் பட்டத்தை வாகைசூடினார். இதன்மூலம், சிவசங்கரி மலேசிய நாட்டின் மகளிர் ஸ்குவாஷ் போட்டியை வென்ற மிகவும் இளைய விளையாட்டாளராகத் திகழ்கிறார்.

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (கருத்துணர்தல் - பல்வகை)**

1. கீழ்க்காணும் **கருத்துப்படத்தைக்** கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

**கொரோனா ஏழைகளைக் கொல்கிறது**




இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது? [2 புள்ளி]

.

2. கீழ்க்காணும் பனுவலின் வழி மாணவர்களிடம் **எதிர்பார்ப்பது** என்ன? [2 புள்ளி]



ஒரு மாணவரின் அறிவுக் கண்களைத் திறந்து வைப்பவர் ஆசிரியர். 'மாதா பிதா குரு தெய்வம்' என்பதற்கு ஏற்ப பெற்றோருக்கு அடுத்து மிகவும் மதிக்கப்படுபவர் ஆசிரியர்தான். ஆசிரியரின் சேவை மிகவும் அளப்பரியது. ஆசிரியர் பள்ளியில் கல்வி கற்பிக்கிறார். அவர் ஒரு மாணவனைக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்கிறார். மாணவனுக்கு நற்பண்புகளையும் ஒழுக்க நெறிகளையும் கற்றுத் தருகின்றார்.

அதுமட்டுமல்லாமல், இவ்விருபத்தோராம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் பன்முகத் திறன்களைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பாடம் கற்பிப்பதோடு அவர்களின் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்கின்றனர். ஆசிரியர்களின் மேன்மையை மதிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மே திங்கள் 16ஆம் நாள் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

3. கீழ்க்காணும் அட்டவணை உணர்த்தும் **உட்கருத்து** யாது? [2 புள்ளி]

| சிலாங்கூர் மாநிலத்தில் டிங்கிக் காய்ச்சல் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **ஆண்டு** | **எண்ணிக்கை** | **இறப்பு எண்ணிக்கை** |
| 2019 | 43065 | 67 |
| 2020 | 39002 | 55 |

4. கீழ்க்காணும் புதுக்கவிதையின் வழி கவிஞர் உணர்த்தவரும் **கருத்து** யாது? [2 புள்ளி]

**உறக்கத்திலும்**
**விழித்திருப்பவன்**
**ஜெயிப்பான்!**
**விழித்திருந்தும்**
**தூங்குபவன்**
**இழப்பான்!".**

5. ஏ.பி.ஜே அப்துல் கலாம் அறிவியல் துறையில் படைத்த இரண்டு **சாதனைகளை** எழுதுக? [2 புள்ளி]

ஆவுல் பக்கிர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம் பொதுவாக டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் இந்தியாவின், 11ஆவது குடியரசு தலைவராக பணியாற்றிய இந்திய அறிவியலாளரும், நிர்வாகியும் ஆவார். கலாம் இந்திய இராணுவத்திற்காக ஒரு சிறிய ஹெலிகாப்டரை வடிவமைத்துக் கொடுத்துப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பில் பணித்துறையைத் தொடங்கினார்.

இந்தியாவின் முதல் உள்நாட்டு செயற்கைக்கோள் புவிச்சுற்றின் அருகே அப்துல் கலாம் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக 1980இல் ஏவப்பட்டது. 1970-இலிருந்து 1990-வரை "போலார் எஸ்.எல்.வி" மற்றும் "எஸ்.எல்.வி-III" செயற்கைக்கோள் திட்டங்களுக்காக முயற்சி மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்தார். 1970இல் "எஸ்.எல்.வி" விண்வெளிக்கலனைப் பயன்படுத்தி ரோகினி-1 விண்வெளியில் ஏவப்பட்டது. இஃது இசுரோவின் சாதனையாகும். ஏ.பி.ஜே அப்துல் கலாம் இதயம் சார்ந்த மருத்துவர் சோம இராஜுவுடன் சேர்ந்து "கரோனரி ஸ்டெண்ட்" உருவாக்கி 'கலாம், ராஜு ஸ்டெண்ட்' என பெயரிடப்பட்டது. 2012-இல் கிராமப்புறங்களில் உள்ள சுத்த வழிமுறைக்காக இவர்கள் வடிவமைத்த டேப்லெட் கணினி "கலாம், ராஜு டேப்லெட்" என்று பெயரிடப்பட்டது.

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தீனா முரளிதரனின் இரண்டு **பண்புகளை** எழுதுக.
[2 புள்ளி]

பூப்பந்துப்போட்டியின் மகளிர் பிரிவில் தேசிய வெற்றியாளராகவும் சுவிஸ் பூப்பந்துப்போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் வாகையர் பட்டத்தையும் சூடியிருக்கும் முதல் மலேசிய இந்திய வீராங்கனை என்ற சாதனையை மலேசிய இளம் பூப்பந்து வீராங்கனையான தீனா முரளிதரன் படைத்திருக்கிறார். தேசிய வாகையர் போட்டியில் வென்றிருந்தாலும் அனைத்துலக போட்டிகளில் முத்திரை பதிக்கவேண்டும் என்ற வேட்கையுடன் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். 6 வயதில் இருந்தே பூப்பந்து விளையாடி வருதாகவும் வெற்றிக்காக நீண்ட காலம் பயிற்சி செய்து வந்துள்ளதாகவும் தெரிவித்தார். இவருக்கு இத்துறையில் மிகவும் பக்கபலமாக இருப்பவர்கள் இவரது பெற்றோரான முரளிதரன் - டாக்டர் பரிமளா தம்பதியினர். இவர்களின் இரண்டாவது பிள்ளையான தீனா, தனது முக்கிய இலக்கு ஒலிம்பிக்போட்டி வரை சென்று பதக்கம் வெல்வதுதான் என நம்பிக்கையுடன் கூறுகிறார்.

**பிரிவு அ : கருத்துணர்தல் (உரைநடை)**
**வினாக்கள் 7 முதல் 10 வரை**
**[ 18 புள்ளி ]**

**பொதுவான விளக்கம்**

- பனுவல் ஏறக்குறைய 1¼ பக்கத்தில் அமைந்திருக்கும்.
- வினாக்கள் 7 முதல் 9 வரை அறிதல், புரிதல், பகுத்தாராய்தல், தொகுத்தாய்தல், மதிப்பிடுதல் போன்ற அடிப்படையில் அமையலாம்.
- மாணவர் முழுமையான வாக்கியத்தில் விடை அளித்தல் வேண்டும்.
- வினா 10 உயர்நிலைச் சிந்தனைக் கேள்வியாக அமையும்.
- இப்பகுதிக்கு 18 புள்ளி வரையறுக்கப்பட்டுள்ளது.

**வினா 7**

- வினா அறிதல் / பகுப்பாய்வு (Analisis) அமைப்பில் அமைந்திருக்கும்.
- வினா பயன்பாடு அமைப்பில் அமைந்திருக்கும்.
- விடை சொல் அல்லது சொற்றொடராக அமைந்திருக்க வேண்டும்.

**வினா 8**

- மாணவர்கள் விளக்கப்படத்திலுள்ள கருத்தை எழுத வேண்டும்.
- வாக்கியங்களை அப்படியே எழுதக்கூடாது.
- மறைபொருள் அறிந்து எழுத வேண்டும்

**வினா 9**

- வினா தொகுத்தாய்தல் (Sintaksis) முறையில் அமைந்திருக்கும்.
- விடை பனுவலையொட்டி அமைந்திருக்க வேண்டும்.

**வினா 10**

- உயர்நிலைச் சிந்தனை வினாவாக இருக்கும்.
- மாணவர் ஐந்து கருத்துகளை 50 சொற்களுக்குள் எழுத வேண்டும். .
- 50 சொற்களுக்கு மேல் எழுதப்பட்ட கருத்துகள் மதிப்பிடப்படா.
- நல்ல மொழிநடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- ஒரே பத்தியில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- வாக்கிய இயைபுக்கு இடைச்சொற்கள் பயன்பாடு இருப்பின் சிறப்பு.

## எடுத்துக்காட்டு வினாக்கள்

**வினாக்கள் 7 முதல் 10 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

வர்மம் என்பது உடலுள் இயங்குகின்ற நுண்மையான ஆற்றலை விளக்கும் சொல்லாகும். இத்தகு நுண்மையான, உடலுள் இயங்கும் ஆற்றலைப் பற்றிய கல்விக்குச் சித்தர்கள் வர்மக்கலை எனப் பெயரிட்டனர். கலை என்பது பல்வேறு செயற்கூறுகளை, நுட்பங்களை, அறிவுத் திறத்தை உட்கொண்டது. வர்மக்கலையும் பல்வேறு நுண்பொருள் சார்ந்த அறிவுக் கூறுகளைச் செயல்படுத்தும் திறம் கொண்டது. வர்மக்கலையின் மூலம் பல்வகை உடல் நோய்களைக் குணப்படுத்தலாம்.

வர்மக்கலை ஒரு மருத்துவக் கல்வியாகப் பண்டைய தமிழகத்தில் உலா வந்தது. இவ்வர்ம மருத்துவம் குருகுல முறையில்தான் இன்றளவும் போதிக்கப்பட்டு வருகின்றது. வர்ம மருத்துவத்தைப் போதிக்கும் குருக்களை ஆசான்கள் என்று அழைப்பர். இவர்கள் தம் மனத்திற்குப் பிடித்த சீடர்களுக்கு வர்மக்கலை மருத்துவத்தைக் கற்றுக் கொடுப்பர். இவர்களிடம் சீடர்கள் பன்னிரு ஆண்டுகள் தொடர்ந்து இக்கல்வியைக் கற்றுத் தேர்வார்கள். பன்னிரு ஆண்டுகள் கற்ற சீடர் ஒருவரே வர்ம ஆசானாகச் செயல்பட முடியும். இவ்வர்ம வித்தையைக் கற்கச் சீடருக்குப் பொறுமையும் அமைதியும் அடக்கமும் தேவையானதாகும்.

வர்ம மருத்துவத்தில், உடலுள் இயங்கும் பல்வேறு விதமான ஆற்றல்கள் செயல்படும் இடங்களை வர்ம இடங்கள் அல்லது வர்மப் புள்ளிகள் என வரையறை செய்துள்ளனர். உடலுள் 8000 வர்மப் புள்ளிகள் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இவற்றுள் 108 வர்மப் புள்ளிகளை அடிப்படை வர்மப் புள்ளிகள் என வகைப்படுத்தியுள்ளனர். வர்மப் புள்ளிகளைத் தொடுவர்மம், படுவர்மம், பக்கவர்மம், இணைவர்மம், நாள்வர்மம் எனப் பல்வேறு வர்மங்களாகப் பகுத்தும் விரித்தும் வர்ம நூல்கள் பேசியுள்ளன. இவ்வகையில் சுமார் 40க்கும் மேற்பட்ட வர்மப் பகுப்புகளைக் காணலாம்.

உடலில் நோய் வருவதற்கு இவ்வர்ம இடங்களில் உள்ள ஆற்றலின் சிதைவே காரணமாக அமையும். உடல் நோயைப் போக்குவதற்கு இவ்வர்ம இடங்களில் உள்ள ஆற்றலைச் சீரமைத்தல் வேண்டும். வர்ம இடங்களில் உள்ள ஆற்றலைச் சீரமைக்க, தட்டல், ஊன்றல், அமர்த்தல், பிடித்தல் என்பன போன்ற முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு ஆற்றலைச் சீரமைக்கும்போது வர்ம இடங்களில் மாத்திரை என்ற அழுத்த அளவில் தவறு ஏற்படாமல் செய்தல் வேண்டும்.

வர்ம மருத்துவ மருந்தியல் பிரிவில் மூலிகைகள், விலங்கு, பறவைகளின் மாமிசம், கொழுப்பு முதலானவை மட்டுமே சேரும். நேரடியான இரசாயனப் பொருள்களும் உலோகப் பொருள்களும் தாதுப் பொருள்களும் சேர்வதில்லை. எனவே, வர்ம மருத்துவ மருந்துகள் மிகமிகப் பாதுகாப்பானவை. இம்மருந்து முறைகளையும் செய்முறைகளையும் சித்தர்கள் தம் வர்ம நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

மருத்துவமும் ஆன்மிகமும் கலந்த ஒரு கலை வர்மக்கலை. எனவே, வர்ம மருத்துவத்தை ஆன்மிக மருத்துவம் எனவும் அழைக்கலாம். ஆன்மிகச் சாயம் பெருமளவில் பூசப்பட்டதனால் வர்மக்கலை பலருக்கும் கிடைக்காத **எட்டாக் கனியாக** ஆகிவிட்டது. இதனோடு ஆங்கிலேயரின் ஆதிக்கக் காலத்தில் இக்கலை முற்றிலுமாக மறைக்கப்பட்டது. மருத்துவ உலகத்திற்கே வர்மக்கலை மருத்துவம், மருந்துக்குக்கூடக் கிடைக்காமல் போய்விட்டது. இப்படி மறைக்கப்பட்ட தமிழரின் வர்ம மருத்துவத்தை உலகிற்குக் காட்ட வேண்டிய முக்கியக் கடமை தமிழனுக்கும் தமிழ் இனத்திற்கும் உண்டு.

**(முனைவர் ந. சண்முகம் – வர்ம மருத்துவம்)**

7. வர்மக்கலை எனக் குறிப்பிடப்படுவது யாது? [2 புள்ளி]

**<u>சித்தர்களின் வர்மக்கலை என்பது நுண்மையான, உடலுள் இயங்கும் ஆற்றலைப் பற்றிய கல்வியாகும்.</u>**

8. (அ) வர்மக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய **முக்கியமான தகுதியைக்** குறிப்பிடவும். [2 புள்ளி]

**<u>வர்மக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் பன்னிரு ஆண்டுகள் தொடர்ந்து இக்கல்வியைக் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டுமென்பது முக்கியத் தகுதியாகும்.</u>**

8. (ஆ) கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் **சூழலுக்கு ஏற்ற பொருள்** எழுதுக.

ஆன்மிகச் சாயம் பெருமளவில் பூசப்பட்டதனால் வர்மக்கலை பலருக்கும் **எட்டாக் கனியாக** ஆகிவிட்டது. [2 புள்ளி]

**<u>அரிதானதாக / அடைய முடியாத ஒன்றாக / கிடைக்க முடியாத ஒன்றாக.</u>**

குறிப்பு: ஏற்புடைய ஒரு விடை எழுதினால் போதுமானது.

9. வர்ம மருத்துவ மருந்துகள் மிகவும் பாதுகாப்பானவையாகக் கருதப்படுவதற்கான **காரணம்** யாது? [2 புள்ளி]

**<u>இரசாயன, உலோக, தாதுப் பொருள்கள் சேர்க்கப்படாமல் மூலிகைகள் மட்டுமே சேர்க்கப்படுவதால் வர்ம மருத்துவ மருந்துகள் மிகவும் பாதுகாப்பானவையாகக் கருதப்படுகின்றன.</u>**

10. வர்மக்கலையை அனைவரும் அறியும்படி செய்திட மேற்கொள்ள வேண்டிய ஐந்து நடவடிக்கைகளை 50 சொற்களில் ஒரு பத்தியில் எழுதுக. [10 புள்ளி]

**<u>முதற்நடவடிக்கையாக, வர்மக்கலை தொடர்பான தகவல்களைத் தொடர்ந்து தகவல் ஊடகங்களில் வெளியிட்டு வரலாம். அடுத்து, மாணவர்களுக்குப் பள்ளிகளில் வர்மக்கலையை ஒரு பாடமாக அல்லது புறப்பாடமாகப் போதிக்கலாம். தொடர்ந்து, வர்ம மருத்துவக் கல்வியை மருத்துவக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மருத்துவம் பயில்கின்ற மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கலாம். வர்மக்கலை தொடர்புடைய பழைய நூல்களைப் புதிதாக அச்சிட்டு வெளியிடலாம். இக்கலை தொடர்பான கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் நடத்துவதன்வழி இதன் முக்கியத்துவத்தை அனைவரும் அறியச் செய்யலாம்.</u>**

(46 சொற்கள்)

பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (கருத்துணர்தல் - வாசிப்புப் பகுதி)

**வினாக்கள் 7 முதல் 10 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகம் எவ்வளவோ மாறினாலும் வறுமை மாறாமல் இன்றளவும் தொடர்கிறது. மனிதன் முயற்சியோடும் வெற்றியோடும் வாழ்வதற்குக் குறுக்கே நிற்கும் முதற்பகை வறுமையாகும். வறுமையோடு தீவிரமாகப் போராடி, மீண்டும் அது தலையெடுக்காதபடி ஆழக் குழி தோண்டிப் புதைத்திட பெருமுயற்சி மேற்கொள்ள வேண்டுவது அவசியமாகும். வறுமையை முறியடிக்கக் கற்றுக் கொள்ளாவிடில், மனித சமுதாயத்திற்குச் செம்மை வாழ்வில்லை; வளர்ச்சியில்லை; மேன்மையில்லை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

வள்ளுவர், ஔவை போன்ற ஒரு சில சிந்தனையாளர்களையும் மிகச் சில கலைஞர்களையும் தவிர ஏனைய பெருமக்கள் வறுமையின் கொடுமையை முற்றிலும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ‘வறுமையில் செம்மை காண்பது’ என்ற போலிச் **சித்தாந்தம்** நம்மில் பலரது நாடி நரம்புகளில் பன்னெடுங் காலமாக இழையோடி வந்திருக்கிறது. வெளியுலகின் மாறுதல்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியதைக்கூடக் கற்றுக் கொள்ளவில்லை. ஆகவேதான், நம்மில் பலர் அடிப்படைத் தேவைகளில் முதல் தேவையான உணவுகூடக் கிடைக்காமல் இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

‘மானம், குலம், கல்வி, வண்மை(கொடைத்தன்மை), அறிவுடைமை,
தானம், தவம், முயற்சி, தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் இவை பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்’,
என்னும் ஔவையாரின் நல்வழியை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வறுமை நம்முடைய தன்னம்பிக்கையைக் குலைக்கிறது; ஊக்கத்தைக் கெடுக்கிறது; முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்கிறது; எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய சுதந்திரத்தைப் பறித்து, நம்மை அடிமைகளாக்குகிறது. பிறருடைய சுதந்திரத்தில் தலையிடாமல், தானும் சுதந்திரமாக வாழ விரும்பும் ஒவ்வொரு மனிதனும் முதலில் வறுமைத் தளையிலிருந்து விடுபட்டுத் தீர வேண்டும். வறுமைத் தளை என்பது அடிமைத் தளையின் மறுபெயர் எனின் மிகையாகா. வறுமையில் வாடும் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் குழந்தையும் அடிமைத்தனத்தில் வாடுகிறார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. அவர்கள் விருப்பப்படி வேலை செய்யவோ, உண்ணவோ, உடுக்கவோ, பொழுதைக் கழிக்கவோ அவர்களால் முடியாது. பழங்காலத்தில் மனிதர்கள் விலங்குகளைப் போல் அடிமைகளாக விற்கப்பட்டார்கள். இன்றுகூட உலகின் பல பகுதிகளில் கொத்தடிமைத்தனம் என்ற கொடிய முறை நிலவுகிறது. ஆனால், உண்மை என்னவெனில், வறுமையால் வாடும் ஒவ்வொரு மனிதரும் ஏதாவதொரு வகையில் அடிமையாகவே வாழ்கிறார் என்பதுதான்.

ஆகவே, நீங்கள் இப்போது எந்த நிலையிலிருந்தாலும் சரி, கவலைப்பட வேண்டாம்; வறுமையின் பிடியில் அகப்பட்டு மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாலும் அதற்காகக் கலங்க வேண்டாம். “இனி என்றுமே வறுமையில் வாடப் போவதில்லை” என்று உங்களுக்குள் ஒரு தீர்க்கமான முடிவு கட்டிக் கொள்ளுங்கள். அதற்கு முதலில் உங்களுக்கு வேண்டியது நம்பிக்கை. அதன்பிறகு நீங்கள் புதிய கண்கொண்டு உங்களைச் சுற்றிலும் வறுமைக்கெதிரான போராட்டம் நடத்தி நாளுக்கு நாள் வெற்றி பெற்றுவரும் மற்றவர்களைக் காணுங்கள். அவர்கள் தத்தமக்குத் தெரிந்த உழைப்பைக் கொண்டே போராடுகிறார்கள். அவர்களைப் போன்று நீங்களும் உங்களுக்குத் தெரிந்த உழைப்பையே கருவியாகக் கொள்ளுங்கள். வறுமையை மாய்ப்பதற்குக் குறுக்குவழி ஏதுமில்லை.

வறுமை என்ற பகைவன் நல்ல குணமும் ஒரு சேர அமையப் பெற்ற ஒரு தந்திரசாலி. தன்னை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இல்லாதவர்களை அவன் எளிதில் தன் கொடும்பசிக்கு இரையாக்கிக் கொள்கிறான். தன்னை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளவர்களுக்கோ அவனே

ஊக்கமும் உற்சாகமும் அளித்துத் தன்னோடு போராடச் சொல்கிறான். அத்தகைய நம்பிக்கையும் திட சித்தமும் உள்ளவர்களிடம் அவன் தோல்வியை ஏற்றுக்கொள்கிறான்.

7. ஏன் வறுமையை ஒழிக்க வேண்டுமென்று கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்? [2 புள்ளி]

8. (அ) நம்மில் பலரும் உணவுகூடக் கிடைக்காமல் துன்புறுவதற்கான காரணம் யாது? [2 புள்ளி]

8. (ஆ) கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் **சூழலுக்கு ஏற்ற பொருள்** எழுதுக.

வறுமையில் செம்மை காண்பது' என்ற போலிச் **சித்தாந்தம்** நம்மில் பலரது நாடி நரம்புகளில் பன்னெடுங் காலமாக இழையோடி வந்திருக்கிறது.

[2 புள்ளி]

9. ஒருவர் தம் வறுமையை ஒழிப்பதற்கு யாது செய்ய வேண்டும்? [2 புள்ளி]

10. உலகில் வறுமை ஏற்படுவதற்கான **ஐந்து காரணங்களை** 50 சொற்களில் ஒரு பத்தியில் எழுதுக. [10 புள்ளி]

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (கருத்துணர்தல் - வாசிப்புப் பகுதி)**

**வினாக்கள் 7 முதல் 10 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

இன்று அணுமுதல் அண்டம்வரை ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சி நம்மை வியக்க வைக்கிறது. அறிவியலின் துணையின்றி அரையங்குல வாழ்வைக்கூட இன்று நம்மால் நகர்த்த முடியா நிலை. இப்போக்குக்கு ஈடுகொடுப்பவர்களே இன்றைய வாழ்வில் வீறுநடைபோட முடியும். எனவே, அறிவியல் அறிவையும் உணர்வையும் முனைந்து வளர்க்க வேண்டியது இன்றைய சூழலின் கட்டாயமாகும். மொழியும் கலையும் பண்பாடும்கூட அறிவியல் சார்ந்து வளர வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

மற்ற இனமக்களுக்கு வேண்டுமானால் இதுவொரு புதுவகைப் போக்காக இருக்கலாம். ஆனால், தமிழினம் அறிவியல் உணர்விலும் சிந்தனையிலும் ஒரு காலத்தில் ஆழந்தோய்ந்திருந்த இனம் என்பதை வரலாறு கட்டியம் கூறிக்கொண்டுள்ளது. சங்க இலக்கியங்கள் எண்ணற்ற சான்றுகளை எடுத்தியம்புகின்றன. இன்னும் சொல்லப்போனால், அறிவியல் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலக்கியம் படைத்த பெருமை தமிழனுக்கு மட்டுமே உண்டு.

சங்க காலத்துக்கு முன்னதாக வாழ்ந்த தமிழன், சமயச் சாயல்படியாத அக்காலக்கட்டத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான். அறிவியல் அறிவும் உணர்வுமே அவன் வாழ்க்கையை உந்திக் கொண்டிருந்தன. வானவியலிலும் பூகோளவியலிலும் திறம்பட்டவனாகத் திகழ்ந்தான். உலகெலாம் கப்பல் செலுத்தி, வாணிகம் செய்து தன் வாழ்வை வளமாக்கிக் கொண்டான்.

அன்று அறிவியல் அடிப்படையில் தன் வாழ்வுச் சக்கரத்தை நகர்த்திய தமிழன், தன் அறிவியல் சிந்தனைகளை அவ்வப்போது பதிவு செய்துவைக்கத் தவறவில்லை. சான்றாக, இந்த உலகம் ஐம்பெரும் பூதங்கள் என்றழைக்கப்படும் ஐம்பெரும் அடிப்படைத் தனிமங்களால் ஆனது என்பதைப் பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் மேலை உலகம் உணரத் தொடங்கியது. ஆனால், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இதனை நன்குணர்ந்து தெளிந்து உலகுக்கு உணர்த்தியது தமிழினம். இவ்வாறு தமிழினம் வாழ்ந்துள்ளது வியப்பூட்டும் செய்தியாக உள்ளது.

இவ்வுலகம் எப்படி உருவாயிற்று என்பது மேலையுலகம் சொல்லும் முன்னரே அதன் வரலாற்றைத் தெள்ளத் தெளிவாகப் பாடல் வரிகளாகப் பதிவு செய்தவன் தமிழன். ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சமுதாயம் உலகம் தட்டை வடிவானது என்றே கருதியிருந்தது. ஆனால், 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலியோ எனும் வானவியல் விஞ்ஞானி, உலகம் உருண்டையானது என்பதை ஆய்வுப்பூர்வமாகக் கூறியதைக் கேட்டு, அன்றைய ஆட்சி அவரைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்தது. ஆனால், உலகம் உருண்டை வடிவினது. அது சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனற்பிழம்பு; நெருப்பு உருண்டையாக ஓர் ஊழிக்காலம் விண்ணில் சுழன்று கொண்டிருந்தது. நாளடைவில் மேற்பகுதி வெப்பம் குறைந்து பனிப்படலமாகப் படியத் தொடங்கியது. அதன்பின், பனி உருகி நீராக மாற, தரைப்பகுதி தலைதூக்க, அதில் உயிரினங்கள் உருவாகலாயின என்று உலகத்தின் உயிரினத்தோற்ற (பரிணாம) வரலாற்றை,

"செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்"

என ஊழிகளின் தோற்றம் பற்றி பரிபாடலில் கூறியுள்ளது அன்றே அவன் பெற்றிருந்த அறிவியல் அறிவின் உச்சத்தை உணர்த்துவதாயுள்ளது. இந்த அடிப்படையில் சங்கத் தமிழனின் வாழ்வியலைக் காண முற்பட்டால், அவன் பெற்றிருந்த, வளப்படுத்தியிருந்த அறிவியல் அறிவும் அறிவியல் சார்ந்த மனப்பான்மையும் அதை அவன் சங்க இலக்கியங்களில் வெளிப்படுத்திய பாங்கையும் மீண்டும் தமிழ் உலகுக்கு நினைவூட்ட வேண்டியது அவசியமாகிறது. தமிழரின் அறிவியல் என்பது தமிழர்களின் **மரபுகளைப் புரிந்துகொள்ள** உதவும் ஒரு பாடமாகும். இதனை ஒவ்வொரு தமிழரும் தெரிந்துகொள்ள

வேண்டும். அவ்வாறு தமிழர் அறிவியலைத் தெரிந்துகொண்டால் உலகமயமாக்கல் என்ற போர்வையில் வருகிற அந்நியப் பண்பாட்டு ஊடுருவல்களை எதிர்கொண்டு நமது தனித்துவ அடையாளங்களைத் தற்காத்துக்கொள்ள முடியும்.

**(வியக்கவைக்கும் தமிழர் அறிவியல் – எடுத்தாளப்பட்டுள்ளது)**

7. இன்றைய சூழலில் நாம் எதனை முனைந்து வளர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது? [2 புள்ளி]

8. (அ) சங்ககாலத்திற்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது? [2 புள்ளி]

(ஆ) கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் **சூழலுக்கு ஏற்ற பொருள்** எழுதுக.

தமிழரின் அறிவியல் என்பது தமிழர்களின் **மரபுகளைப் புரிந்துகொள்ள** உதவும் ஒரு பாடமாகும்.

[2 புள்ளி]

9. பழங்காலத் தமிழர்களின் அறிவியல் அறிவின் உச்சத்தைக் காட்டும் சான்றுகள் யாவை? [2 புள்ளி]

10. தமிழர் அறிவியலை இளையோர் அறியும்படி செய்திட மேற்கொள்ள வேண்டிய **ஐந்து நடவடிக்கைகளை** 50 சொற்களில் ஒரு பத்தியில் எழுதுக. [10 புள்ளி]

## பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (கருத்துணர்தல் - வாசிப்புப் பகுதி)

**வினாக்கள் 7 முதல் 10 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அன்பு ஓர் அருமையான பொருள். பொன்னும் பொருளும் வெள்ளியும் அன்புக்கு இணை ஆகமாட்டா. முத்தும் மணியும்கூட அன்புக்கு இணையாகா. கோடிப்பொன் பெறும் வைரமும் அன்புக்கு ஈடாகாது. அன்புக்கு இணை அன்பேதான். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் இறைவன். தனக்கு உவமை இல்லாத இறைவனையே தனக்கு உவமை இல்லாத அன்புக்கு இணையாகச் சொல்லலாம் என்பர். ஆதலால்தான், தமிழ்ச் சான்றோர், “அன்பும் இறைவனும் இரண்டு வெவ்வேறு பொருளல்ல. அவை இரண்டும் ஒன்றே” என்று முடிவு செய்தனர். அதனையே திருமூலர், “அன்பும் சிவமும் வேறல்ல, அன்பே சிவம்” என்று முழங்கினார்.

அன்பு உருவம் இல்லாத ஒரு மாயப் பொருள். ஆம்! அருவப் பொருள். ஆனால், எப்படிக் காணலாம்? காண முடியுமே! காற்றைக் கண்ணால் காண முடிகிறதா? ஆயினும், காற்று நம் உடலைத் தழுவுவதால் அதனை நாம் உணர்வது இல்லையா? அதுபோல அருவப் பொருளாகிய அன்பை உருவப் பொருள் வழியே உணரலாம். மலரிலிருந்து மணம் வெளிப்படுவது போல, தேனிலிருந்து சுவை வெளிப்படுவது போல, விளக்கிலிருந்து ஒளி வெளிப்படுவதுபோல அன்புடையவரிடமிருந்து அன்பு வெளிப்படும்.

அணையைக் கட்டி ஆற்று நீரைத் தடுத்து விடலாம். சுவரை எழுப்பிக் காற்றைக்கூட தடுத்து விடலாம். ஆனால், அன்புடையவரிடமிருந்து அன்பு வெளிப்படுவதைத் தடுக்க முடியாது. எவ்வகையேனும் அன்பு வெளிப்பட்டே தீரும். மனமகிழ்ச்சியை முகம் காட்டும்; மனக் கவலையையும் முகம் காட்டும்; சினத்தை முகம் காட்டும்; அமைதியையும் முகம் காட்டும். முன்தோன்றும் பொருளைக் கண்ணாடி காட்டுவது போல ஒருவன் உள்ளத்தில் தோன்றும் உணர்வை முகம் காட்டும். ஆனால், இவற்றைக்கூட வெளிப்படவிடாமல் அடக்கிக்கொள்ளும் திறமையாளர்களும் உளர். ஆனால், அன்பை வெளிப்படாமல் அடக்கிக்கொள்ள அன்பர்க்கு இயலவே இயலாது. காட்டாற்று வெள்ளத்தைத் தடுக்கத்தான் முடியுமா? அன்பு எப்படியும் வெளிப்படுதல் உறுதி.

பிற உயிர்களின் துயர்கண்டு உள்ளம் உருகுவதே அன்பு; படிப்படியாக வளரும் அதன் பெருக்கமே அருள். அன்பு தோன்றாதவனிடம் அருள் விளங்காது. அன்பு தாயெனில், அருள் குழந்தையாகும். தாய் இல்லாமல் குழந்தை இல்லை. அன்பு இல்லாமல் அருள் இல்லை. உருகி உருகி நிற்கும் அன்பே, பெருகிப் பெருகி அருளாகும். அன்பு தன்னை உடையவனைக் கரைத்துக்கொண்டு வெளிப்படும். வெதுப்பத்தால் வெண்ணெய் உருகுவதுபோல, உள்ளத்தின் வெதுப்பத்தால் உருகி வழியும் அன்பு. அதன் அடையாளம் அன்பர் கண்ணிலிருந்து மெல்லென அரும்பும் கண்ணீரேயாகும்.

அன்பு வளரும் பொருள்; உள்ளத்தே வளரும் பொருள்; பருவநிலைக்கு அடங்காமல் நொடிதோறும் வளரும் பொருள்; உலக எல்லையையும் கடந்து அப்பாலுக்கு அப்பாலும் வளரும் பொருள். அவ்வன்பு இல்லையானால் உலகம் இல்லை; உயிர் வாழ்வும் இல்லை. அன்பின் சுருக்கமும் பெருக்கமும் அன்புடையவரைப் பொறுத்தன. கூடைக்குள் இருக்கும் விளக்குக்கும், குடிசைக்குள் இருக்கும் விளக்குக்கும் வேற்றுமை இல்லை. விளக்கில் வேற்றுமை இல்லாவிடில் விளக்கு வைத்த இடத்தின் வேற்றுமை எவ்வளவு பெரிது! அன்பு அத்தன்மையால் விரிவானது மட்டுமன்று; அதன் வகையாலும் விரிவானதே.

பிள்ளைகள் பெற்றோரிடம் கொள்வதும், பெற்றோர் பிள்ளைகளிடம் கொள்வதும் அன்பே. கணவன் மனைவியிடத்துச் செலுத்துவதும், மனைவி கணவனிடத்துச் செலுத்துவதும் அன்பே. ஒத்த இயல்புடைய இருவரிடையே முகிழ்க்கும் உயிர் நட்பும் அன்பே. இறைவன் அடியாரிடம் காட்டுவதும், அடியார் இறைவனிடம் காட்டுவதும் அன்பே. அன்பு உன்னதமானது; உயர்வானது. அன்பின் வழியது நடப்போம்.

*(இணையக் கட்டுரை – சில மாற்றங்களுடன்)*

7. இறைவனோடு அன்பை இணைத்துச் சான்றோர் கூறக் காரணம் யாது? [2 புள்ளி]

8. (அ) அன்புடையவரிடமிருந்து அன்பு எவ்வாறு வெளிப்படும்? [2 புள்ளி]

(ஆ) கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் **சூழலுக்கு ஏற்ற பொருள்** எழுதுக.

அதன் அடையாளம் அன்பர் கண்ணிலிருந்து மெல்லென **அரும்பும்** கண்ணீரேயாகும்.
[2 புள்ளி]

9. அன்புக்கும் அருளுக்கும் உள்ள வேறுபாடு யாது? [2 புள்ளி]

10. குடும்பத்தில் அன்பு செழிக்க குடும்ப உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய **ஐந்து வழிமுறைகளை** 50 சொற்களில் ஒரு பத்தியில் எழுதுக.
[10 புள்ளி]

# தமிழ்மொழி தாள் 2

# பிரிவு ஆ:

# கருத்துணர்தல்

# (படைப்பிலக்கியம்)

**பிரிவு அ : கருத்துணர்தல் [படைப்பிலக்கியம்]**
**வினாக்கள் 11 முதல் 14 வரை**
**[ 20 புள்ளி ]**

**பொதுவான விளக்கம்**

- இளையோர் சமுதாயப் பின்னனி தொடர்பான சிறுகதையாக அமைந்திருக்கும்.
- சிறுகதை 1½ பக்கத்தில் அமைந்திருக்கும்.
- ஒவ்வொரு வினாவுக்கும் 2 - 4 புள்ளிப்பங்கீடு மட்டுமே வழங்கப்படும்.

**வினா 11**

- வினா அறிதல் / புரிதல் அமைப்பில் அமைந்திருக்கும்..

**வினா 12 (அ)**

- வினா பகுப்பாய்வு அமைப்பில் அமைந்திருக்கும்.

**வினா 12 (ஆ)**

- பண்புநலன் - வெளிப்படும் சம்பவத்தோடு குறிப்பிடுதல்.

  ***உதாரணம் : நேர்மை குணம் கொண்டவர், பணத்தாசை மிக்கவன், நன்றி மறவாதவர்***

  ***பண்புநலன் + சம்பவம் (அயற்கூற்று வாக்கியத்தில் எழுத வேண்டும்)***

**வினா 13 (அ)**

- பொருள் சிறுகதையின் சூழலுக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்.
- விடை - சொற்றொடராகவோ வாக்கியமாகவோ இருக்கலாம்.

**வினா 13 (ஆ)**

- பொருள் சிறுகதையின் சூழலுக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்.
- விடை - சொற்றொடராகவோ வாக்கியமாகவோ இருக்கலாம்.
- விடை நேரடிப்பொருளாக இல்லாமல் சூழலுக்கு ஏற்ற பொருளாக இருத்தல் வேண்டும்.

**வினா 13 (இ)**

- மாணவர்களின் நிலைபாட்டைக் குறிப்பிடவும்.
- ஒரு கருத்தையும் அதற்கான விளக்கத்தையும் எழுத வேண்டும்.
- KBAT

**வினா 14**

- கீழ்க்காணும் கூறுகளின் அடிப்படையில் கேள்விகள் கேட்கப்படலாம்:

  ***படிப்பினை, சமுதாயக் கருத்து, தாக்கம், பாதிப்பு***
- மாணவர்கள் இரண்டு கருத்துகள் எழுத வேண்டும்.
- சொந்தக் கருத்துகளை எழுத வேண்டும்.
- முழு சிறுகதையையும் படித்து முடித்து, ஏற்புடைய பதிலை எழுத வேண்டும்.
- KBAT

மாதிரி வினா விடை

**வினா 11 முதல் 14 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

வகுப்பாசிரியர் கொடுத்துவிட்டுப்போன முன்னோட்ட தேர்வு முடிவு என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்துக் கொண்டிருந்தது. கடந்த ஒரு வாரமாக என்னைச் சம்மட்டியாய்த் தாக்கிக் கொண்டிருந்த முடிவுகள்தான். தாளில் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போதுதான் நான் எவ்வளவு மோசமாகப் புள்ளிகளை எடுத்து இருக்கிறேன் என்பது தெளிவாகத் தெரிந்தது. இரண்டு அறிவியல் பாடங்களில் தோல்வி, கூடுதல் கணிதத்தில் 'டி', மற்றப் பாடங்களில் வெறும் 'பி','சி'. ஒட்டுமொத்தத்தில் 2'ஏ' மட்டுமே எடுத்திருந்தேன். "இந்த முடிவை எப்படி அப்பாவிடம் காட்டுவது?" என்னை மருத்துவராக்கியே தீர்வது என்ற முடிவோடு இருக்கும் அப்பாவையும் அம்மாவையும் நினைத்தபோது உள்ளமும் நடுங்கத் தொடங்கியது. 'எஸ்.பி.எம்' தேர்வுக்கு இன்னும் இரண்டே மாதங்கள்தான் இருந்தன. என்ன செய்யப் போகிறேன்? என் தலை சுற்றத் தொடங்கியது.

**********************************************************************

வீட்டில் நான் ஒரே பிள்ளை. என் தேவைக்கு மேல் எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்வார்கள் என் பெற்றோர்கள். என் அம்மாவைவிடவும் அப்பாவுக்குதான் என் மேல் மிகுந்த அன்பு. எனக்கு ஒன்றென்றால் துடிதுடித்துப் போவார். மூன்றாம் படிவத்தில் 'டிங்கி' காய்ச்சல் வந்து ஒரு வாரம் நான் படுத்த படுக்கையாய் இருந்தபோது வேலைக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு விடிய விடிய கண்விழித்துப் பார்த்தது அப்பாதான். அளவு மீறிய அப்பாவின் இந்த அன்புதான் என்னை முழுதுமாய் இன்று புரட்டிப் போட்டு விட்டது.

இடைநிலைப்பள்ளிக்கு வந்தபோது, அப்பா என் எல்லா நேரங்களையும் தன் கனவுகளால் நிரப்பிக் கொண்டிருந்தார். தன் மகன் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும்; மற்றப் பிள்ளைகளைவிட தன்பிள்ளை திறமையோடு விளங்க வேண்டும் என்ற எல்லாப் பெற்றோருக்கும் இருக்கும் ஆசைதான், முதலில் என் அப்பாவுக்கும் இருந்தது. ஆனால், போகப் போக அது அளவு மீறிப் போனது. என் வாழ்க்கை அகராதியில் ஓய்வு, பொழுதுபோக்கு என்ற சொற்களே இருக்கக் கூடாது என்ற தீர்க்கமான முடிவுக்கு என் அப்பா வந்திருந்தார். திங்கள் தொடங்கி வெள்ளி வரை பள்ளிவிட்டு வந்ததுமே கூடுதல் வகுப்பிற்குச் செல்ல வேண்டும். இரவில்தான் திரும்புவேன். சனி ஞாயிறுகளில் நீச்சல் வகுப்பு, சிலம்ப வகுப்பு, 'பியானோ' வகுப்பு என்று நேரமே இல்லாமல் உள்ளக் குமுறலோடு நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தேன். அப்பாவின் அன்பு என்னைச் சுனாமியாய்ச் சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது.

ஒருமுறை அம்மாவிடம் என் உள்ளக் குமுறலை எல்லாம் கொட்டித் தீர்த்தேன். அம்மாவும் அப்பாவிடம் சமயம் பார்த்து என் உணர்வை வெளிப்படுத்திய போது, "இங்க பாரு கண்மணி, உனக்கு ஒன்னும் தெரியாது. இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு நாம் நிறைய ஓய்வு கொடுக்கக் கூடாது. ஓய்வு கொடுத்தோமென்றால் அவர்கள் சிந்தனை தேவையற்ற எல்லாவற்றிலும் சென்று சிதறிவிடும். அதுமட்டுமல்ல, நம்ம பையன் கலையரசு எல்லாவற்றிலும் சிறப்பாக வரவேண்டும்..., அவனுக்குத் தெரியாத எதுவும் இருக்கக் கூடாது... நம்ம பையனுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நான் தெளிவாகத் தெரிந்துதான் செய்கிறேன். நீ கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுத்தால் மட்டும் போதும்..." என்று என் **அம்மாவை வாயடைத்துவிட்டார்**. அந்தச் சமயத்திற்குப் பிறகு, என் அம்மாவும் என் நிலைமையைப் பற்றி அப்பாவிடம் பேசுவதில்லை. ஆனாலும், ஓய்வின்றி தவிக்கும் என் நிலையைப் பார்த்து நெருப்பில் அகப்பட்ட புழுவாய்த் துடித்துப் போவார்.

கீழ்ப்படிவங்களில் ஓரளவு சமாளித்த எனக்கு நான்காம் படிவம் வந்தபோது முழுவதுமாய்த் தடுமாற்றம் தொடங்கியது. கூடுதலான பாடங்கள்; பாடங்களின் சுமை என்னைப் புரட்டிப் போட்டது. கூடுதல் வகுப்புகளுக்கே என் நேரம் சரியாய்ப் போனது. மீள்பார்வை செய்வதெல்லாம் கனவாய்ப்

போனது. இரவு வெகுநேரம் கண்விழித்துப் படிக்க வேண்டிய கட்டாயம் வந்தபோது, என் உள்ளமும் உடலும் சோகத்தில் வெந்து தணிந்தன. என் குமுறலை **மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்** தவித்துப் போனேன். தேர்வுகளில் என் புள்ளிகள் தேய்மானம் அடையத் தொடங்கின. அப்பாவின் அன்புவலை மெல்ல மெல்ல கோபத்தின் இரும்புத்திரையாக மாறத் தொடங்கிவிட்டது. தேர்வு முடிவுகளை ஒவ்வொரு முறையும் காட்டிய போதெல்லாம் அப்பா கோபத்தில் வெடிப்பது வழக்கமாகிக் கொண்டிருந்தது. இந்த முன்னோட்ட தேர்வுதான் அப்பா எனக்குக் கொடுத்திருந்த கடைசி வாய்ப்பு.

வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தேன். அப்பாவின் மகிழுந்து வீட்டின் முன் நின்று கொண்டிருந்தது. அப்பா வேலையிலிருந்து வந்துவிட்டார் போலும், என் கைகாலெல்லாம் உதறலெடுக்கத் தொடங்கின.

(மு.அருணன்
அன்புவலையில் இரும்புத்திரை)

11. முன்னோட்டத் தேர்வு முடிவு கிடைத்தபோது, தன் பெற்றோர்களை நினைத்து கலையரசு கலங்கியதன் காரணமென்ன? [2 புள்ளி]

**முன்னோட்டத் தேர்வில் சில பாடங்களில் மோசமான புள்ளிகளை எடுத்திருந்ததால் கலையரசு கலங்கினான்.**

12. (அ) கலையரசுவின் தேர்வு முடிவுகளில் சரிவு ஏற்பட்டதற்கான காரணம் என்ன? [2 புள்ளி]

**அப்பாவின் வற்புறுத்தலால், ஓய்வின்றி பல்வேறு வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால் அவன் தேர்வு முடிவுகளில் சரிவு ஏற்பட்டது.**

(ஆ) இச்சிறுகதையில் வரும் **அப்பாவின் பண்பு நலன்களுள்** இரண்டனை அவை **வெளிப்படும் சம்பவத்தோடு குறிப்பிடுக.** [4 புள்ளி]

i) **தன்னுடைய மகனின் மேல் அளவு கடந்த அன்பு கொண்டவர்.** (பண்பு)
- **கலையரசுவிற்கு 'டிங்கி' காய்ச்சல் வந்து, படுத்த படுக்கையாய் இருந்தபோது துடிதுடித்துப் போன அப்பா, ஒரு வாரம் வேலைக்குவிடுப்புஎடுத்துக் கொண்டு விடியவிடிய கண்விழித்துக் கலையரசுவைப் பார்த்துக் கொண்டார்.** (சம்பவம்)

ii) **தன் மகனின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்.** (பண்பு)
- **கலையரசுவைக் கூடுதல் வகுப்பு, நீச்சல் வகுப்பு, சிலம்ப வகுப்பு, 'பியானோ' வகுப்பு போன்ற வகுப்புகளுக்கு அனுப்பி எல்லாத் திறன்களையும் பெறச் செய்தார்.** (சம்பவம்)

13. (அ) **மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

**தனக்குள் ஏற்பட்டிருக்கும் உணர்வுகளை யாரிடமும் வெளிப்படுத்த முடியாமல் தவிக்கும் நிலை.**

(ஆ) **அம்மாவை வாயடைத்துவிட்டார்** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

**அம்மாவைப் பதில் கூற முடியாமல் செய்துவிட்டார்.**

(இ) **"பிள்ளைகளுக்கு நாம் நிறைய ஓய்வு கொடுக்கக்கூடாது. அஃது அவர்களின் சிந்தனையைச் சிதறடித்துவிடும்"**

அப்பாவின் இந்தச் சிந்தனையைப் பற்றி உன் **கருத்தை** விளக்குக. [4 புள்ளி]

**பெற்றோரின் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளைச் சரியான முறையில் நேரத்தைப் பங்கிடுவதற்கும் சரியான முறையில் செலவிடவும் பழக்கப்படுத்த வேண்டும்.**
**பிள்ளைகளுக்கு முறையான மற்றும் தேவையான ஓய்வும் தர வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் முழுக் கவனத்தையும் கல்வியின்பால் செலுத்த முடியும்.**

14. இச்சிறுகதை வாயிலாகச் **சமுதாயத்திற்கு உணர்த்தப்படும் கருத்துகளை** எழுதுக. [4 புள்ளி]

- **மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள் முறையான பங்கினை ஆற்ற வேண்டும்.**
- **தம் பிள்ளைகள் எல்லாத் திறன்களையும் பெற வேண்டும் என்பதற்காக, அவர்களைப் பல வகுப்புகளுக்கு அனுப்பி, அவர்களுக்கு ஓய்வின்மையை ஏற்படுத்தக்கூடாது.**

## பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (கருத்துணர்தல் - படைப்பிலக்கியம்)

**வினா 11 முதல் 14 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

இதுவரை எதிர்த்துப் பேசாதவன்தான்... அண்மைக்காலமாக அப்படிப் பேசத் தொடங்கியிருக்கிறான். ஈராண்டுக்கு முன்பு, "ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்," என்று தயக்கத்தோடு வெளிப்பட்ட அவனது ஆசை இப்போது சீறிக்கொண்டு வெளியே வந்து வெடித்திருக்கிறது. அந்த அதிர்வில் முத்துவும் கனகமும் சற்றே ஆடித்தான் போனார்கள். என்ன சொல்லி அவனைச் சமாதானப்படுத்துவது? முத்து குழம்பினார்.

இதற்குமுன் அவரும் கனகமும், பலமுறை அவனுக்குப் பொறுமையாகப் புரியவைக்க முயன்றிருக்கிறார்கள். மோட்டார் சைக்கிள் வாங்கித்தர பணப்பற்றாக்குறை காரணம் என்பது ஒருபுறமிருக்க, அதனால் ஏற்படக்கூடிய இடர்களையும் இழப்புகளையும் கனகம் அவனுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லி இருக்கிறாள். அதைக் கேட்டுப் பேசாமல் அமைதியாக இருந்ததைப் பார்த்து மகன் தங்கள் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பதாக நினைத்து மகிழ்ந்தவர்கள், இன்று இப்படி எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறான் என்பதைப் பார்த்து உடைந்து போனார்கள்.

"ஏன் கனகம்... இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு அவன் இப்படிக் கத்திட்டுப் போறான்? நம்ம நிலைமைக்கு இதுங்க மூனு பேரையும் நல்ல முறையில் வளர்த்துப் படிக்கவச்சிக்கிட்டு இருக்கிறதே பெரிய விஷயம். இப்ப திடீர்னு மோட்டார் சைக்கிளு அது இதுன்னா எங்க போறது? முத்துவுக்குத் தொண்டை அடைத்துப் பேச முடியாமல் கலங்கினார்.

உள்ளுக்குள் வலி இருந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் இருந்தாள் கனகம். "சரி விடுங்க! அவன் சின்ன பையன்தானே. வளர்ர வயசு... மத்தப்பசங்களப் பார்த்து ஆசைப்படறான். எடுத்துச் சொன்னா புரிஞ்சுக்குவான். நீங்க கவலைப்படாதீங்க...!"

"என்னத்தப் புரிஞ்சிக்கிட்டான் போ! ஆறாம் படிவத்துக்குப் போயி இன்னும் முழுசா ஒரு மாசம் ஆகல, அந்தக் கட்டணம் இந்தக் கட்டணம் பாடப்புத்தகம் அது இதுன்னு வாங்கிக் கொடுக்கவே திண்டாடிப் போயிட்டோம். ஏற்கனவே குமுதாவுக்கும் கபிலனுக்கும் வேற எவ்வளவோ செலவாகிப் போச்சு..!", என முத்து தமது ஆற்றாமையை இறக்கி வைத்தார்.

அந்தச் சிறிய கூடத்தின் மூலையில் படித்துக் கொண்டிருந்த குமுதா கவலையோடு அப்பாவை ஏறிட்டுப் பார்த்தாள். பாவம்... அப்பா! அவர்தான் என்ன செய்வார்? நகராண்மைக் கழகத்தின் சாதாரண ஊழியர். மாதம் ஆயிரத்து இருநூறைத் தாண்டாத சம்பளம். அதைச் சரிசெய்ய அம்மாவும், ஒரு துணித்தைக்கிற ஆலையில் இயந்திரத்தோடு இயந்திரமாகத் தேய்ந்து கொண்டிருக்கிறார். இருந்தாலும் குடும்ப வருமானம் ஏற்றமே காணவில்லை.

ஏதோ... அப்பாவுக்கு வேண்டாத கெட்ட பழக்கமோ அம்மாவுக்குப் பெரிய ஆசைகளோ இல்லாததால் சிக்கனமாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், **மாதாமாதம் சிக்கிக்கொள்ளும் செலவுக் கணக்கை** அம்மா எதை எதையோ கொண்டு சரிசெய்து விடுவார்கள். இதெல்லாம் தனக்குப் புரிந்த அளவுக்கு அண்ணனுக்குப் புரியாமலா இருக்கும்? இப்படிச் சுயநலமாக இருக்கிறானே எனக் குமுதா நினைத்துப் பார்த்தாள்.

அவர்கள் குடியிருக்கும் அந்த மலிவு விலை அடுக்குமாடி வீட்டிலிருந்து பார்த்தால் பினாங்கு தீவின் சுகபோகமான பட்டணப் பகுதியே தெரியும். முன்னேற்றத்தின் உச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் தீவுதான்! ஆனாலும் முத்துவைப் போன்ற மிகச் சிறிய வருமானத்தைக் கொண்ட குடும்பத் தலைவர்களும் இங்கேதான் **குப்பைக் கொட்டியாக** வேண்டும். இந்தப் போராட்டத்தை

எதிர்கொள்ள முடியாமல் தீவை விட்டே ஓடிப்போனவர்கள் மத்தியில் முத்துவும் கனகமும் இன்னும் போராடிக்கொண்டிருந்தார்கள்.

தம் மூன்று பிள்ளைகளையும் பட்டதாரிகளாக்கிவிட வேண்டும் என்ற வேட்கை முத்துவுக்கும் கனகத்துக்கும் உண்டு. அதனால்தான், சிறிய வருமானத்திலும் பிள்ளைகளை எந்தக் குறையுமின்றி படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அண்மைய காலமாகக் குமரனின் போக்குதான் அவர்களுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. அவனை நினைத்து அன்றைய இரவு, முத்து தூக்கத்தைத் தொலைத்துவிட்டுச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

(இடர் தேடிப்போகாதே! - சு.கமலா எடுத்தாளப்பட்டது)

11. குமரன் பெற்றோர்களிடம் கோபப்பட்டதற்கான காரணம் என்ன? [2 புள்ளி]

12. (அ) குமரனின் ஆசையைப் பெற்றோர் நிராகரித்ததற்கான காரணம் என்ன? [2 புள்ளி]

(ஆ) இச்சிறுகதையில் வரும் **அம்மாவின் பண்பு நலன்களுள்** இரண்டனை அவை **வெளிப்படும் சம்பவத்தோடு** குறிப்பிடுக. [4 புள்ளி]

13. (அ) **மாதாமாதம் சிக்கிக்கொள்ளும் செலவுக் கணக்கை** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

(ஆ) **குப்பை கொட்டியாக வேண்டும்** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

(இ) "நம்ம நிலைமைக்கு இதுங்க மூனு பேரையும் நல்ல முறையில் வளத்துப் படிக்கவச்சிக்கிட்டு இருக்கிறதே பெரிய விஷயம். இப்ப திடீர்னு மோட்டார் சைக்கிளு அது இதுன்னா எங்க போறது?"

அப்பாவின் இந்தச் சிந்தனையைப் பற்றி உன் **கருத்தை** விளக்குக. [4 புள்ளி]

14. இச்சிறுகதை வாயிலாகச் **சமுதாயத்திற்கு உணர்த்தப்படும் கருத்துகளை** எழுதுக. [4 புள்ளி]

## பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (கருத்துணர்தல் - படைப்பிலக்கியம்)

**வினா 11 முதல் 14 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

'டுமில்..டுமில்..' சத்தம் இரண்டு மூன்று முறை காதில் வந்து கேட்டது. மல்லி அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் வேகமாகக் குரைக்க ஆரம்பித்தது. "மல்லி..! சத்தம்..! பேசாமே இரு..." மல்லி கேட்பதாக இல்லை. நான் பக்கத்தில் இருக்கிறேன் என்ற தைரியத்தில் இன்னும் அதிக வேகத்துடன் குரைக்கத் தொடங்கியது.

'டேய் பவி... நாய் சுடுபவர்கள் வந்து விட்டார்கள் உன் நாயை வீட்டின் உள்ளே கூட்டிட்டுப் போய்விடு", எதிர் வீட்டிலிருந்து சசி என்னிடம் விசயத்தைச் சத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

மல்லியை வீட்டினுள் இழுத்துக் கொண்டு போவதற்குள் வீட்டின் முன் தடித்த மீசை, திடகாத்திரமான உடல், கையில் நாய்களைச் சுடும் துப்பாக்கியுடன் வந்து நின்றார் ராமசாமி அண்ணாச்சி. குறிபார்த்துச் சுடுவதில் வல்லவர். அவர் கையில் சிறிய பை ஒன்று இருந்தது. அதில் அவர் இதுவரை சுட்ட நாய்களின் வால்கள் இருந்தன. எத்தனை நாய்கள் சுடப்பட்டன என்ற அடையாளம் அந்த வால்களின் சேகரிப்பு.

அப்போது மிருகவதை, மிருகங்களைப் பாதுகாக்கும் 'புளு குரோஸ்' போன்ற அமைப்புகள் இல்லாத காலம். நாய்களைச் செல்ல பிராணிகளாக வளர்க்க வேண்டுமென்றால் காப்புரிமை வைத்திருக்க வேண்டும்.

"மல்லி ஓடு... ஓடு மல்லி" மல்லியை அங்கிருந்து விரட்ட முயன்று தோற்றுப் போனேன். இராமசாமி அண்ணாச்சியிடம் **மல்லிக்காகப் போராடிக் கொண்டிருந்தேன்**. எனக்கு அண்ணாச்சியால் ஏதோ ஆபத்து என்று எண்ணிக் கொண்டது போலும், மல்லி அவரை நோக்கி ஆவேசத்துடன் குரைத்துக் கொண்டிருந்தது.

"இது சரிபட்டு வராது. நான் அங்கிருந்து நகர்ந்தால்தான் மல்லியைக் காப்பாற்ற முடியும் என்று தோன்றியது. திடீரென்று அங்கிருந்து வேகமாக ஓடிக்கொண்டே, மல்லி ஓடிவா...! கத்திக் கொண்டே வேகத்தை அதிகப்படுத்தி வீட்டின் பின்னால் உள்ள கித்தா காட்டினுள் நுழைந்தேன்.

"டுமில்... என்ற சத்தம் காதைக் கிழித்துக் கொண்டு சென்றது. திரும்பிப் பார்த்தேன். மல்லி சுருண்டு விழுந்து மீண்டும் எழுந்து கித்தா காட்டுக்குள் ஓடி மறைந்தது.

ராமசாமி அண்ணாச்சி மல்லியைத் தேடிக் கொண்டு கித்தா காட்டுக்குள் நுழைந்தார். அவர் பின்னே நானும் தேய்ந்த முகத்துடன் சென்றேன். ராமசாமி தீவிரமாக மல்லியைத் தேடிக் கொண்டிருந்தார். அன்றைய அவருடைய வருமானத்தில் மல்லியின் வாலை வெட்டி செல்லவில்லை என்றால் குறைந்து விடும். அவருக்கு அந்தக் கவலை. மல்லிக்கு என்ன ஆயிற்றோ என்ற பதட்டம் என்னுள். இருதயம் மிக வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

மல்லி என்று பெயர் சொல்லி அழைத்தால் அது குரைக்க ஆரம்பித்துவிடும். ராமசாமி அண்ணாச்சி அதைச் சுலபமாகக் கண்டு கொள்வார் என்ற பயம் வேறு. ராமசாமி அண்ணாச்சி தேடிக் களைத்து விட்டார். மல்லி கிடைக்காத ஏமாற்றத்துடன் கித்தா காட்டை விட்டு வெளியேறினார். 'மல்லி... மல்லி', என்று காடே அலறும்படி ஓலமிட்டேன். அருகில் இருந்த புதரின் உள்ளே **மிக ஈனத்துடன்** மல்லியின் குரல் மெதுவாக எழுந்தது. ஓடிச் சென்று மல்லியைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன். மல்லியின் பின் காலில் குண்டடிப்பட்டிருந்தது.

இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. மல்லியின் ஒரு கால் முடமாகிவிட்டது.

'மல்லி வா, ஒரு போட்டி வைக்கலாம். நான் சைக்கிளில் போகிறேன். நீ என்னை வெட்டிக் கொண்டு முன்னே செல்ல வேண்டும். வேகமாகச் சைக்கிளை ஓட்டிச் சென்றேன். விரைவாக என்னை முந்திச் சென்று தூரத்தில் நின்று வாலாட்டிக் கொண்டிருந்தது மல்லி.

**(ஊனம் தடையல்ல - ரவிசந்திரன் பாலையா எடுத்தாளப்பட்டது)**

11. மல்லி, ராமசாமி அண்ணாச்சியை நோக்கி ஏன் குரைத்தது? [2 புள்ளி]

12. (அ) அண்ணாச்சியிடம் மல்லிக்காகப் போராடிக் கொண்டிருந்த பவி திடீரென ஓட ஆரம்பித்ததன் காரணம் என்ன? [2 புள்ளி]

(ஆ) இச்சிறுகதையில் வரும் **பவியின் பண்பு நலன்களுள்** இரண்டனை அது **வெளிப்படும் சம்பவத்தோடு** குறிப்பிடுக. [2 புள்ளி]

13. (அ) **'மல்லிக்காகப் போராடிக் கொண்டிருந்தேன்'** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

(ஆ) **மிக ஈனத்துடன்** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

(இ) நாய்களைச் செல்ல பிராணிகளாக வளர்க்க வேண்டுமென்றால் காப்புரிமை வைத்திருக்க வேண்டும்..

பவியின் இந்தச் சிந்தனையைப் பற்றி உன் **கருத்தை** விளக்குக. [4 புள்ளி]

14. இச்சிறுகதையின் வழி கதையாசிரியர் **சமுதாயத்திற்கு உணர்த்தும் கருத்துளை** எழுதுக. [4 புள்ளி]

## பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (கருத்துணர்தல் - படைப்பிலக்கியம்)

**வினா 11 முதல் 14 வரை**
**கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

இன்னும் சற்று நேரத்தில் சபைக்கூடல் தொடங்கப்படவிருந்தது. முரளிக்குச் சபையின் முன்னே பேசுவதெல்லாம் பெரிய சவால் இல்லை. அவனுடைய பேச்சுத் திறமையினாலே தலைமை மாணவன் பொறுப்பு அவனுக்குத்தான் என உறுதியாக நம்பினான். ஆயினும், கடந்த வாரம் சிற்றுண்டியில் முறையாகக் கண்காணிப்பு செய்யவில்லை எனக் கட்டொழுங்கு ஆசிரியரிடம் மாட்டிவிட்ட கலைமதியின் மீது வெறுப்பாக இருந்தான்.

'என்னயே மாட்டிவிட்டல... இரு... உன்ன என்ன பண்றேன்னு பாரு' என மனத்தில் புலம்பிக் கொண்டே மயக்கம் வருவது போல் அப்படியே மேடையின் ஓரத்தில் கவனமாகச் சரிந்தான். உடன் நின்றிருந்த சில மாணவர்களும் வாரப் பொறுப்பாசிரியரும் சட்டென அதிர்ந்து போயினர்.

"முரளி விழுந்துட்டான் டீச்சர்!"

கலைமதிதான் முதலில் பதறிக் கொண்டு வந்தாள். மயக்கமடைந்தது போல நடித்தாலும் கலையின் குரல் அவனுக்குக் கேட்காமலில்லை. இலேசாக மனம் குறுகுறுத்தது அவனுக்கு. இனி ஒன்றும் செய்ய இயலாது. அவன் போட்ட திட்டம் நிறைவேறப் போகிறது. அவன் சபைக்கூடலில் பேச முடியவில்லை என்றால் அவனுக்குப் பதிலாகக் கலைமதியே பேசியாக வேண்டும். அவள் தயாரில்லாமல் தடுமாறி சபையில் அவமானப்படுவதைப் பார்க்கவே முரளி மயங்கிக் கீழே விழுந்தான்.

அவனைத் தூக்கி ஓரமாக அமர வைத்து கோபு ஆசிரியர் தண்ணீர் கொடுத்தார்.

"எப்படி க்ளினிக் கூட்டிட்டுப் போய்டலாமா...?" என்கிற தலைமை ஆசிரியரின் குரல் கேட்டதும்தான் போதும் முரளி கண்களைத் திறந்து முனகியவாறு மயக்கம் தெளிந்துவிட்டதைப் போன்று பாவனை செய்தான்.

"சரி, சாப்டீயா இல்லையா?" எனக் கேட்டுக் கொண்டே ஆசிரியர் கோபு ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து கொடுத்தார். கலைமதிதான் பேசுவதென முடிவாகிவிட்டது. சற்றுமுன் அவள் பதறியது மட்டும்தான் முரளியின் மனத்தில் கேட்டுக் கொண்டிருந்தது. தவறு செய்துவிட்டோம் என வருந்தினான்.

கலைமதி **கைகளைப் பிசைந்து கொண்டே** மேடை ஏறினாள். உடன் எந்தத் தாளும் இல்லை. தயாரிப்பும் இல்லை. 600 மாணவர்கள் மேடையையே கவனித்தனர். அத்தனை கண்களும் கலைமதியின் மீதிருந்தன. இறை வணக்கத்துடன் தொடங்கி பொறுப்பாசிரியர் நன்றி உரை ஆற்றும்வரை ஒரு வழியாகச் சமாளித்துச் சபைக்கூடலை முடித்து வைத்தாள்.

ஆசிரியர்கள் அனைவரும் கலைமதியைப் பாராட்டினர்.

"கலை, நீ இவ்ள நல்லா பேசுவேன்னு நெனைச்சி பார்க்கலமா, அருமை!" குமுதவள்ளி ஆசிரியை அவளின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

பூரிப்புடன் மேடையிலிருந்து இறங்கியதும் முரளியிடம்தான் ஓடி வந்தாள். அவன் இன்னுமும் மயக்கமடைந்த பாவனையிலிருந்து வெளியேற முடியாமல் நடித்துக் கொண்டிருப்பதை அவமானமாகக் கருதினான்.

"டேய், முரளி. இப்ப எப்படி இருக்குடா? ஏதோ என்னால முடிஞ்ச வரைக்கும் பேசிட்டன்டா..."

முரளி அவளுடைய **கண்களைப் பார்க்க முடியாமல்** தடுமாறினான்.

“ஒன்னும் இல்ல எல்லாம் ஓகே ஆய்டும்டா...” எனத் தேற்றிவிட்டு வகுப்பிற்குச் சென்றுவிட்டாள்.

குற்றம் செய்த மனம் குறுகுறுக்கும் என்பார்கள். மனவேதனையுடன் நாற்காலியைவிட்டு எழுந்து நேரே கட்டொழுங்கு ஆசிரியர் அறைக்கு விரைந்தான்.

நம் பள்ளிக்கு இனி தலைமை மாணவன் வேண்டாம்; அது தலைமை மாணவியாக இருக்கட்டும் எனச் சொல்லிவிட வேண்டுமென்ற துணிச்சல் அவனுக்கு எங்கிருந்து வந்ததெனத் தெரியவில்லை. இவ்வளவு நாள் ஏறிப் பழகிய மேடை இப்பொழுது அவனுக்கு வேறொன்றாகக் காட்சியளித்தது.

(மேடை– கே.பாலமுருகன்)

11. முரளி கலைமதியை வெறுப்பதற்கான காரணம் என்ன? [2 புள்ளி]

12. (அ) சபைக்கூடலில் முரளி மயங்கி விழுந்ததற்கான **காரணம்** என்ன? [2 புள்ளி]

(ஆ) இச்சிறுகதையில் வரும் **கலைமதியின் பண்பு நலன்களுள் இரண்டனை** அவை **வெளிப்படும் சம்பவத்தோடு** குறிப்பிடுக. [2 புள்ளி]

13. (அ) ‘**கைகளைப் பிசைந்து கொண்டே**’ என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

(ஆ) **‘கண்களைப் பார்க்க முடியாமல்’** என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது? [2 புள்ளி]

(இ) மனவேதனையுடன் நாற்காலியைவிட்டு எழுந்து நேரே கட்டொழுங்கு ஆசிரியர் அறைக்கு விரைந்தான்.

முரளியின் இந்தச் செயலைப் பற்றி உன் **கருத்தை** விளக்குக. [4 புள்ளி]

14. இச்சிறுகதையின் வழி கதையாசிரியர் **மாணவர்க்கு உணர்த்தும் கருத்துகள்** யாவை? [4 புள்ளி]

# வினா 15 - தொகுத்தல்
# [ 10 புள்ளி ]

**3.3.5 கவிதையிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுவர்.**
**3.3.6 உரைநடைப் பகுதியிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுவர்.**
**3.3.7 புள்ளிவிவரப் பட்டியலிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுவர்.**

**பொதுவான விளக்கம்**

- தொகுத்தலை **4 பத்திகளில்** பிரித்து எழுத வேண்டும்.
  *(முன்னுரை, தெரிநிலைக் கருத்து, புதைநிலைக் கருத்து, முடிவுரை)*

- **முன்னுரை** - கவிதை / உரைநடை / புள்ளிவிவரப் பட்டியலின் **தலைப்பை** எழுத வேண்டும்.
  - 5/6 சொற்களில் ஒரே வாக்கியம் போதும். (பரிந்துரை)

- **தெரிநிலையும் புதைநிலையும்** சேர்த்து மொத்தமாக **5 கருத்து** எழுத வேண்டும்.
  - இந்த அடிப்படையில் **(2 தெரிநிலை + 3 புதைநிலை / 3 தெரிநிலை + 2 புதைநிலை / 1 தெரிநிலை + 4 புதைநிலை / 4 தெரிநிலை + 1 புதைநிலை)** எழுதினால் போதும்.
  - தெரிநிலைக் கருத்துகளை ஒரு பத்தியிலும், புதைநிலைக் கருத்துகளை அடுத்த பத்தியிலும் எழுதவும்.

**தெரிநிலைக் கருத்து (isi tersurat)**
- கவிதை / உரைநடை / புள்ளிவிவரப் பட்டியலில் வெளிப்படையாகத் தெரியும் நேரடிக் கருத்தாக இருக்க வேண்டும்.
- கவிதை வரிகளை அப்படியே எடுத்து எழுதக்கூடாது.
- உரைநடைப் பகுதியிலுள்ள வாக்கியங்களையும் அப்படியே எடுத்தெழுதாமல் முடிந்தவரை சொந்த நடையில் எழுதுவது சிறப்பு.
- புள்ளிவிவரப் பட்டியலில் காணும் தரவுகளை வாக்கியமாக எழுத வேண்டும்.

**புதைநிலைக் கருத்து (isi tersirat)**
- கவிதை / உரைநடை / புள்ளிவிவரப் பட்டியலில் வெளிப்படையாகத் தெரியாமல் மறைந்திருக்கும் புதைநிலைக் கருத்தாக இருக்க வேண்டும்.
- நேரடிக் கருத்தோடு தொடர்புடையதாய், நேரடிக் கருத்தின் பின்னணியில் தெரியும் கருத்தாய் இருக்க வேண்டும்.

**முடிவுரை** - பரிந்துரை / விளைவு / சுய கருத்து / ஏற்புடைய முடிவு (ஏதேனும் ஒன்றை ஒரே வாக்கியத்தில் எழுதவும்)

* வாக்கிய இயைபுக்கு / கருத்துகளின் தொடர்புக்கு **இடைச்சொற்கள்** (எ.கா: மேலும், தொடர்ந்து, அதுமட்டுமல்லாமல், அது தவிர...) பயன்பாடு இருப்பின் சிறப்பு.

* தொகுத்தல் / விடை, குறைந்தது **7 வாக்கியங்கள்** இருப்பின் சிறப்பு. (பரிந்துரை)

* தேவைக்கு மீறி எழுதினால் **நேர விரையம்** ஏற்பட வாய்ப்புண்டு.

* **அதிகமான பிழைகள்** இருப்பின் **புள்ளிகள் குறைய** வாய்ப்பு உண்டு.

**புள்ளி விவரம்**

| | |
|---|---|
| முன்னுரை | 1 புள்ளி |
| கருத்து (5 x 1) | 5 புள்ளி |
| முடிவுரை | 1 புள்ளி |
| மொழி | 3 புள்ளி |
| **மொத்தம்** | **10 புள்ளி** |

தொகுத்தல் மொழிக்கான வரையறையும் அதற்கேற்ற புள்ளியும்

| புள்ளி | மொழிக்கூறுகள் |
|---|---|
| 3 | • மொழி ஆளுமை **மிகச் சிறப்பாகவும்** தனித்தன்மை கொண்டதாகவும் இருக்கும்.<br>• துறைசார்மொழி **மிகப் பொருத்தமாகவும்** சொல்லாட்சி **மிகச் சிறப்பாகவும்** கையாளப்பட்டிருக்கும்.<br>• **முழுமையாகச்** சொந்த மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும்.<br>• பல்வேறு வகையான வாக்கியங்கள் **மிகச் சரியான இயைபுடன்** அமைந்திருக்கும்.<br>• **ஏற்ற** இடைச்சொல் பயன்பாடு **பொருத்தமாக** இருக்கும்.<br>• இலக்கணப்பிழைகள் **மிக அரிதாகக்** காணப்படும். |

| புள்ளி | மொழிக்கூறுகள் |
|---|---|
| 2 | • மொழி ஆளுமை **சிறப்பாகவும்** தனித்தன்மை கொண்டதாகவும் இருக்கும்.<br>• **துறைசார்மொழி ஓரளவுக்குப் பொருத்தமாகவும்** சொல்லாட்சி **ஓரளவுக்கு நன்றாகவும்** கையாளப்பட்டிருக்கும்.<br>• **ஓரளவு** சொந்த மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும்.<br>• பல்வேறு வகையான வாக்கியங்கள் **ஓரளவு இயைபுடன்** அமைந்திருக்கும்.<br>• **ஓரளவு ஏற்ற** இடைச்சொல் பயன்பாடு **பொருந்தி** இருக்கும்.<br>• இலக்கணப்பிழைகள் **ஆங்காங்கு** காணப்படும். |

| புள்ளி | மொழிக்கூறுகள் |
|---|---|
| 1 | • மொழி ஆளுமை **சுமாராக** இருக்கும்.<br>• சுமாராக துறைசார்மொழி கையாளப்பட்டிருக்கும். **சொல்லாட்சி சுமாராகவே** இருக்கும்.<br>• **சுமாரான** மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும்.<br>• வாக்கியங்கள் **குறைந்த இயைபுடன்** அமைந்திருக்கும்.<br>• இடைச்சொல் பயன்பாடு **இருக்காது**.<br>• இலக்கணப்பிழைகள் **பரவலாகக்** காணப்படும். |

## கவிதை - தொகுத்தல் : எடுத்துக்காட்டு வினாவும் பரிந்துரைக்கப்படும் விடையும்

**குறிப்பு;**
- மரபுக்கவிதையாக அமைந்திருக்கும்
- மரபு சார்ந்த திரைப்பாடல்களாகவும் அமைதிருக்கும்
- இயன்றளவு உள்நாட்டுப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும்.

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**இயற்கைப் பேரழிவு**

காற்றில் நஞ்சையும் கடலில் கழிவையும்
கணக்கு வழக்கின்றி நிறைத்தான் - அடர்
காட்டை அழித்ததில் காணும் விலங்கெலாம்
வேட்டை யாடியே ஒழித்தான்!

ஆற்றைச் சாக்கடை ஆக்கி உயிர்களை
அழிக்கும் நோய்களை வளர்த்தான் - தன்
அறிவை நம்பியே இறைவன் வழங்கிடும்
அருளின் போர்வையைக் கிழித்தான்!

-இறையருட் கவிஞர் செ. சீனி நைனா
முகம்மது

(10 புள்ளி)

**முன்னுரை**
- இக்கவிதை இயற்கைப் பேரழிவு குறித்து விளக்குகிறது.

**தெரிநிலைக் கருத்து**
- மனிதன் பெருமளவில் காற்றை மாசுபடுத்தியதோடு கடலிலும் கழிவுகளைக் கொட்டி அசுத்தப்படுத்தினான். *(கருத்து 1)* மேலும், காடுகளையும் அழிக்கும் வேளையில் அங்குள்ள விலங்குகளையும் கொன்றான். (கருத்து 2) அதோடு, ஆறுகளையும் அசுத்தப்படுத்தி உயிர்க்கொல்லி நோய்கள் உருவாகக் காரணமானான். *(கருத்து 3)* தொடர்ந்து, தன்னறிவே பெரிதென எண்ணி இறைவனின் அருட்கொடையை அலட்சியப்படுத்தினான். *(கருத்து 4)*

**புதைநிலைக் கருத்து**
- அத்தியாவசியத் தேவையான காற்றையும் நீரையும் மனிதன் மதிப்பதில்லை. *(கருத்து 1)* அடுத்து, காட்டையும் அதிலுள்ள விலங்குகளையும் உதாசீனம் செய்கிறான். *(கருத்து 2)* அதையடுத்து, ஆற்றின் பயனையும் நோய்கள் பெருகுவதையும் பற்றி மனிதனுக்குக் கவலையுமில்லை. *(கருத்து 3)* தொடர்ந்து, அவன் சுயநல எண்ணத்தில் இறையாற்றலையும் கண்டுகொள்வதில்லை.*(கருத்து 4)*

**முடிவுரை**
- ஆகவே, இயற்கையை அனைவரும் பேணிக் காத்தல் அவசியம். *(பரிந்துரை)*
ஆகையால், இயற்கை அழிந்தால் மனிதகுலமும் அழிய வாய்ப்புள்ளது. *(விளைவு)*
சுருங்கக் கூறின், இயற்கை இறைவன் நமக்களித்த மாபெரும் சொத்தாகும். *(சுய கருத்து)*
இதுகாறும், இயற்கைப் பேரழிவுக்கு மனிதனே முழுக்காரணம் என உறுதியாகிறது. *(ஏற்புடைய முடிவு)*

**எடுத்துக்காட்டு விடை - 1**

இக்கவிதை இயற்கைப் பேரழிவு குறித்து விளக்குகிறது.

மனிதன் பெருமளவில் காற்றை மாசுபடுத்தியதோடு கடலிலும் கழிவுகளைக் கொட்டி அசுத்தப்படுத்தினான். மேலும், காடுகளையும் அழிக்கும் வேளையில் அங்குள்ள விலங்குகளையும் கொன்றான். அதோடு, ஆறுகளையும் அசுத்தப்படுத்தி உயிர்க்கொல்லி நோய்கள் உருவாகக் காரணமானான். (3 கருத்து)

உயிர்வாழ அத்தியாவசியத் தேவையான காற்றையும் நீரையும் மனிதன் மதிப்பதில்லை. அடுத்து, காட்டையும் அதிலுள்ள விலங்குகளையும் உதாசீனம் செய்கிறான். (2 கருத்து)

ஆகவே, இயற்கையை அனைவரும் பேணிக் காத்தல் அவசியம்.

(46 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 2**

இந்தக் கவிதை இயற்கைப் பேரழிவு குறித்து விளக்குகிறது.

மனிதன் பெருமளவில் காற்றை மாசுபடுத்தியதோடு கடலிலும் கழிவுகளைக் கொட்டி அசுத்தப்படுத்தினான். அதோடு, ஆறுகளையும் அசுத்தப்படுத்தி உயிர்க்கொல்லி நோய்கள் உருவாகக் காரணமானான். (2 கருத்து)

மனிதன் காட்டையும் அதிலுள்ள விலங்குகளையும் உதாசீனம் செய்கிறான். அதையடுத்து, ஆற்றின் பயனையும் நோய்கள் பெருகுவதையும் பற்றி மனிதனுக்குக் கவலையுமில்லை. தொடர்ந்து, அவன் சுயநல எண்ணத்தில் இறையாற்றலையும் கண்டுகொள்வதில்லை. (3 கருத்து)

ஆகையால், இயற்கை அழிந்தால் மனிதகுலமும் அழிய வாய்ப்புள்ளது.

(47 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 3**

இக்கவிதை இயற்கைப் பேரழிவு குறித்து விவரிக்கிறது.

மனிதன் பெருமளவில் காற்றை மாசுபடுத்தியதோடு கடலிலும் கழிவுகளைக் கொட்டி அசுத்தப்படுத்தினான். மேலும், காடுகளையும் அழிக்கும் வேளையில் அங்குள்ள விலங்குகளையும் கொன்றான். அதோடு, ஆறுகளையும் அசுத்தப்படுத்தி உயிர்க்கொல்லி நோய்கள் உருவாகக் காரணமானான். தொடர்ந்து, தன்னறிவே பெரிதென எண்ணி இறைவனின் அருட்கொடையை அலட்சியப்படுத்தினான். (4 கருத்து)

அவன் சுயநல எண்ணத்தில் இறையாற்றலையும் கண்டுகொள்வதில்லை.

(1 கருத்து)

சுருங்கக் கூறின், இயற்கை இறைவன் நமக்களித்த மாபெரும் சொத்தாகும்.

(46 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 4**

சீனி ஐயாவின் இக்கவிதை இயற்கைப் பேரழிவு குறித்து விளக்குகிறது.

மனிதன், தன்னறிவே பெரிதென எண்ணி இறைவனின் அருட்கொடையை அலட்சியப்படுத்தினான். (1 கருத்து)

அத்தியாவசியத் தேவையான காற்றையும் நீரையும் மனிதன் மதிப்பதில்லை. அடுத்து, காட்டையும் அதிலுள்ள விலங்குகளையும் உதாசீனம் செய்கிறான். அதையடுத்து, ஆற்றின் பயனையும் நோய்கள் பெருகுவதையும் பற்றி மனிதனுக்குக் கவலையுமில்லை. தொடர்ந்து, அவன் சுயநல எண்ணத்தில் இறையாற்றலையும் கண்டுகொள்வதில்லை. (4 கருத்து)

இதுகாறும், இயற்கைப் பேரழிவுக்கு மனிதனே முழுக்காரணம் என உறுதியாகிறது.

(47 சொற்கள்)

**கவிதை - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 1**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**பசியின் கொடுமை**

ஒருவேளை உணவுக்காய்
அல்லல்படும் மனிதருண்டு
பலவேளை பட்டினியால்
துன்பத்தில் வாடுவதுண்டு

தேவைக்கு அதிகமாக
உண்பவரிங்கு நிறையவுண்டு
ஆசையாய் வாங்கியதுமிஞ்சி
குப்பையிலே கிடப்பதுண்டு

***-கண்மணி, பந்திங்.***

(10 புள்ளி)

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

## கவிதை - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 2

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**உணவுப் பழக்கம்**

தேவைக் கேற்ப உணவை - என்றும்
 தேர்ந்திடும் பழக்கம் கொண்டிடுவோம்
தேவை மீறிய உணவை - தட்டில்
 சேர்த்திடும் பழக்கம் தவிர்த்திடுவோம்

பிடியுணவும் இல்லா(து) உலகத்தில் - உயிர்
 மடிய வாழ்வோரும் இருக்கிறாரே!
நொடிப்பொழுது இதனை நினைத்திடுவோம் - நம்
 நெஞ்சில் உலகநலம் பதித்திடுவோம்!

-கம்பார் கனிமொழி

(10 புள்ளி)

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

**கவிதை - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 3**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**நிமிர்ந்து நில்!**

புலிமுன் நிமிர்ந்து நின்றால் அஞ்சி
போகும் அதுவும் பின்னாலே!
பழிக்குப் பயந்து குனிந்தால் எலியும்
பாய்ந்து விழுமே உன்மேலே!
விழிகள் திறந்து நிமிர்ந்தால் தானே
விடியல் உன்னை வரவேற்கும்!
விளம்பும் சொற்கள் நிமிர்ந்து நிற்க
வேண்டும் இலையேல் துயர்கூடும்!

-கம்பார் கனிமொழி

(10 புள்ளி)

| | |
|---|---|
| முன்னுரை | |
| தெரிநிலைக் கருத்து | |
| புதைநிலைக் கருத்து | |
| முடிவுரை | |

## உரைநடை - தொகுத்தல் : எடுத்துக்காட்டு வினாவும் பரிந்துரைக்கப்படும் விடையும்

**குறிப்பு**

- இரண்டு முதல் மூன்று சிறுபத்திகள் கொண்ட உரைநடைப் பகுதியாக இருக்கும்

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம்**

நல்ல பாடல்கள், பக்தி, நன்னெறி, பண்பாடு ஆகியவை சிதறிப்போகாது சிறப்பாகத் தந்ததுதான் அன்றைய தமிழ்த் திரைப்படம். இன்றைய பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்களோ எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றன.

இன்றைய திரைப்படங்களில் கருத்தாழமிக்க பாடல்கள் மிகவும் அருகிவிட்டன. ஓரிரு பாடல்களைத் தவிர மற்றவை விரசத்தைத் தூண்டுவதாகத்தான் இருக்கின்றன. இவ்வாறான பாடல்கள் இளையோரிடையே தீய சிந்தனைகளை ஊட்டி அவர்களைத் தீய செயல்களுக்கு இட்டுச்செல்கின்றன என்றால் அது மிகையாகாது.

அடுத்து, நடிகர்களின் உடை பற்றி சொல்லும்போதே பலர் முகம் சுளிக்கின்றனர்! அன்றைய திரைப்படங்களில் நமது கலை, பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடைகள் அணிந்திருந்தனர். இன்றோ நாகரிகம் எனும் போர்வையில் நமது பண்பாட்டிற்கு ஒவ்வாத உடைகளே திரையில் அதிகம் காணப்படுகின்றன. நம்மினப் பெண்களும் அதுபோல ஆடைகளை அணிந்துகொள்வது, நாளடைவில் நம் பண்பாட்டு உடைகள் மறந்துபோகும் நிலை வருமோ என்னும் அச்சத்தை நமக்கு ஏற்படுத்துகிறது.

(10 புள்ளி)

**முன்னுரை**

- இவ்வுரைநடைப் பகுதி இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் பற்றி விவரிக்கிறது.

**தெரிநிலைக் கருத்து**

- அன்றைய திரைப்படம் நமக்குப் பயனான விசயங்களை நிறைய தந்தது. **(கருத்து 1)** ஆனால், இன்றைய பெரும்பாலான திரைப்படங்களோ எதிர்மாறான விளைவுகளையே அதிகம் ஏற்படுத்துகின்றன. **(கருத்து 2)** தொடர்ந்து, இன்றைய திரைப்படங்களில் கருத்தாழமிக்க பாடல்கள் மிகவும் அருகிவிட்டன. **(கருத்து 3)** மேலும், கருத்தில்லாப் பாடல்கள் இளையோரைத் தீயவழிக்கு இட்டுச் செல்கின்றன. **(கருத்து 4)** அடுத்து, அன்றைய திரைப்படங்களில் நமது கலை, பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடைகள் அணிந்திருந்தனர். **(கருத்து 5)** ஆனால், இன்றோ நமது பண்பாட்டிற்கு ஒவ்வாத நாகரீக உடைகளையே திரையில் அதிகம் காண்கிறோம். **(கருத்து 6)** தொடர்ந்து, நம்மினப் பெண்களும் அவ்வாறு அணிவதால், நம் பண்பாட்டு உடைகள் நாளடைவில் மறந்து, மறைந்துபோகும். **(கருத்து 7)**

**புதைநிலைக் கருத்து**

- அன்று நல்ல நல்ல திரைப்படங்களைப் பார்த்து மகிழ்ந்தோம். **(கருத்து 1)** இன்றோ அவ்வாறான படங்களைக் காண்பது மிக அரிதாக உள்ளது. **(கருத்து 2)** அதோடு, இன்றைய

திரைப்படங்களின் பெரும்பாலான பாடல்கள் மோசமாக உள்ளன. **(கருத்து 3)** எனவே, அத்தகைய பாடல்கள் இளையோரை நல்வழிக்குக் கொண்டு செல்லவில்லை. **(கருத்து 4)** அது தவிர, அன்றைய திரைப்படங்களில் பார்த்த நமது பண்பாட்டு உடைகளை இன்று காண முடியவில்லை **(கருத்து 5)** இதனால், நம் பண்பாட்டு உடைகள் நாளடைவில் மறையக்கூடும். **(கருத்து 6)**

**முடிவுரை**

- ஆகவே, இன்றைய திரைப்படங்களைப் பார்ப்பதை நாம் குறைத்துக்கொள்ள வேண்டும். **(பரிந்துரை)**
- ஆகையால், இன்றைய திரைப்படங்களினால் நம் பண்பாடு சீரழிய வாய்ப்புள்ளது. **(விளைவு)**
- சுருங்கக் கூறின், இன்றைய திரைப்படங்கள் நமக்குப் போதிய பயனளிப்பதாக இல்லை. **(சுய கருத்து)**
- இதுகாறும், இன்றைய திரைப்படங்களால் சமுதாயத்திற்குப் பாதிப்பு அதிகம் எனத் தெரிகிறது. **(ஏற்புடைய முடிவு)**

**எடுத்துக்காட்டு விடை - 1**

இவ்வுரைநடைப் பகுதி இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் பற்றி விவரிக்கிறது.

அன்றைய திரைப்படம் நமக்குப் பயனான விசயங்களை நிறைய தந்தது. ஆனால், இன்றைய பெரும்பாலான திரைப்படங்களோ எதிர்மாறான விளைவுகளையே அதிகம் ஏற்படுத்துகின்றன. தொடர்ந்து, இன்றைய திரைப்படங்களில் கருத்தாழமிக்க பாடல்கள் மிகவும் அருகிவிட்டன. (3 கருத்து)

அன்று நல்ல நல்ல திரைப்படங்களைப் பார்த்து மகிழ்ந்தோம். இன்றோ அவ்வாறான படங்களைக் காண்பது மிக அரிதாக உள்ளது. (2 கருத்து)

ஆகவே, இன்றைய திரைப்படங்களைப் பார்ப்பதை நாம் குறைத்துக்கொள்ள வேண்டும்.

(50 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 2**

இந்த உரைநடைப் பகுதி இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் பற்றி விவரிக்கிறது.

இன்றைய திரைப்படங்களில் கருத்தாழமிக்க பாடல்கள் மிகவும் அருகிவிட்டன. மேலும், கருத்தில்லாப் பாடல்கள் இளையோரைத் தீயவழிக்கு இட்டுச் செல்கின்றன. (2 கருத்து)

இன்றைய திரைப்படங்களின் பெரும்பாலான பாடல்கள் மோசமாக உள்ளன. எனவே, அத்தகைய பாடல்கள் இளையோரை நல்வழிக்குக் கொண்டு செல்லவில்லை. அதுதவிர, அன்றைய திரைப்படங்களில் பார்த்த நமது பண்பாட்டு உடைகளை இன்று காண முடியவில்லை. (3 கருத்து)

ஆகையால், இன்றைய பெரும்பாலான திரைப்படங்களினால் நம் பண்பாடு சீரழிய வாய்ப்புள்ளது.

(53 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 3**

இந்தப் பனுவல் இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் பற்றி விவரிக்கிறது.

இன்றைய பெரும்பாலான திரைப்படங்களில் கருத்தாழமிக்க பாடல்கள் மிகவும் அருகிவிட்டன. மேலும், கருத்தில்லாப் பாடல்கள் இளையோரைத் தீயவழிக்கு இட்டுச் செல்கின்றன. அடுத்து, அன்றைய திரைப்படங்களில் நமது கலை, பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடைகள் அணிந்திருந்தனர். ஆனால், இன்றோ நமது பண்பாட்டிற்கு ஒவ்வாத நாகரீக உடைகளையே திரையில் அதிகம் காண்கிறோம். (4 கருத்து)

நம் பண்பாட்டு உடைகள் நாளடைவில் மறையக்கூடும். (1 கருத்து)

சுருங்கக் கூறின், இன்றைய திரைப்படங்கள் நமக்குப் போதிய பயனளிப்பதாக இல்லை.

(54 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 4**

இவ்வுரைநடைப் பகுதி இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் பற்றி விவரிக்கிறது.

இன்றைய திரைப்படங்கள் எதிர்மாறான விளைவுகளையே அதிகம் ஏற்படுத்துகின்றன. (1 கருத்து)

அன்று நல்ல நல்ல திரைப்படங்களைப் பார்த்து மகிழ்ந்தோம். இன்றோ அவ்வாறான படங்களைக் காண்பது மிக அரிதாக உள்ளது. அதோடு, இன்றைய திரைப்படங்களின் பெரும்பாலான பாடல்கள் மோசமாக உள்ளன. எனவே, அத்தகைய பாடல்கள் இளையோரை நல்வழிக்குக் கொண்டு செல்லவில்லை. (4 கருத்து)

இதுகாறும், இன்றைய பெரும்பாலான திரைப்படங்களால் சமுதாயத்திற்குப் பாதிப்பு அதிகம் எனத் தெரிகிறது.

(50 சொற்கள்)

**உரைநடை - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 1**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு**

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

எனும் வள்ளுவன் குறளுக்கு ஏற்ப தூய்மை என்பது நமக்கு மிகவும் அவசியம். புறந்தூய்மையான சுற்றுச்சூழல் தூய்மை மிகவும் முக்கியமாகும்.

முதலில் நிலத்தில் விதை மட்டும் விதைத்தோம். தற்போது நெகிழி எனும் சாத்தானைச் சேர்த்துப் புதைப்பதால் நிலத்தில் மலட்டுத்தன்மை ஏற்பட்டுவிட்டது. தொழிற்சாலை கழிவுகளில் இருக்கும் நச்சு, மண்ணையும் நீரையும் ஒருசேர நாசமாக்குகிறது. நெகிழிப் பைகளை மண்ணில் கொட்டுவதால், அது மக்க பல வருடம் ஆகின்றன. நிலத்தில் புதையுண்ட நெகிழி மூலம் வேளாண்மை நிலங்கள் மாசுபட்டு, வீரியமிக்க செடி, கொடிகள் வளர்ச்சித் தன்மையை இழக்கின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் சராசரி ஒரு நாளைக்குப் பயன்படுத்த குறைந்தது ஐந்து லிட்டர் நீர் தேவைப்படும். அந்த நீர் ஆறு, ஏரி, குளம், மூலம் கிடைக்கிறது. அந்த நீர் இன்று மாசுபட்டுள்ளது. இந்த நீரைக் குடிப்பது மூலம் குடல், தோல் நோய்களும் ஏற்படுகின்றன.

**(இணையக் கட்டுரை - சில மாற்றங்களுடன்)**

(10 புள்ளி)

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

## உரைநடை - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 2

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்**

21ஆம் நூற்றாண்டில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகச் சமுதாய அமைப்புகளில் பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பழைய மரபுகளும் சிந்தனைகளும் உடைக்கப்பட்டுப் புதிய சித்தாத்தங்களும் புதிய மரபுகளும் படைக்கப்பட்டுள்ளன.

இவ்வகையான சமுதாயச் சூழ்நிலைகளில்தான் இன்றைய இளைஞர்கள் வளர்கின்றனர். பிறர்நலம் நாடுதல், நன்றி மறவாமை, விட்டுக் கொடுத்தல், பற்றும் பாசமும், நேர்மை வழி, தன்னடக்கம் போன்ற நெறிகளை மறந்த நிலையிலே உள்ளனர். இவ்வகையான சூழல்களில் வாழ்கின்ற இளைஞர்களுக்குத் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகளை நினைவூட்ட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் உள்ளோம்.

நவநாகரிகம் வளர்ந்துவிட்ட இக்காலத்தில் புலால் உண்பதையும், உயிர்பலி கொடுப்பதையும், மது அருந்துவதையும் மக்கள் தவறாக நினைக்கவில்லை; அவற்றை ஒதுக்குவதுமில்லை. ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, 'புலால் உண்ணாமை', 'கொல்லாமை', கள்ளுண்ணாமை' ஆகிய அத்தியாவசியச் சமூகக் கோட்பாடுகளை வலியுறுத்திச் சென்றுள்ளார் தெய்வப்புலவர்.

**(இணையக் கட்டுரை - சில மாற்றங்களுடன்)**

(10 புள்ளி)

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

**உரைநடை - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 3**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்து, அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**சுற்றுலாத்துறை வளர்ச்சியின் பயன்கள்**

இன்று உலகில் பல நாடுகள் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல திட்டங்களைத் தீட்டி வெற்றிபெற்று வருகின்றன. நம் நாடும் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுற்றுலாத்துறை வளர்ச்சியினால் நம் நாட்டின் பொருளாதாரம் நன்கு பெருகுகிறது; நாடு மேம்பாடு காண்கிறது. எடுத்துக்காட்டாக, போக்குவரத்துத் துறை, கைவினைப் பொருள் துறை, தங்கும் விடுதித் துறை போன்ற துறைகள் வளர்வதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. நாட்டு மக்களுக்கும் வேலை வாய்ப்புகள் கிடைத்து அவர்களது வாழ்க்கை வளமாகிறது.

ஒரு தனிமனிதன் சுற்றுலா செல்வதால் அவன் பொழுது இன்பமாகக் கழிகிறது. வீட்டிலேயே அடைந்து கிடக்காமல் வெளியே சென்று வருவது மனத்திற்கு இன்பம் தரும். நூலில் படித்த, மற்றவர் சொல்லக் கேட்ட, ஊடகங்களில் பார்த்த இடங்களை நேரில் சென்று காண்பதால் நமது பொது அறிவும் வளர்கிறது.

**(இணையக் கட்டுரை - சில மாற்றங்களுடன்)**

(10 புள்ளி)

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

**புள்ளிவிவரப் பட்டியல் - தொகுத்தல் : எடுத்துக்காட்டு வினாவும் பரிந்துரைக்கப்படும் விடையும்**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரப் பட்டியலிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**2021இல் பாகான் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவரிடையே காணப்பட்ட கட்டொழுங்குச் சிக்கல்கள்**

| எண் | கட்டொழுங்குச் சிக்கல்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1 | பள்ளிக்கு மட்டம் போடுதல் | 45,251 |
| 2 | பகடிவதையில் ஈடுபடுதல் | 2,698 |
| 3 | பள்ளி வசதிகளை நாசப்படுத்துதல் | 1,663 |
| 4 | குற்றவியல் நடவடிக்கையில் ஈடுபடுதல் | 5,817 |
| 5 | புகை பிடித்தல் | 7,424 |
| | **ஒட்டு மொத்தம்** | **62,853** |

*(மூலம்: மாணவர் நலப்பிரிவு, மாவட்டக் கல்வி அலுவலகம்)*

(10 புள்ளி)

**முன்னுரை**

- இந்தப் புள்ளிவிவரப் பட்டியல் 2021இல் பாகான் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவரிடையே காணப்பட்ட கட்டொழுங்குச் சிக்கல்களை விளக்குகின்றது. **(1 புள்ளி)**

**தெரிநிலைக் கருத்து**

- கட்டொழுங்குச் சிக்கல்களுள், பள்ளிக்கு மட்டம் போடுவதில் மிக அதிகமான எண்ணிக்கையில் அதாவது 45,251 மாணவர் ஈடுபட்டுள்ளனர். **(கருத்து 1)** அதற்கடுத்த நிலையில், 7,424 மாணவர் புகை பிடித்தலை மேற்கொண்டுள்ளனர். **(கருத்து 2)** மேலும், 1,663 மாணவர் பள்ளி வசதிகளை நாசப்படுத்தியுள்ளனர். **(கருத்து3)** அதோடு, பகடிவதையைக் கையாண்ட மாணவர் எண்ணிக்கை 2,698 ஆகும். **(கருத்து 4)** இறுதியாக, குற்றவியல் நடவடிக்கையில் 5,817 மாணவர் சம்பந்தப்பட்டுள்ளனர். **(கருத்து 5)** ஒட்டு மொத்தத்தில் 62,853 மாணவர் கட்டொழுக்குச் சிக்கல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். **(கருத்து 6)**

**புதைநிலைக் கருத்து**

- மாணவர்கள் பள்ளிக்கு மட்டம் போடுவதானது அவர்களுக்குக் கல்வியில் அக்கறை இல்லாததைக் காட்டுகிறது. **(கருத்து 1)** அடுத்து, அவர்கள் பள்ளியின் சட்டதிட்டங்களை மதிக்காததைக் காண முடிகிறது. **(கருத்து 2)** தொடர்ந்து, மாணவர்களுக்குப் பள்ளியின் மீது அக்கறையோ பற்றோ இருப்பதுமில்லை. **(கருத்து 3)** அதோடு, மாணவரிடையே சுய கட்டுப்பாடு இல்லாமை இச்சிக்கல்களுக்குப் பெருங்காரணம் எனலாம். **(கருத்து 4)**

**முடிவுரை**

- ஆகவே, இச்சிக்கல்களைக் களைய அனைவரின் ஒத்துழைப்பும் தேவை. **(பரிந்துரை)**
- இச்சூழல் நீடித்தால், மாணவர்களின் எதிர்காலம் பெருமளவில் பாதிக்கக்கூடும். **(விளைவு)**
- ஒட்டு மொத்தத்தில், இன்றைய மாணவர்களின் போக்குக் கவலையளிப்பதாக இருக்கிறது. **(சுய கருத்து)**
- சுருங்கக் கூறின், இன்றைய மாணவரே நாளைய தலைவர் என்பது வெள்ளிடை மலையாகும். **(ஏற்புடைய முடிவு)**

**எடுத்துக்காட்டு விடை - 1**

இந்தப் புள்ளிவிவரப் பட்டியல் 2021இல் பாகான் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவரிடையே காணப்பட்ட கட்டொழுங்குச் சிக்கல்களை விளக்குகின்றது.

கட்டொழுங்குச் சிக்கல்களுள், பள்ளிக்கு மட்டம் போடுவதில் மிக அதிகமான எண்ணிக்கையில் அதாவது 45,251 மாணவர் ஈடுபட்டுள்ளனர். அதற்கடுத்த நிலையில், 7,424 மாணவர் புகை பிடித்தலை மேற்கொண்டுள்ளனர். மேலும், 1,663 மாணவர் பள்ளி வசதிகளை நாசப்படுத்தியுள்ளனர். (3 கருத்து)

மாணவர்கள் பள்ளிக்கு மட்டம் போடுவதானது அவர்களுக்குக் கல்வியில் அக்கறை இல்லாததைக் காட்டுகிறது. தொடர்ந்து, அவர்கள் பள்ளியின் சட்டதிட்டங்களை மதிக்காததைக் காண முடிகிறது. (2 கருத்து)

ஆகவே, இச்சிக்கல்களைக் களைய அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.

(59 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 2**

கொடுக்கப்பட்ட புள்ளிவிவரப் பட்டியல் 2021இல் பாகான் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவரிடையே காணப்பட்ட கட்டொழுங்குச் சிக்கல்களைக் காட்டுகிறது.

அதற்கடுத்த நிலையில், 7,424 மாணவர் புகை பிடித்தலை மேற்கொண்டுள்ளனர். மேலும், 1,663 மாணவர் பள்ளி வசதிகளை நாசப்படுத்தியுள்ளனர். (2 கருத்து)

அவர்கள் பள்ளியின் சட்டதிட்டங்களை மதிக்காததைக் காண முடிகிறது. தொடர்ந்து, மாணவர்களுக்குப் பள்ளியின் மீது அக்கறையோ பற்றோ இருப்பதுமில்லை. அதோடு, மாணவரிடையே சுய கட்டுப்பாடு இல்லாமை இச்சிக்கல்களுக்குப் பெருங்காரணம் எனலாம். (3 கருத்து)

இச்சூழல் நீடித்தால், மாணவர்களின் எதிர்காலம் பெருமளவில் பாதிக்கக்கூடும்.

(53 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 3**

தரப்பட்ட புள்ளிவிவரப் பட்டியல் 2021இல் பாகான் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவரிடையே காணப்பட்ட கட்டொழுங்குச் சிக்கல்களை விவரிகின்றது.

1,663 மாணவர் பள்ளி வசதிகளை நாசப்படுத்தியுள்ளனர். அதோடு, பகடிவதையைக் கையாண்ட மாணவர் எண்ணிக்கை 2,698 ஆகும். இறுதியாக, குற்றவியல் நடவடிக்கையில் 5,817 மாணவர் சம்பந்தப்பட்டுள்ளனர். ஒட்டு மொத்தத்தில் 62,853 மாணவர் கட்டொழுக்குச் சிக்கல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். (4 கருத்து)

மாணவர்களுக்குப் பள்ளியின் மீது அக்கறையோ பற்றோ இருப்பதுமில்லை.

(1 கருத்து)

ஒட்டு மொத்தத்தில், இன்றைய மாணவர்களின் போக்குக் கவலையளிப்பதாக இருக்கிறது.

(52 சொற்கள்)

**எடுத்துக்காட்டு விடை - 4**

இப்புள்ளிவிவரப் பட்டியல் 2021இல் பாகான் மாவட்ட இடைநிலைப்பள்ளி மாணவரிடையே காணப்பட்ட கட்டொழுங்குச் சிக்கல்களைக் குறிக்கின்றது.

கட்டொழுங்குச் சிக்கல்களுள், பகடிவதையைக் கையாண்ட மாணவர் எண்ணிக்கை 2,698 ஆகும். (1 கருத்து)

மாணவர்கள் பள்ளிக்கு மட்டம் போடுவதானது அவர்களுக்குக் கல்வியில் அக்கறை இல்லாததைக் காட்டுகிறது. அடுத்து, அவர்கள் பள்ளியின் சட்டதிட்டங்களை மதிக்காததைக் காண முடிகிறது. மேலும், மாணவர்களுக்குப் பள்ளியின் மீது அக்கறையோ பற்றோ இருப்பதுமில்லை. அதோடு, மாணவரிடையே சுய கட்டுப்பாடு இல்லாமை இச்சிக்கல்களுக்குப் பெருங்காரணம் எனலாம். (4 கருத்து)

சுருங்கக் கூறின், இன்றைய மாணவரே நாளைய தலைவர் என்பது வெள்ளிடை மலையாகும்.

(59 சொற்கள்)

**புள்ளிவிவரப் பட்டியல் - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 1**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரப் பட்டியலிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**31/08/2021 வரையிலான பேரா மாநிலக் கோவிட் 19 நிலவரம்**

| எண் | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | குணமடைந்தோர் | 53,820 |
| 2 | சிகிச்சை பெற்று வருபவர் | 10,277 |
| 3 | அவசரச் சிகிச்சைப் பிரிவில் | 144 |
| 4 | இறப்பு | 472 |
| 5 | புதிய பாதிப்பு | 1,208 |
| | **ஒட்டு மொத்தம்** | **65,921** |

(மூலம்: பேரா மாநிலச் சுகாதாரத் துறை)

[10 புள்ளி]

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

**புள்ளிவிவரப் பட்டியல் - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 2**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரப் பட்டியலிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**2020 தோக்கியோ ஒலிம்பிக்கில்**
**தென்கிழக்காசிய நாடுகள் பெற்ற பதக்கங்கள்**

| எண் | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | பிலிப்பினா | 1 | 2 | 1 | 4 |
| 2 | இந்தோனீசியா | 1 | 1 | 3 | 5 |
| 3 | தாய்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| 4 | மலேசியா | 0 | 1 | 1 | 2 |
| 5 | சிங்கப்பூர் | 0 | 0 | 0 | 0 |
| 6 | வியட்நாம் | 0 | 0 | 0 | 0 |
| 7 | லாவோஸ் | 0 | 0 | 0 | 0 |
| 8 | கம்போடியா | 0 | 0 | 0 | 0 |
| 9 | மியன்மார் | 0 | 0 | 0 | 0 |
| 10 | புருணை | 0 | 0 | 0 | 0 |
| 11 | தீமோர் லெஸ்தே | 0 | 0 | 0 | 0 |
| | **ஒட்டு மொத்தம்** | **3** | **4** | **6** | **13** |

(மூலம்: அனைத்துல ஒலிம்பிக் மன்றம்)

[10 புள்ளி]

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

**புள்ளிவிவரப் பட்டியல் - தொகுத்தல் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 3**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரப் பட்டியலிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**பொங்கல் விழாவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்தவர் விவரம்**

| எண் | விளையாட்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பல்லாங்குழி | 15 | 27 | 42 |
| 2 | உறி அடித்தல் | 24 | 17 | 41 |
| 3 | கபடி | 42 | 21 | 63 |
| 4 | தட்டாங்கல் | 8 | 15 | 23 |
| 5 | சிலம்பம் | 14 | 10 | 24 |
| 6 | கிளிதட்டு | 15 | 19 | 34 |
| 7 | வழுக்கு மரம் ஏறுதல் | 25 | - | 25 |
| | **ஒட்டு மொத்தம்** | **143** | **109** | **252** |

[10 புள்ளி]

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| **தெரிநிலைக் கருத்து** | |
| **புதைநிலைக் கருத்து** | |
| **முடிவுரை** | |

தமிழ்மொழி தாள் 2

# பிரிவு இ:

# செய்யுளும் மொழியணியும்

## பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்
## வினாக்கள் 16 முதல் 19 வரை
## [20 புள்ளி]

**பொதுவான விளக்கம்**
**வினா எண் 16**

- **இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர்** ஏதாகிலும் **இரண்டு** சோதிக்கப்படும்.
- இப்பகுதியில் படிவம் 4, 5இல் உள்ள **இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர்** ஆகியவற்றிற்கு **முக்கியத்துவம்** தரப்படும்.
- **கொடுக்கப்பட்ட மொழியணி** வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- ஒரே வாக்கியமாகப் **பொருள் விளங்க** அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- வாக்கியத்தில் **சூழல், சிக்கல், தீர்வு** ஆகியவை அமைந்திருக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு வினா:**

16. பின்வரும் மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

(அ) **நெளிவு சுளிவு**

சிறுகதை பயிலரங்கில் கலந்து கொண்ட மாணவர்கள் சிறுகதை எழுதுவதற்கான நெளிவு சுளிவுகளை அறிந்துகொண்டு தரமான படைப்புகளைப் படைத்தனர்.

[2 புள்ளி]

(ஆ) **சண்டை சச்சரவு**

முதல்வர் திரு. யோகன், பள்ளியில் அடிக்கடி சண்டை சச்சரவில் ஈடுபட்டு வந்த அகிலனைக் கட்டொழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தி அவனைப் பள்ளியிலிருந்து நீக்கினார்.

[2 புள்ளி]

**வினா எண் 17**

- இப்பகுதியில் **திருக்குறள், பழமொழி** ஆகிய இரண்டு **மட்டுமே** சோதிக்கப்படும்.
- இப்பகுதியில் படிவம் 4, 5இல் உள்ள **திருக்குறள், பழமொழி** ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்படும்.
- **இலக்கண இலக்கிய விளக்கவுரையில் உள்ளது போல்** பொருளை எழுத வேண்டும்.
- **பொருள் சிதையாமல்** சொந்த வாக்கியத்தில் **சரியான பொருளை** எழுதியிருந்தால் **ஏற்றுக் கொள்ளப்படும்.**
- இப்பகுதியில் இரு வகையில் வினாக்கள் கொடுக்கப்படலாம்.

  - திருக்குறளுக்கும் பழமொழிக்கும் **பொருள் எழுதச்** சொல்லிக் கேள்வி எழுப்பப்படலாம்.

**அல்லது**

  - **பொருளைக் கொடுத்து** அதற்கேற்ற **திருக்குறளையும் பழமொழியையும்** எழுதச் சொல்லப்படலாம்.

**எடுத்துக்காட்டு வினா:**

17 (அ) கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளுக்கேற்ற பொருளை எழுதுக.

> **நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
> **கெடுநீரார் காமக் கலன். (605)**

[2 புள்ளி]

**காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், அளவுக்கு அதிகமான தூக்கம் ஆகிய நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.**

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள பழமொழிக்கேற்ற பொருளை எழுதுக.

> **சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்**

[2 புள்ளி]

**நமக்குத் தேவையான செல்வம், அறிவு, அனுபவம் போன்றவற்றை முன்கூட்டியே பெற்றிருந்தால்தான் அவை நம் தேவைக்குப் பயன்படும்.**

**வினா எண் 18**

- இப்பகுதியில் **படிவம் 4, 5இல் உள்ள செய்யுள்களுக்கு முக்கியத்துவம்** தரப்படும்.
- **இலக்கண இலக்கிய விளக்கவுரையில் உள்ளதுபோல்** பொருள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- **பொருள் சிதையாமல்** சொந்த வாக்கியத்தில் **சரியான பொருளை** எழுதியிருந்தால் **ஏற்றுக் கொள்ளப்படும்.**
- **செய்யுளில் கோடிட்ட வரிகளுக்கு மட்டும்** பொருளை எழுத வேண்டும்.

**எடுத்துக்காட்டு வினா:**

18. கோடிடப்பட்டுள்ள செய்யுளடிகளின் பொருளை எழுதுக.

> **ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
> **இரண்டறி வதுவே அதனொடு நாவே**
> மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
> நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
> ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
> ஆறறி வதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.
> (தொல்காப்பியம்)

[4 புள்ளி]

**ஓரறிவு பெற்ற உயிர் என்பது உடம்பினால் அறியும் இயல்பு உடையது. இரண்டறிவு பெற்ற உயிர் என்பது, உடம்பினாலும் வாயினாலும் அறியும் இயல்பு உடையது.**

**செய்யுளும் மொழியணியும்: பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 1**

16. பின்வரும் மொழியணிகளைப் பொருள் விளங்க **வாக்கியத்தில்** அமைத்துக் காட்டுக.

(அ) **வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல** [2 புள்ளி]
(ஆ) **ஆதி அந்தம்** [2 புள்ளி]

17 (அ) கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கு ஏற்ற **திருக்குறளை** எழுதுக.

**தமக்குத் துன்பம் செய்தவருக்கும் இன்பமே செய்யாவிடின் சான்றாண்மை என்ற பெருங்குணம் இருந்தும் பயனில்லை.**

[2 புள்ளி]

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள பழமொழிக்கேற்ற **பொருளை** எழுதுக.

**திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.**

[2 புள்ளி]

18. கோடிடப்பட்டுள்ள செய்யுளடிகளின் **பொருளை** எழுதுக.

குயிலினம் வதுவை செய்ய,
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
**<u>அயில்விழி மகளிர் ஆடும்</u>**
**<u>அரங்கினுக்கு அழகு செய்ய</u>**,
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

[4 புள்ளி]

**செய்யுளும் மொழியணியும்: பயிற்சிக்கும் முயற்சிக்கும் - 2**

16. பின்வரும் மொழியணிகளைப் பொருள் விளங்க **வாக்கியத்தில்** அமைத்துக் காட்டுக.

(அ) **தட்டிக் கொடுத்தல்** [2 புள்ளி]

(ஆ) **இன்ப துன்பம்** [2 புள்ளி]

17 (அ) கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளுக்கேற்ற **பொருளை** எழுதுக.

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு. (783)**

[2 புள்ளி]

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள பழமொழிக்கேற்ற **பொருளை** எழுதுக.

**உணவை நன்கு மென்று தின்றால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.**

[2 புள்ளி]

18. கோடிடப்பட்டுள்ள செய்யுளடிகளின் **பொருளை** எழுதுக.

**<u>யாதும் ஊரே; யாவரும் கேளிர்;</u>**
**<u>தீதும் நன்றும் பிறர்தர வாரா;</u>**
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னா தென்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

[4 புள்ளி]

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**

**வினா 19**

**[8 புள்ளி]**

**வினா எண் 19**

- இப்பகுதியில் **படிவம் 1 முதல் 5 வரையிலான** மொழியணிகள் சோதிக்கப்படும்.
- **ஏதாகிலும் 4** மொழியணிகள் சோதிக்கப்படும். (இணைமொழி, இரட்டைக்கிளவி, உவமைத்தொடர், பழமொழி, மரபுத்தொடர்)
- ஒவ்வொரு மொழியணிக்கும் **2 புள்ளி** விகிதத்தில் இப்பகுதிக்கு **8 புள்ளி** வழங்கப்படும்.
- இப்பகுதியில் பனுவல் **ஒரே சூழலிலும் பல்வகைச் சூழலிலும்** அமைந்திருக்கும்.
- **பல்வகை வடிவங்கள் கொண்ட** பனுவல்களாக இருக்கும். (கடிதம், உரையாடல், உரை, நாளிதழ் செய்தி போன்ற இன்னும் பல)
- **கலைத்திட்டத்தில் பரிந்துரைக்கப்படாத** மொழியணிகள் எழுதப்பட்டு, பொருத்தமாக இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும்.
- **திருக்குறளும் செய்யுளும்** இப்பகுதியில் **மதிப்பிடப்படா**.

**எடுத்துக்காட்டு வினா**

19. கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பனுவலை மீண்டும் எழுத வேண்டாம்**.

இருபத்தோராம் நூற்றாண்டு தகவல் தொழில்நுட்ப யுகமாக உருமாற்றம் பெற்றுள்ளது. தற்சமயம் தகவல் தொழில்நுட்ப ஊடகங்களான புலனம், முகநூல், கீச்சகம் போன்றவை இளையோரின் வாழ்வை முழுமையாகத் தன் கட்டுபாட்டில் கொண்டு வந்துவிட்டது. தங்களின் அன்றாட வாழ்வில் பாதி நேரத்தை இளையோர் இவ்வாறான ஊடகங்களிலேயே மற்றவர்களுடன் பயன்றறப் பேச்சுகளைப் பேசி முடித்துக் கொள்கின்றனர். **(I மரபுத்தொடர்)**.

இந்தச் சமூக ஊடகங்களின் வழி புதிய தோழமைகள் இவர்களுக்கு மலர்கிறது. முகம் தெரியாத, யாரென்று அறியாத நபர்களிடம் நட்பு கொள்கிறார்கள். இவ்வகை நட்பு நல்ல நிலையில் உள்ள ஒன்றிற்கு மெல்ல மெல்ல கேடு விளைவித்தல் போல இவர்களைத் தவறான பாதைக்கு இழுத்துச் சென்று விடுகிறது. **(II உவமைத்தொடர்)**. புதிய நட்பின் இன்சொல்லில் மயங்கி அவர்கள் காட்டும் தவறான வழிகாட்டுதலுக்கு ஆளாகுகிறார்கள்.

இளங்கன்று பயம் அறியாது என்பது போல் அச்சமின்றி முகநூல் நண்பர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி தகாத செயல்களில் ஈடுபடுகிறார்கள். சட்டத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்ட பிறகுதான் விதிமுறைகளை மீறி பெரிய தவறு செய்து விட்டோம் என்பதை உணர்கிறார்கள். **(III இணைமொழி)**. முன்னர் நாம் செய்த செயலின் பலனைப் பின்னர் நாம் அடைவது உறுதி என்று தெரியாமல் தொடர்ந்து தீயச் செயலிலிருந்து விடுபட முடியாமல் மீதமுள்ள வாழ்க்கையை எந்தவோர் இலக்குமின்றி வாழ்கிறார்கள். **(IV பழமொழி)**

[8 புள்ளி]

**விடை**

| | |
|---|---|
| (I) | வெட்டிப் பேச்சு |
| (II) | நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல |
| (III) | சட்ட திட்டம் |
| (IV) | முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் |

## செய்யுளும் மொழியணியும் : பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1

19. கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **சூழல்களை மீண்டும் எழுத வேண்டாம்**.

(அ) குமுதனின் நடத்தையைப் பற்றி பெண்கள் பலர் காவல் துறையில் புகார் செய்தனர். காவல் துறையினர் அப்புகாரையொட்டி விசாரணை மேற்கொண்டனர். அதன் மூலம், குமுதன் ஆசைவார்த்தை கூறி பெண்கள் பலரை வசப்படுத்தி ஏமாற்றி வந்ததைக் கண்டுபிடித்து அவனைக் கைது செய்தனர். **(I மரபுத்தொடர்)**

(ஆ) நாவலன் தன் முதலாளியிடம் நெருங்கிப் பழகி வந்தான். இவ்வாறு செய்தால் பதவி உயர்வு தனக்கு உறுதியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தான். ஆனால், அவனைவிட சிறந்த கல்வித் தகுதியைப் பெற்றிருந்த ராமுவுக்குப் பதவி உயர்வு கிடைத்ததை அறிந்து நாவலன் ஏமாற்றம் அடைந்தான். **(II உவமைத்தொடர்)**

(இ) எஸ்.பி.பாலசுப்பிரமணியம் புகழ் பெற்ற பாடகர். அவருடைய மறைவு இசை உலகிற்குப் பேரிழப்பாகும். அவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். **(III இரட்டைக்கிளவி)**

(ஈ) நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின்போது பலர் வேலை இழந்து சிரமத்திற்கு ஆளாகினர். அவ்வேளையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பலருக்கு வழக்கறிஞர் திரு. அன்பழகன் பாகுபாடின்றி தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார். **(IV இணைமொழி)**

[8 புள்ளி]

## செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2

19. கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. விக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம்.

(அ) இன்றையச் சூழலில் இயங்கலை கற்றல் பல நுணுக்கங்களைக் கொண்டுள்ளது. ஆகையால், ஆசிரியர்கள் அதனைத் திறம்பட கற்றுப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில், மாணவர்களுக்கு இயங்கலையில் கற்பிக்க எளிமையாக இருக்கும். **(I மரபுத்தொடர்)**

(ஆ) தீபத் திருநாளை முன்னிட்டு மலர்க்கொடி வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தனர். அவர்களை மன உணர்வோடு முகம் மலர வரவேற்று உபசரித்தாள். அவர்களுக்காக பலவகை உணவுகளையும் பலகாரங்களையும் பரிமாறினாள். **(II இணைமொழி)**

(இ) உடல் நலக் குறைவால் பள்ளிக்கு வர இயலாத கதிர் பல இடுபணிகளைச் செய்யாமல் இருந்தான். ஆகையால், அவன் தமிழ்மொழிப் பாடத்தைப் பற்றி விளக்கம் பெற ஆசிரியர் திருமதி தாமரையைத் தேடி ஆசிரியர் அறைக்குச் சென்றான். அப்போது கதிரின் எதிரே ஆசிரியர் தற்செயலாக வந்து நின்றார்.
**(III உவமைத்தொடர்)**

(ஈ) சிறுவயது முதல் பல தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தான் கண்ணன். மதுபானம் அருந்துதல், போதைப் பொருள் உட்கொள்ளுதல், கொலை, கொள்ளை என பல கொடுமைகளைச் செய்து வந்தான். தற்பொழுது சிறையில் தண்டனையை அனுபவித்து வருகிறான். **(IV பழமொழி)**

[8 புள்ளி]

## செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3

19. கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. பனுவலை மீண்டும் எழுத வேண்டாம்.

அறிவுமணி அவ்வூரிலேயே பெரும் செல்வந்தர். சிறுவயதிலேயே குடும்பச் சூழலால் கல்வியைத் தொடர முடியாமல் நிரம்பாக் கல்வியோடு கடுமையாக உழைத்துப் பெரும் செல்வத்தைக் குவித்து வைத்தார். **(I மரபுத்தொடர்)** தன் பிள்ளைகளிடம் ஊதாரித்தனத்தைக் கைவிடும்படி அறிவுரை கூறினார். அறிவுமணியின் இறப்புக்குப் பின் வியாபாரத்தைப் பெருக்க அவருடைய பிள்ளைகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அப்பா சேர்த்து வைத்த சொத்தில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

அப்பா சம்பாதித்ததை மேலும் விருத்தி பண்ணாமல் சும்மா இருந்து எடுத்துச் செலவு செய்ததினால் நாளடைவில் சொத்துகள் அனைத்தும் அழிந்தன. **(II பழமொழி)** இதனால் வறுமை அவர்களை வாட்டியது. அடுத்து என்ன செய்வது, யாரிடம் உதவி கேட்பது என்று அறியாமல் விழித்தார்கள். ஆதரவு இல்லாத நிலையில் இருந்தவர்களுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. **(III உவமைத்தொடர்)** தங்கள் அப்பாவின் உழைப்பில் கடைசியாக மிஞ்சியது அவர்கள் வாழும் வீடுதான். அதனை எப்படியாவது அவர்களுள் ஒருவர் தங்கள் வசப்படுத்த முயன்றனர்; அதனால், அடிக்கடி தகராறுகளிலும் ஈடுபட்டனர். **(IV இணைமொழி)** இன்றுவரை இஃது ஒரு தொடர்கதையாக இருந்து வருகிறது.

[8 புள்ளி]

## செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 4

19. கீழ்க்காணும் உரையாடலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. உரையாடலை மீண்டும் எழுத வேண்டாம்.

குமரன் : எழிலன் உனக்குச் செய்தி தெரியுமா?

எழிலன் : சொன்னால் தானே தெரியும். ஏதோ புதிர்ப்போடுவது போல பேசுகிறாயே!

குமரன் : புதிர் ஒன்றுமில்லை. நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் கோவலன் தமது வீட்டை இழந்ததோடு அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த சொத்துகளை எல்லாம் இழந்து விட்டாராமே! **(I மரபுத்தொடர்)**

எழிலன் : அப்படியா, பாவம்! இருந்தாலும் அவரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இதற்காக முடங்கிப் போய்விடமாட்டார். உணவையும் தூக்கத்தையும் மறந்தாவது அவர் இந்நிலையிலிருந்து மீண்டு விடுவார். **(II இணைமொழி)**

குமரன் : நீ சொல்வதும் உண்மைதான். ஆனால், அவர் இழந்ததையே நினைத்துச் சோகமானால் உடல் சோர்வடைந்து மனக்கவலைக்கு உள்ளாகி வலுவிழந்தவராகி விடுவாரே. **(III பழமொழி)**

எழிலன் : அவர் இதற்காக வருந்திச் சோர்ந்து போகமாட்டார். நீ வேண்டுமானால் பார், இன்னும் சிறிது காலத்தில் கோவலன் இழந்ததையெல்லாம் மீட்டுச் சீரும் சிறப்புடன் வாழ்வார். நீ அவரைச் சந்தித்தாயா? அவரைச் சந்தித்தால் ஆறுதலாய் நாலு வார்த்தைப் பேசு. அவர் ஏற்கனவே துன்பத்துக்குமேல் துன்பத்தில் இருக்கிறார்; இன்னும் நோகும்படி பேசாதே. **(IV உவமைத்தொடர்)**

குமரன் : ஹும்... சரி எழில். எனக்குச் சில வேலைகள் இருக்கின்றன. மீண்டும் சந்திப்போம்.

எழிலன் : சரி குமரா. மீண்டும் சந்திப்போம்.

[8 புள்ளி]

**செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 5**

19. கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. பனுவலை மீண்டும் எழுத வேண்டாம்.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பல தரப்பினரின் பங்கு முக்கியம் என்பதை நாம் அறிவோம். அவர்களில் பெற்றோர்களே முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வித் தரம் உயர பல வழிகளில் உதவிக் கரம் நீட்ட முடியும். அவற்றில் ஊக்கமும் உற்சாகமும் கொடுப்பது முதன்மையாகும். **(I மரபுத்தொடர்)**.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அன்பான முறையில் அறிவுரை கூறி அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கலாம்; பாராட்டும் தெரிவிக்கலாம். ஒருவரிடமிருந்த நாம் ஒன்றைப் பெற விரும்பினால் அவருக்கு ஏற்ற வழியிலேயே அணுக வேண்டும் என்பதைப் போல அவர்களுக்குக் கல்வியின் அவசியத்தையும் விளக்கலாம். **(II பழமொழி)**. அவ்வாறு கூறியும் பயனளிக்காத பொழுது பெற்றோர்கள் சமயக் கல்வியின் மூலம் ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக வளர்த்துக் கல்வியின் மீது நாட்டம் ஏற்படுத்தலாம்.

பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் கல்விக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் எவ்வித தடைகள் இன்றி வாங்கித் தர வேண்டும். (III இணைமொழி). அவற்றில் பயிற்சிப் புத்தகங்களும் பொது அறிவு புத்தகங்களும் அடங்கும். இவை மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த உதவும். தற்கால கல்வித் தரத்திற்கு ஏற்றாற்போல் கல்விச் சாதனங்கள் பெற்றிருப்பது நன்று. தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற இவை பெரிதும் உதவும் என்பது அனைவருக்கும் மிகவும் தெளிவாகத் தெரிந்த ஒன்று. **(IV உவமைத்தொடர்)**

[8 புள்ளி]

**செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 6**

19. கீழ்க்காணும் வாக்கியங்களில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம்.

(அ) நம்முடைய உறவினர்களின் சுக துக்கங்களில் எப்பொழுதும் கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதால், நாம் அவர்களின் நம்பிக்கையைப் பெறலாம். அதுமட்டுமின்றி, குடும்ப உறவில் எவ்வித விரிசல்களும் ஏற்படாது. **(I இணைமொழி)**

(ஆ) முரளி காற்பந்து போட்டி விளையாட்டில் அதிகம் ஈடுபாடு காட்டுவான். பல போட்டி விளையாட்டுகளில் பள்ளியைப் பிரதிநிதித்து வென்றுள்ளான். புறப்பாட நடவடிக்கையில் மட்டுமல்ல, இவ்வாண்டு எஸ்.பி.எம். தேர்வில் 10 ஏக்கள் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வெற்றிப் பெறுவதிலேயே கவனம் செலுத்தினான். ஆகையால், அயராது படித்துத் தனது வெற்றியை நிலைநாட்டினான். **(II பழமொழி)**

(இ) கடந்த வாரம் சாலை விபத்தில் தன் நண்பனைப் பறிகொடுத்தான் முத்து. இரண்டு நாள்கள் கழித்து அவனுடைய அண்ணனும் சாலை விபத்தில் சிக்கினார். அவர் உயிருக்குப் போராடுவதை நினைத்துத் துன்பத்துக்குமேல் துன்பம் தன்னை வாட்டுவதால் மிகவும் கலங்கினான். **(III உவமைத்தொடர்)**

(ஈ) திருமதி கோதையின் மகள் இவ்வாண்டு படிவம் ஐந்தில் பயில்கிறாள். அவள் ஒவ்வொரு தேர்விலும் சிறந்த தேர்ச்சியைப் பெறுவாள். வருகின்ற எஸ்.பி.எம். தேர்வில் தன் மகள் நீலா சிறப்புத் தேர்ச்சிப் பெறுவாள் என்பதில் அவருக்குச் சிறிதளவும் சந்தேகமில்லை. **(IV மரபுத்தொடர்)**

[8 புள்ளி]

**செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 7**

19. கீழ்க்காணும் உரையாடலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. உரையாடலை மீண்டும் எழுத வேண்டாம்.

இராமு : வணக்கம் நண்பா. கடந்த விடுமுறையில் என் குடும்பத்தாருடன் கேமரன் மலைக்குச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டேன். இதோ நாங்கள் எடுத்த நிழற்படங்கள்.

இரவி : ஓ அடடா..கேமரன் மலை என்றாலே அங்குள்ள குளிர்ச்சித் தன்மைதான் நினைவுக்கு வருகிறது. **(I இரட்டைக்கிளவி)**

இராமு : அது உண்மைதான். எங்குப் பார்த்தாலும் இயற்கை காட்சியின் மகிமைதான். ஆனால், அங்குப் பணி புரியும் பெரும்பாலோர் அந்நிய நாட்டினராகவே காணப்பட்டனர். கடல் கடந்து பணி புரியும் இவர்களின் நிலையைக் கண்டால் சற்றுப் பரிதாபமாகத்தான் இருந்தது.

இரவி : என்ன செய்வது நண்பா... கடல் கடந்து சென்றும் செல்லவத்தைத்தேட வேண்டும் என்று நம் முன்னோர்கள் கூறியது உமக்கு நினைவில்லையா? **(II பழமொழி)**

இராமு : நன்றாக நினைவுள்ளது நண்பா... கோறணி நச்சில் ஊரடங்குக் காலகட்டத்தில் நாட்டின் பொருளாதார நிலையை நினைக்கும்போது அவர்கள் செய்யும் வேலை நிலையாமை ஆகிவிடுமோ என்ற கவலைதான். **(III உவமைத்தொடர்)**

இரவி : வாழ்க்கை என்பது சுக துக்கம் நிறைந்தது தானே நண்பா. **(IV இணைமொழி)** அதனைச் சமாளித்து வாழ்ந்து காட்டுவதுதானே சாமர்த்தியம். சரி நண்பா, எனக்கு நேரமாகிவிட்டது. நாளைச் சந்திப்போம்.

[8 புள்ளி]

**செய்யுளும் மொழியணியும் பயிற்சிக்கும் முயற்சிக்கும் 8**

19. கீழ்க்காணும் வாக்கியங்களில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக. வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம்.

(அ) ஆசிரியர் திரு மணிகண்டன் படிவம் 5 மாணவர்களுக்குத் தமிழ்மொழி பாடத்தைக் கற்பிக்கிறார். தன்னுடைய ஒவ்வொரு கற்றல் கற்பித்தலிலும் மாணவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை மையமாகக் கொண்ட படிப்பினையைக் கூறுவார். அவ்வகையில், கடந்த வகுப்பில் "நாம் மற்றவர்களிடம் எப்பொழுதும் பாகுபாடு பாராமல் பழக வேண்டும்," என்று ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார். **(I இணைமொழி)**

(ஆ) அகிலன் பள்ளிக்குச் செல்ல தாமதமாக எழுந்தான். அவசர அவசரமாகப் பள்ளிக்குத் தயாராகினான். அவன் காலை சிற்றுண்டியை நன்கு மென்று உண்ணாததைப் பார்த்த தாத்தா, "நன்கு மென்று சாப்பிட்டால்தான் நீண்ட ஆயுளைப் பெற முடியும்" என்று அறிவுரைக் கூறினார். **(II பழமொழி)**

(இ) பாரதி இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழிப் பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் இல்லை. இருப்பினும், அப்பள்ளியில் படிவம் ஒன்றில் பயிலும் ஐந்து மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்க ஆவலாக இருந்தனர். தமிழ்மொழிப் பாடம் கற்க முறையான வழிகாட்டல் இல்லாததை நினைத்து, அவர்களின் பெற்றோர்கள் மிகவும் வருந்தினர். **(III உவமைத்தொடர்)**

(ஈ) நடமாட்டக் கட்டுபாட்டு ஆணையின் போது பள்ளிகள் திறக்கப்படாமல் இருந்ததால் மாணவர்கள் இயங்கலை கல்வியில் ஈடுபட்டனர். இச்சூழலில் அகிலன் காலையில் ஓரிரு வகுப்புகளில் மட்டும் கலந்து கொண்டான். மற்ற நேரங்களில் திறன்பேசியைக் கொண்டு சமூக ஊடகங்களில் முடங்கிக் கிடந்தான். இதனால் அவன் தன் அம்மாவிடம் திட்டு வாங்கினான். **(IV மரபுத்தொடர்)**

[8 புள்ளி]

# பிரிவு ஈ : இலக்கணம்

(கேள்விகள் 20 முதல் 22 வரை)

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி]**

- இப்பகுதியில் எழுத்தியல் / சொல்லியல் / புணரியல் / வாக்கியம் / தொடரியல் தொடர்பான வினாக்கள் வினவப்படும்.
- படிவம் 1 முதல் 5 வரையிலான இலக்கணக் கூறுகள் சோதிக்கப்படும்.
- மாணவர்கள் படிவம் 1 முதல் 5 வரையுள்ள இலக்கணப் பகுதிகளை நன்கு கற்றறிய வேண்டும்.
- வினா எண் 20 & 21: 10 புள்ளியைக் கொண்டிருக்கும்.
- வினா எண் 22: 10 புள்ளியைக் கொண்டிருக்கும்.

**எடுத்துக்காட்டு வினா 20**

20. (அ) கொடுக்கப்பட்டுள்ள சொற்குவியலில் **முதற்போலியைக்** கொண்டுள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| **மைஞ்சு** | **பைசல்** | **அமைச்சு** |
| **அரசு** | **கலன்** | **ஞாயிறு** |

(3 புள்ளி)

(ஆ) **போலி** எத்தனை வகைப்படும்? அவற்றை எழுதுக. (4 புள்ளி)

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1**

20. (அ) கீழ்க்காணும் வாக்கியங்களில் காணப்படும் **இடவாகு பெயர்களை** அடையாளங்கண்டு எழுதுக.

(i) மைக்டைசனின் குத்துச்சண்டையிடும் திறனைக் கண்டு உலகமே வியந்தது.

(ii) நீண்ட விடுமுறைக்குப் பிறகு பள்ளிக்குத் திரும்பிய மாணவர்களைப் பள்ளி வரவேற்றது.

(iii) ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற வீரரை ஊரே பாராட்டியது

(3 புள்ளி)

(ஆ) ஆகுபெயர் எத்தனை வகைப்படும்? அவற்றுள் **மூன்றனை** எழுதுக. (4 புள்ளி)

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2**

20. (அ) வாக்கியங்களில் கருமையாக்கப்பட்டுள்ள சொற்களைச் **சேர்த்து எழுதுக**.

(i) மாமா பொங்கல் விழாவிற்கு வீட்டு வாசலில் **மா இலை** கட்டினார்.

(ii) வேலைக்குக் **கூலி ஆள்** கிடைக்காததால் வீட்டு உரிமையாளரே கால்வாயைச் சுத்தம் செய்தார்.

(iii) பள்ளி மாணவர்களின் உடல் வளர்ச்சிக்குக் **காலை உணவு** மிகவும் அவசியம்.

(3 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் சொற்களுள் **தன்வினைச்** சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| **ஓடியது** | **கட்டுவித்தான்** | **பாடுகிறாள்** |
| **அமர்வாள்** | **தின்றது** | **படிப்பித்தார்** |

(4 புள்ளி)

**பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3**

20. (அ) பிரித்தெழுதுக.

(i) பசுங்கிளி =

(ii) கல்லணை =

(iii) வரந்தா =

(3 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் சொற்களுள் **பிறவினைச்** சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| **சென்றாள்** | **அணிவித்தாள்** | **செய்வித்தான்** |
| **பயிற்றுவித்தாள்** | **கர்ஜித்தது** | **காண்பித்தார்** |

(4 புள்ளி)

எடுக்குக்காட்டு வினா 21

21. கொடுக்கப்பட்டுள்ள உடன்பாட்டுவினை வாக்கியத்தை **எதிர்மறை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

**முகுந்தன் விலை உயர்ந்த மகிழுந்தை வாங்கினான்.**

(2 புள்ளி)

பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1

21. கீழ்க்காணும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள **ஆகுபெயரை** அடையாளங்கண்டு எழுதுக.

**தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு, சிவா தன் வீட்டிற்கு வெள்ளை அடித்தான்.**

(2 புள்ளி)

பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2

21. கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளில் இடம்பெற்றுள்ள **போலி** சொற்களை அடையாளங்கண்டு எழுதுக.

**முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு**

(2 புள்ளி)

பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3

21. கொடுக்கப்பட்டுள்ள தன்வினை வாக்கியத்தைப் **பிறவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

**ஆசிரியர் திரு.சுந்தர் மாணவர்களுக்கான இலக்கண நூலை எழுதினார்.**

(2 புள்ளி)

**வினா 22 - பிழை ஆய்வு**
**[ 10 புள்ளி ]**

- படிவம் 1 முதல் 5 வரையிலான இலக்கணக்கூறுகள்.
- இப்பகுதியில் சிறு பனுவல் / சிறு உரையாடல் / ஐந்து வாக்கியம் போன்றவை வழங்கப்படும்.
- கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள ஐந்து பிழைகளைக் கண்டறிந்து அவற்றைத் திருத்தி எழுத வேண்டும்.
- 5க்கு மேல் எழுதப்பட்ட விடைகள் மதிப்பிடப்படா.
- மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள சிறு பனுவல் / சிறு உரையாடல் / ஐந்து வாக்கியம் போன்றவை மீண்டும் எழுத வேண்டாம்.
- அடையாளம் கண்ட பிழைகளை மட்டும் திருத்தி எழுதினால் போதும்.
- நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்.
- கீழ்க்காணும் இலக்கணப் பகுதிகள் இங்கு மதிப்பிடப்படும்.

  - ❖ வலிமிகுதல் விதிகள்
  - ❖ வலிமிகாதல் விதிகள்
  - ❖ ல, ள, ழகரச் சொற்கள்
  - ❖ ந, ன, ணகரச் சொற்கள்
  - ❖ ர, றகரச் சொற்கள்
  - ❖ வேற்றுமை உருபுகள்
  - ❖ ஒருமை / பன்மை
  - ❖ ஒரு / ஓர்

- *மதிப்பிடப்படும் சொல் - பொருள் தரும் சொல்லாக இருக்கும்.*

**மாதிரி வினா**

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள நேர்காணல் பகுதியில் காணப்படும் **5 பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி எழுதுக**. [வாக்கியங்களை மீண்டும் எழுத ண்டோம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

| | |
|---|---|
| நிருபர் | : மலேசியாவில் மக்களுக்கு பல்வேறு வகை தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இந்த தடுப்பூசிகள் குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இதில் ஒரு ஊசி நல்ல ஊசி என்று எப்படி அறிவது? |
| மருத்துவர் | : மலேசியாவில் தற்போது 5 வகை ஊசிகள் செலுத்தப்படுகின்றது. எந்த ஊசி நல்ல ஊசி என்பதல்ல. ஒவ்வொருவரும் 2 தடுப்பூசியையும் எடுத்துக்கொல்ல வேண்டும். அதுதான் முக்கியம். |

(10 புள்ளி)

**பயிற்சி 1**

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் காணப்படும் **பிழைகளை** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி எழுதுக**. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம்; நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

1. ஒற்றுமையில்லா குடும்பம் ஒருமிக்கக் கெடும்.
2. இன்று மின்னியல் வணிகம் புகழ் பெற்று திகழ்கிறது.
3. நமது எண்ணங்கள் மகத்தான ஆற்றல் கொண்டது.
4. அதிக நேரம் திறன்பேசியை பயன்படுத்துவது ஆபத்தை ஏற்படுத்தும்.
5. நண்பனைப் பார்க்க போன இடத்தில் சிவா விபத்துக்குள்ளானான்.
6. மாணவர்கள் இயங்கலைத் தேர்வுக்கு தயாராகினார்.
7. திருடன் கூரையிலிருந்துக் குதித்ததால் காயமடைந்தான்.
8. தேர்தலில் வெற்றி பெற்றதால் மாறனதுக் கை ஓங்கி இருக்கிறது.
9. ஏழை மாணவர்களின் கல்வி தடைபடாமலிருக்க அவர்களுக்கு திறன்பேசி வழங்கப்பட்டது.
10. கடுமையான மழையின் காரணத்தால் சாலையோர மரச்சாய்ந்தது.

(10 புள்ளி)

**பயிற்சி 2**

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்வி பதில் பகுதியில் காணப்படும் **5 பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி எழுதுக**. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

| | |
|---|---|
| கேள்வி | : கடந்த ஒன்றரை ஆண்டுக் காளத்தில் நாம் எதையெதை இழந்திருக்கிறோம்? |
| பதில் | : எந்த அச்சமும் சூழாத ஓர் சுதந்திர நடமாட்டத்தை இழந்திருக்கிறோம். நட்பை பறிகொடுத்திருக்கிறோம். உறவை இழந்திருக்கிறோம். நம்மிடம் இருந்து நிம்மதி முழுவதுமாக விடை பெற்றிருக்கிறது. முகமூடியில் முகத்தை மறைத்து கொண்டு நிறைவற்ற வாழ்க்கையைத் தொடர்கிறோம். யோசிக்க யோசிக்க இழந்தது பல தொடர்க்கதையாகிறது. |

(10 புள்ளி)

**பயிற்சி 3**

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள செய்தியில் காணப்படும் **5 பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி எழுதுக**. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம்; நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

ஆக. 23 : கோவிட்19 பெருதொற்றிலிருந்து நாட்டை மீட்பதற்கு இனம், அரசியல் தத்துவங்களை கடந்து ஒன்றிணைந்து செயல்பட அழைப்பதற்கு, பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் நேற்று மலேசியக் குடும்பம் கோட்பாட்டினை அறிமுகப்படுத்தினார். நாட்டின் 9ஆவது பிரதமராகப் பதவி ஏற்றுக் கொண்ட டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் தொலைகாட்சி நேரலையில் சிறப்புரை வழங்கினார். அதில் பேசும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். ஓர் குடும்பத்தின் முழுமையான நன்னெறிக் கோட்பாடுகளின் அடிப்படையில் நாட்டின் நிலைத்தன்மை அடங்கியுள்ளது. இதன் அடிப்படையில் மலேசியக் குடும்பக் கோட்பாடானது பல நேர்முறையான சாராம்சங்களைக் கொண்டதாகும். இது இனம், சமயம், மதம், ஆகிய அம்சங்களைக் கடந்தது.

(10 புள்ளி)

SET 1

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[ 20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் வாக்கியங்களில் காணும் **அகச்சுட்டு, புறச்சுட்டுச்** சொற்களை அடையாளங்கண்டு வகைப்படுத்துக.

(i) அவர் கைத்தரி விரிப்புகள் விற்பனை செய்யும் வணிகர்.

(ii) என் மாமா அப்பள்ளியின் முதல்வராவார்.

(iii) இக்கவிதையைத் தமிழாசிரியர் திரு. கண்ணன் இயற்றினார்.

(iv) இவள் தமிழிசையை விரும்பிக் கேட்பாள்.

(4 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் சொற்குவியலில் **காரணப்பெயரை** மட்டும் அடையாளங்கண்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| **வளையல்** | **காடு** | **வானூர்தி** | **மலை** |
| **காலணி** | **கொடி** | **நாற்காலி** | **வானம்** |

(4 புள்ளி)

21. கீழ்க்காண்பனவற்றுள் **குன்றியவினை** வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A கண்மணி ஓய்வு நேரத்தில் வரலாற்று நாவல்கள் வாசித்தாள்.
B மழை பெய்ததால் கண்ணன் வேகமாக ஓடினான்.
C மதிமுகன் இனிமையாகப் பாடினான்.

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

> புலிகள் தனித்து வாழும் இயல்புடையது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஓர் புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லாது. கருவுற்ற புலியானது தொண்ணூறு நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஈனும். அந்த குட்டிகள் இரண்டு ஆண்டுகள் வரை வளர்ந்து வரும். அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்து தனியாக அனுப்பிவிடும்.

(10 புள்ளி)

**SET 2**

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் ஒவ்வொன்றுக்கும் ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

(i) அகச்சுட்டு

(ii) புறச்சுட்டு

(2 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொற்களில் **இடுகுறிப்பெயர்களைக்** கண்டுபிடித்து (✓) எனக் குறிப்பிடுக.

| **எண்** | **வாக்கியம்** | (✓) |
|---|---|---|
| 1 | சீனாவின் பாதுகாப்பு நிபுணர்கள் 12,000 கி.மீ தொலைவுவரை தாக்கும் **ஏவுகணைகளைக்** கண்டுபிடித்துள்ளனர். | |
| 2 | **கடல்** நீரில் அதிக அளவு கலந்துள்ள திடப்பொருள் உப்பு ஆகும். | |
| 3 | வெயில் காலம் என்பதால் அப்பா **மின்விசிறியின்** கீழ் அமர்ந்து தம் பணிகளைச் செய்து முடித்தார். | |
| 4 | தமிழன்பன் தம் வீட்டின் பின்னால் உள்ள **நிலத்தில்** காய்கறித் தோட்டம் போட்டார். | |

(2 புள்ளி)

21. (அ) கீழ்க்காணும் ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்கியம் எழுதுக.

(i) குன்றியவினை

(ii) குன்றாவினை

(4 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் சொற்றொடரைப் பிரித்து எழுதுக.

**பாவினம்**

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாங்கியங்களில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

1. வண்ணமுத்து வாகனத்தை வேகமாக செலுத்தினார்.
2. வணத்துறையின் பொது அதிகாரி எங்களை இன்முகத்துடன் வரவேற்றார்.
3. இயற்கை வளங்களை பேணுதல் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.
4. இத்துணை சிரமமான பணியை இதுவரை யாருமே நிறைவாகச் செய்ததில்லை.
5. கனிமலர் ஏதுச் செய்தாலும் மிகவும் பொறுப்பாகச் செய்வாள்.

(10 புள்ளி)

SET 3

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) (i) **சுட்டெழுத்து** இரண்டு வகைப்படும் அவற்றை எழுதுக. (2 புள்ளி)

(ii) கீழ்க்காணும் சொற்களில் இடம்பெற்றுள்ள **சுட்டெழுத்தை** எழுதுக.

* **அவன்**
* **இச்சிறுமி** (2 புள்ளி)

(ஆ) (i) **சேர்த்தெழுதுக**
1. மற்ற + தலைவர்
2. ஏது + கண்டாய் (2 புள்ளி)

(ii) **பிரித்தெழுதுக**
1. பூவரும்பு
2. அரைக்காசு (2 புள்ளி)

21. **குன்றியவினை** வாக்கியம் ஒன்றினை எழுதுக. (2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

| |
|---|
| அன்புத் தங்கைக்கு,<br>வணக்கம்.<br>கவிதை எழுத ஆர்வம் கொண்டிருக்கும் உனக்கு கவிதை தொடர்பான சில குறிப்புகளை இங்கு முன் வைக்கிறேன். தற்காலத்தில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று கவிதைகள் அடையாளம் காணப்படுகிறது. மரபுக்கவிதை யாப்பிலக்கணம் சரிவர அமைக்கப்பட்டு பாடப்படுவது. புதுக்கவிதை என்பது யாப்பிலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் தன்னை சிரைப்படுத்திக் கொள்ளாதது. உணர்ச்சியும் கற்பனையும் மட்டுமே இதற்கு அணிகலன்கள். |

(10 புள்ளி)

SET 4

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) வினா எழுத்துகள் **எத்தனை** வகைப்படும்? அவற்றை எழுதுக. (3 புள்ளி)

(ஆ) **சேர்த்தெழுதுக**

அ + யோகி =
எ + யாழ் =

(2 புள்ளி)

21 (அ) கீழ்க்காணும் சொற்குவியலில் இயற்சொற்களை அடையாளங்கண்டு எழுதுக.

| | | |
|---|---|---|
| **கல்** | **பேனா** | **மரம்** |
| **ஆபத்து** | **பொன்** | **அக்கறை** |

(3 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் வாக்கியங்களுள் எது விழைவு வாக்கியம் அல்ல?

(i) மிருகங்களை வதைக்காதீர்.
(ii) நீ அவமானப்பட்டே தீருவாய்!
(iii) உமக்கு இறையருள் கிட்டட்டும்!
(iv) தியானம் செய்வதால் மன அமைதி கிட்டும்.

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள உரையாடலில் **ஐந்து பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

| | |
|---|---|
| மன்னன் | : என்ன! இன்று மக்களிடமுள்ள குறைகளை கேட்பதற்காக நான் காத்திருப்பேன் என்று அறிவிக்கவில்லையா? |
| அமைச்சர் | : அறிவித்தோம் மன்னா! ஆனால், யாரும் வரவில்லை. மன்னரிடம் முறையிட மக்களுக்கு எவ்வித குறையுமில்லையென்று நினைக்கின்றேன். |
| புலவர் | : குறையுண்டு வேந்தே! தங்களுக்குப் பிறகு இந்நாட்டை ஆட்சி செய்யப் பாண்டிய மரபில் ஒரு அரசர் இல்லையே என்ற மனக்குறை இந்நாட்டு குடிமக்களுக்குண்டு. |
| மன்னர் | : எங்களதுக் குறையை யாம் அறிவோம் புலவரே..! என் மனம் வறண்ட நிலமாயிற்று. வருகிறேன். பேரவை களையட்டும். |

(10 புள்ளி)

**SET 5**

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) வடசொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (3 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் வடசொற்கள் எவ்வகையைச் சார்ந்தவை?

| | | |
|---|---|---|
| **வருஷம்** | **ஹனுமான்** | **சகஜம்** |

(2 புள்ளி)

21 (அ) சேர்த்தெழுதுக

**தாமரை + பூத்தது** =
**பார்த்த + படம்** =
**இராமா + கேள்** =

(3 புள்ளி)

(ஆ) விழைவு வாக்கியம் ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

***பணிப்பெண் தேவையா?***

* வீட்டுவேலை, குழந்தைகள் பராமரிப்பதற்கு மற்றும் முதியோர்களை பாதுகாப்பதற்காகப் பணிப்பெண் தேவையா?
* இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்துப் பணிப்பெண்களை வரவழைக்கின்றோம்.
* முன்பணம் RM 3000 செலுத்த வேண்டும். ஒரு ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.
* முறையான பயிற்சிப்பெற்ற பணிப்பெண்கல்.
* ஆர்வமுள்ளோர் கீழ்க்காணும் என்களில் திரு. செல்வம் அவர்களை நாடவும்.

05-2816826
012-4559269

(10 புள்ளி)

SET 6

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) உரிச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (3 புள்ளி)

(ஆ) கீழ்க்காண்பவை எவ்வகை உரிச்சொல்?

| | |
|---|---|
| *** கடி மாலை** | *** கடி மிளகு** |

(2 புள்ளி)

21 (அ) பிரித்தெழுதுக.
**சதுரப்பலகை** =
**செங்கோல்** =
**கண்ணிமை** =

(3 புள்ளி)

(ஆ) வேண்டுகோள் வாக்கியம் ஒன்றனை எழுதுக.

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாங்கியல்களில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

1. அறிவியல் கொடைகளுள் திறன்பேசியும் ஒன்று. அஃது நமது பொது அறிவை வளர்த்துக்கொள்ள களம் அமைக்கின்றது.
2. அறிவியல் முன்னேற்றம் உலகின் பசுமையை அளிக்கும் சக்தியாக மாறி வருகின்றது.
3. இன்றைய நவீன துரித உணவுகள் மனித உடல்நலத்திற்குப் பெருமிரட்டலாக உள்ளது.
4. வல்லரசு நாடுகள் தன் அறிவியல் கண்டுபிடிப்புகளை ஆக்கச் சக்திகளுக்குப் பயன்படுத்துவதே சிறப்பு.
5. மூன்றாம் உலகப் போர்மூண்டால் மக்களின் நல்வாழ்வை பெரிதும் பாதிக்கும்.

(10 புள்ளி)

SET 7

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாங்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் சொற்கள் எவ்வகைக் குற்றியலுகரம் என்பதை எழுதுக. (2 புள்ளி)

(i) கன்று
(ii) சால்பு

(ஆ) (i) சேர்த்தெழுதுக.
ஒன்பது + பத்து =
கிழக்கு + நாடு =
(2 புள்ளி)

(ii) பிரித்தெழுதுக.
எவ்வெட்டு =
தென்னாடு =
(2 புள்ளி)

21. (அ) கலவை வாக்கியம் ஒன்றனை எழுதுக.
(2 புள்ளி)

(ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வலிமிகும் எனும் இலக்கண விதிக்கேற்ப எடுத்துக்காட்டு ஒன்றனை எழுதுக.
(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்.]

| |
|---|
| கல்வி ஒரு ஒளிவிளக்கு. அதாவது இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்குவது. ஒருவர் தாம் பெற்றக் கல்வியை பலருக்கும் வழங்க முன்வரவேண்டும். அப்படி பலருக்கும் ஒலித்தருவதுதான் கல்வியின் பயன். நாம் பெற்றக் கல்வியை யாராலும் அளிக்க முடியாது. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு என்பர். விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத வாழ்க்கை இருளாகிவிடும். |

(10 புள்ளி)

**SET 8**

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) (i) ஆகுபெயர் ஆறு வகைப்படும். அவற்றுள் **மூன்றனைக்** குறிப்பிடுக. (3 புள்ளி)

(ii) கீழ்க்காணும் சொற்றொடர் **எவ்வகை** ஆகுபெயர் ஆகும்?
வாழைக் கறி =
மலேசியா வென்றது =

(2 புள்ளி)

(ஆ) சேர்த்தெழுதுக.

(i) கூரையிலிருந்து + குதித்தார் =
(ii) பசுமை + பயிர் =
(iii) பேசா + பையன் =

(3 புள்ளி)

21. கீழ்க்காணும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

**(அ) மாணவர்கள் விடாமுயற்சியோடு படிக்க வேண்டும்.**
**(ஆ) மாணவர்கள் கல்விகேள்விகளில் வெற்றிபெற வேண்டும்.**

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

மொழி என்பது முதலில் மனிதர்கள் கூட்டங்கூட்டமாக வாழ ஆரம்பித்தப் பொழுது அவர்களை ஒன்றிணைக்கும் ஓர் கருவியாகவே உருவானது; உருவாக்கப்பட்டது. தொடர்ந்து, மனித நாகரிக வளர்ச்சிக்கேற்ப மொழியின் பயன்பாடும் முக்கியத்துவமும் சம வளர்ச்சி கண்டு, இன்றைக்கு ஓர் இனத்தின் அடையாளமாக மொழி உருவெடுத்துள்ளது. சுருங்கச் சொன்னால், மனிதக்குல நாகரிக வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும், கைகோர்த்தே வளர்ந்திருக்கின்றனர். ஆனால், இன்றைய சூழலில், வழக்கில் இல்லாத பழமொழிகள் அழிந்து கொண்டே வருகின்றன.

(10 புள்ளி)

**SET 9**

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[ 20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) (i) சொற்குவியலிலுள்ள வினைத்தொகையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| |
|---|
| **இடுபணி , எழுதுகோல் , நாய்க்குட்டி , தம்பிசட்டை** **ஊறுகாய், குடிநீர், கண்ணகிசிலை, சாரைப்பாம்பு** |

(4 புள்ளி)

(ஆ) கொடுக்கப்பட்ட தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக.

(i) நேற்றுப் பெருமழை பெய்தது.
ஆற்றில் வெள்ளம் புரண்டோடியது. (2 புள்ளி)

(ii) நாடு முன்னேற வேண்டும்.
நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். (2 புள்ளி)

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தன்வினை வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

| |
|---|
| **பல்லவ மன்னர்கள் தமிழ் நாட்டில் பல கோயில்களைக் கட்டினர்.** |

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

| |
|---|
| அலைக்கடல் ஓயாமல் அலைகளை உருவாக்கிக் கொண்டிருப்பதுபோல் மனிதர்களாகிய நாமும் சோம்பல் கொல்லாமல் விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும் என்று அமுதன் கண்ணனிடம் கூறிக்கொண்டிருந்தான். கடல் அலையில் அசைந்தாடி வருகின்ற இதமான வீசுதென்றளைலை ரசித்துக் கொண்டிருந்த இவர்களை, எதிர்பாராமல் அவ்விடத்திற்கு வந்த கடிநாய் ஒன்று துரத்தத் தொடங்கியது. இவர்கள் அந்த நாயிடமிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள ஓட்டம் பிடித்தனர். அந்த கடலோரத்தில் ‘கச்சான் பூத்தே’, குடிநீர் போன்றவற்றை விற்பனை செய்யும் மூதாட்டி ஒருவர் இச்சிறுவர்களின் அலறலைக் கேட்டு அவர்களுக்கு உதவ முன் வந்தனர். தன்னிடமிருந்த உருளைக்கட்டையை அந்த நாயின்மீது வீசி நாயை விரட்டினார். அம்மூதாட்டியின் துணிச்சலைக் கண்ட அவ்விருவரும் மூதாட்டிக்கு நன்றி கூறி இல்லம் திரும்பினர். |

(10 புள்ளி)

**SET 10**

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[ 20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் வாக்கியங்களில் **ஆகுபெயர்** கொண்ட சொற்களை அடையாளங்கண்டு எழுதுக.

(i) பரந்தாமனின் தோட்டத்தில் மல்லிகை பூத்தது. (2 புள்ளி)

(ii) சின்ன கலைவாணர் நடிகர் விவேக் இறந்ததும் தமிழ் திரை உலகமே அழுதது. (2 புள்ளி)

(அ) சேர்த்தெழுது.

(i) அ + புத்தகம் = ________________________ (2 புள்ளி)

(ii) தேடா + செல்வம் = ________________________ (2 புள்ளி)

21. கொடுக்கப்பட்டுள்ள **தனி வாக்கியங்களைக் கலவை வாக்கியமாக** எழுதுக

- **இளைஞர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்**
- **சவால்களைத் துணிந்து எதிர்கொள்ள வேண்டும்**
- **பெரியோர்களின் ஆலோசனைகளைப் பெறுவது நன்று**

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

பக்கவாதத்திற்கு தினமும் சராசரி நூற்றுப்பத்துப் பேர் பலியாகின்றனர். மூளையில் உள்ள அணுக்களை கொல்வதன் மூலம் உயிரைப் பரிக்கக்கூடிய சக்தி இப்பக்கவாதத்திற்கு உள்ளது. மூலைக்குச் செல்லும் இரத்த நாளங்களை இரத்தக்கட்டிகள் அடைத்து கொள்வதே பக்கவாதம் ஏற்படுவதற்கான முக்கியக் காரணமாகும். ஆதலால், இந்நோய்க்குத் தாமதமாகச் சிகிச்சை பெறுவதால் உடல் ரீதியாகப் பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது.

(10 புள்ளி)

SET 11

பிரிவு ஈ : இலக்கணம்
வினாக்கள் 20 முதல் 22 வரை
[20 புள்ளி ]

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடர்கள் எவ்வகை **ஆகுபெயர்** என்பதனை எழுதுக.

(i) தலைக்கு ஒரு வெள்ளி கொடு

(ii) சிவப்பு இட்டாள்

(iii) கசப்பு உண்டான்

(iv) சுண்டல் கொடுத்தார் (4 புள்ளி)

21.**தொடர் வாக்கியம்** என்றால் என்ன? (2 புள்ளி)

21. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தை** அடையாளம் கண்டு திருத்தி எழுதவும்.

**இறவா புகழ் கொண்ட பாடல்களை எழுதியவர் கவிஞர் வாலி.**

(2 புள்ளி)

(ஆ) பத்தியில் கருமையாக்கப்பட்டுள்ள தொடர்கள் எவ்வகைத் தொகையாகும்?

தமிழ்மொழி இனிய **செம்மொழி**. தனித்தியங்கும் **தொன்மொழி**. தமிழ்மொழியை எழுதும்போது சில கூறுகளை முக்கியமாகக் கொள்ளவேண்டும். மூதறிஞர் இராஜாஜி, பேச்சு நடை எழுதுங்கால் கொச்சை மொழியும் ஆங்கில மொழியும் அறவே நீக்கி எழுத வேண்டும் என்றும் பேசத்தக்கவர்கள் எவ்வாறு பேசுவார்களோ அவ்வாறு எழுதுவது பேச்சு நடை என்றும் அத்தகைய பேச்சு நடையே, **இன்சுவை** கொண்டு விளங்கும் என்றும் தம் வசன நடைபற்றிய கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

(2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

தமிழர் விளையாட்டுகளில் மிகப் பழமை வாய்ந்த ஒர் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் ஆகும். இதுவே இன்று தமிழகத்தின் சில பகுதிகளில் “ஜல்லிக்கட்டு” என்றும் வேறு சில பகுதிகளில் எறுதுக்கட்டு, மஞ்சுவிரட்டு என்ற பெயர்களிலும் வழங்கப்படுகிறது. இதில் காளைகளே பங்கு பெறுகின்றன. தமிழகத்தில், நாட்டுப்புறத்தில் குறிப்பாக உழவுத் தொழில் புரியும் மக்களிடம் உள்ள விளையாட்டு இது. இந்த மக்களிடம் அறுவடை முடிந்த பின் கைநிறையப் பணமிருக்கும்; போதிய ஓய்வுயிருக்கும். கதிர் அறுக்கப்பட்டபின், வயல் வெளியில் காளைகலை ஓடவிட்டு விரட்டிப்பிடித்து விளையாடும் அளவுக்கு போதிய வெற்றிடமும் இருப்பதால் இக்காலம் இதற்கு ஏற்றதாக அமைகிறது.

(10 புள்ளி)

SET 12

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) சேர்த்தெழுதுக.

(i) சக + உதரன் =
(ii) தேவ + இந்திரன் = (2 புள்ளி)

(ஆ) பிரித்தெழுதுக

(i) ராஜேந்திரன் =
(ii) சூரியோதயம் = (2 புள்ளி)

21. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? (2 புள்ளி)

______________________________________________

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தொகாநிலைத்தொடர்களின் வகைகளைக் குறிப்பிடுக.

(i) புத்தகத்தைப் படித்தான் -
(ii) கேட்ட பாடல் -
(iii) அழைத்தனர் உற்றார் -
(iv) சாலப் பேசினான் - (4 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

தமிழ் இனமும் உலகின் தொன்மையான இனங்களுள் ஒன்று. நம் தாய்மொழி வளமை பெற்ற செம்மொழி. நமக்கு எல்லா முன்னேற்றங்களையும் தரவல்லது. ஆனால், இன்று நமது இனமும் மொழியும் எந்நிலையில் உள்ளன என்பதை நான் சொல்லி நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. நாம் உலகின் முன்னேற்றமிக்க இனமாக மாற வேண்டுமெனில் நம்மிடையே சில மாற்றங்கள் உருவாக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். தாய்மொழியை போற்றுவதோடல்லாமல் அதன் வலங்களைக் கற்கும் ஆர்வம் அதிகரிக்க வேண்டும். பொறுப்பைத் திறன்பட செயலாற்றும் மனத்திட்பத்தை வளர்த்து கொள்ளுதல் முக்கியம்.

(10 புள்ளி)

SET 14

## பிரிவு ஈ : இலக்கணம்
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[ 20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(அ) குற்றியலுகரம் எத்தனை வகைப்படும். அவற்றுள் மூன்றனைக் குறிப்பிடுக.
(ஆ) கீழ்க்கண்ட தன்வினைச் செல்லைப் பிறவினைச் சொல்லாக மாற்றுக.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| அடங்கு | |
| கட்டினார் | |
| செய்தேன் | |
| படித்தாள் | |

(4 புள்ளி)

21. கீழ்க்காணும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியமாக மாற்றுக.

(அ) மணிமேகலை அமுத சுரபியைப் பெற்று ஏழை எளியோருக்கு உணவளித்தாள்.

____________________________________________ (2 புள்ளி)

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. [வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

தமிழர்களின் மிகத் தொன்மையான கலைகளுள் ஒன்று பரதக்கலையாகும். இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்று சிறப்பைக் கொண்டது. பரதநாட்டியத்தில் அபிநயம் மிக முக்கியமானது, பாடலில் வரும் உணர்ச்சிகளை முகத்திலும் அங்க அசைவுகளிலும் காண்பிப்பது அபிநயம் ஆகும். கைகளால் காட்டப்படும் அபிநயத்தை ‘முத்திரை’ என்பார்கள். ஒவ்வோர் முத்திரைக்கும் தனிதனிப் பெயர் உண்டு. பிற ஆட்டக்கலைகளுக்கும் பரதநாட்டியக்கலைக்கும் உள்ள வேறுபாடு முக்கியமாக அபிநயத்திலேதான் இருக்கிறது. இன்று உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் பரதநாட்டியத்தை ஆர்வத்தோடு கற்று வருகின்றனர். மேலை நாட்டவரும் இக்கலையைப் பயில்கின்றனர். இக்கலைக்கு உலக மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்து பிரபலமடைந்து வருகின்றன.

(10 புள்ளி)

SET 17

**பிரிவு ஈ : இலக்கணம்**
**வினாக்கள் 20 முதல் 22 வரை**
**[ 20 புள்ளி ]**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள குற்றியலுகரச் சொற்களை அடையாளங்கண்டு, அவற்றின் வகையைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(i) அப்பெண்ணின் நிலையைக் கண்ட மங்கை வியப்பு அடைந்தாள்.
(ii) மலர் மூன்று முறை கோவிலைச் சுற்றி வலம் வந்தாள்.

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தன்வினை வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

கதிரவன் பலவகை இனிப்புப் பலகாரங்கள் உண்டான்.

________________________________ (2 புள்ளி)

21. கீழ்க்காணும் சொற்றொடர்களில் வலிமிகுந்தமைக்கான விதியை எழுதுக.

(i) செல்லாக்காசு

________________________________ (3 புள்ளி)

(ii) ஓடாக்குதிரை

________________________________ (3 புள்ளி)

# விடைப்பட்டி

| கருத்துணர்தல் (பல்வகை) - விடைப்பட்டி | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 1 முதல் 6 வரை)** | |
| 1. | - நாம் தீய சிந்தனைகளை விட்டொழித்து நம்முள் நல்ல எண்ணத்தை விதைத்தால் நாம் வாழ்க்கையில் மேன்மையடையலாம். |
| 2. | - தான் இறந்து விட்டாலும் தன் பெற்றோர் மனம் சோர்ந்து விடாமல் கவலையின்றி அவர்களின் வாழ்க்கையை நடத்த வேண்டும். |
| 3. | - தற்போது பெரும்பாலோர் புத்தகம் வாங்கி படிப்பதைவிட இணையத்தின் உதவியுடன் புத்தகம் வாசிக்கின்றனர். |
| 4. | - பேச்சுத்திறன் மிக்கவர் மத்தியில் உண்மையும் பொய்மையாகிவிடும் அல்லது பொய்யும் உண்மையாகிவிடும்.<br>- பேச்சுத்திறன் மிக்கவர்கள் சபையை எப்போதும் தன் வசம் வைத்துக் கொள்ள நினைப்பர். |
| 5. | - தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ் முதலிய தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.<br>- மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதியுள்ளார்.<br>- சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார்.<br>  - ஐங்குறுநூறு உரை<br>  - புறநானூறு உரை<br>  - நற்றிணை உரை<br>  - பல வரலாற்று நூட்களுக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளார்.<br>  - இவர் ஐங்குறுநூறு உரை, புறநானூறு உரை, நற்றிணை உரை என பல வரலாற்று நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளார்.<br><br>(ஏற்புடைய 2 விடைகள்) |
| 6. | - கெடா மாநிலத்தில் அமைந்துள்ள பூஜாங் பள்ளத்தாக்கின் வரலாற்றை நூல் வடிவில் பதிவு செய்தவர்.<br>- தனது ஆய்வில் கடாரத்தில் தமிழர்களின் வரலாற்றுச் சுவடுகளைச் சான்றுகளுடன் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.<br><br>(ஏற்புடைய 2 விடைகள்) |
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 1 முதல் 6 வரை)** | |
| 1. | - நாம் எந்தவொரு செயலுக்கும் பிரதிபலனை ஏதிர்ப்பார்க்காமலும் கையூட்டைப் பெறாமலும் செயல்படவேண்டும். |
| 2. | - உடற்பயிற்சி செய்வதன் மூலம் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.<br>- உடற்பயிற்சியே ஆரோக்கிய வாழ்வின் அடித்தளம்<br>- நடைப்பயிற்சி செய்வதன் மூலம் உடல் நலத்தைப் பேணிக் காத்திட முடியும். |

| | |
|---|---|
| 3. | - மாணவர்கள் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பதைவிட இணையத்தில் வாசிக்கின்றனர்.<br>- மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது. |
| 4. | - இன்றைய இளைஞர்கள் தங்களின் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழிகளைத் தேடாமல் கைப்பேசியிலேயே அவர்களின் முழு நேரத்தையும் செலவிடுகின்றனர். |
| 5. | - மலேசியாவில் தமிழர் திருநாள் தமிழரின் ஒற்றுமைத் திருநாளாக உருவாகப் பாடுபட்டவராவார்.<br>- மாணவர் மணிமன்ற மலரைத் தொடங்கினார் / தமிழ் இளைஞர் மணிமன்றத்தைத் தோற்றுவித்தார்.<br>- மாணவர் மணிமன்றத்தின் மூலம் நாட்டில் பல தமிழ் எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியவர்.<br>- ‘தமிழ் முரசு’ வார இதழில் முற்போக்குக் கருத்துகள் மற்றும் சாதி ஒழிப்பு ஆகியவற்றை முதன்மை இலக்காகக் கொண்டு எழுதினார்.<br><br>**(ஏற்புடைய 2 விடைகள்)** |
| 6. | - உலகத் தரவரிசையில் 38ஆவது நிலையை அடைந்தார்.<br>- பிரிட்டிஷ் ஜூனியர் ஓபன் சான்பியன்ஷிப் பட்டத்தை வாகை சூடினார்.<br>- மலேசிய விளையாட்டு மன்றத்தின் சிறந்து வளர்ந்துவரும் விளையாட்டாளர் விருதைப் பெற்றார்.<br>- மலேசிய நாட்டின் மகளிர் ஸ்குவாஷ் போட்டியில் வென்ற மிகவும் இளைய விளையாட்டாளராகத் திகழ்கிறார்.<br><br>**(ஏற்புடைய 2 விடைகள்)** |
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (வினா 1 முதல் 6 வரை)** | |
| 1. | - ஏழைமக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து சிரமப்படுகின்றனர்.<br>- கொரோனா நச்சுக்கிருமி ஏழைகளைப் பல இன்னல்களுக்கு ஆளாக்குகின்றது. |
| 2. | - மாணவர்கள் என்றென்றும் ஆசிரியரை மதித்துப் போற்ற வேண்டும்.<br>- ஆசிரியர் தினத்தன்று அவர் தியாகத்தைப் பாராட்டி வாழ்த்துக் கூற வேண்டும். |
| 3. | - மக்கள் தங்கள் நலனைக் கருதி சுற்றுச் சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக்கொள்ள பல தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். |
| 4. | - விழிப்புணர்வுடன் இருப்பவர் எப்போதும் வெற்றிப் பெறுவர். மாறாக, விழிப்புணர்வின்றி இருப்பவர் தோல்வியைத் தழுவும் நிலை ஏற்படும்.<br>- நாம் எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பது சிறப்பு. |
| 5. | - கலாம் இந்திய இராணுவத்துக்காக ஒரு சிறிய ஹெலிகாப்டரை வடிவமைத்துக் கொடுத்தார்.<br>- இந்தியாவின் முதல் உள்நாட்டு செயற்கைக்கோள் புவிச்சுற்றின் அருகே அப்துல் கலாம் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக 1980இல் ஏவப்பட்டது.<br>- போலார் எஸ். எல்.வி மற்றும் எஸ்.எல்.வி-III செயற்கைக்கோள் திட்டங்களுக்காக முயற்சி மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்தார்.‘ |

| | |
|---|---|
| | - 1970-இல் எஸ்.எல்.வி விண்வெளிக்கலனைப் பயன்படுத்தி ரோகினி-1 விண்வெளியில் ஏவப்பட்டது, இது இசுரோவின் சாதனையாகும்.<br>- ஏ.பி. ஜே அப்துல் கலாம் இதயம் சார்ந்த மருத்துவர் சோம இராஜுவுடன் சேர்ந்து கரோனரி ஸ்டெண்ட் உருவாக்கி 'கலாம், ராஜு ஸ்டெண்ட்' என பெயரிடப்பட்டது.<br>- 2012-இல் கிராமப்புறங்களில் உள்ள சுத்த வழிமுறைக்காக இவர்கள் வடிவமைத்த டேப்லெட் கணினி "கலாம், ராஜு டேப்லெட்" என்று பெயரிடப்பட்டது.<br><br>*(ஏற்புடைய 2 விடைகள்)* |
| 6. | - விடாமுயற்சியுடன் பயிற்சி மேற்கொண்டது<br>- ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற வேண்டும் என்ற குறிக்கோளோடு தன்னம்பிக்கையுடன் செயல்பட்டது.<br><br>*(ஏற்புடைய 2 விடைகள்)* |

| கருத்துணர்தல் (வாசிப்புப் பகுதி) - விடைப்பட்டி | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 7 முதல் 10 வரை)** | |
| 7 | - மனித சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாய் இருப்பதால் வறுமையை ஒழிக்க வேண்டுமென்கிறார் கட்டுரை ஆசிரியர். |
| 8 (அ) | - நம்மில் பலரும் உணவுகூடக் கிடைக்காமல் துன்புறுவதற்கு வெளியுலகின் மாறுதல்களிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியதைக்கூடக் கற்றுக் கொள்ளாததே காரணமாகும். |
| 8 (ஆ) | - நம்பிக்கை / கற்பனை / எண்ணம்/ கொள்கை / தத்துவம் / கோட்பாடு |
| 9. | - இனி என்றுமே வறுமையில் வாடப் போவதில்லை" என்று தீர்க்கமான முடிவு கட்டிக் கொள்ளுதல்.<br>- வறுமைக்கெதிரான போராட்டம் நடத்தி நாளுக்கு நாள் வெற்றி பெற்றுவரும் மற்றவர்களைக் காணுதல்.<br>- தெரிந்த உழைப்பையே கருவியாகக் கொள்ளுதல்<br><br>**(ஏதாவது ஒரு கருத்தை எழுதினால் முழுப்புள்ளி வழங்கிவிடலாம்)** |
| 10. | - விவாசய / வேளாண்மை குறைந்து வருதல்<br>- வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருதல்<br>- நாடுகளுக்கிடையே நிகழும் போர்கள்<br>- குறைந்த கல்வி அறிவு<br>- காலநிலை காரணிகள் – வெள்ளம், நீண்ட கோடைக் காலம் போன்றவை<br>- ஊழல்<br><br>**(பிற ஏற்புடைய பதில்கள்)** |
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 7 முதல் 10 வரை)** | |
| 7 | - இன்றைய சூழலில் அறிவியல் அறிவையும் உணர்வையும் முனைந்து வளர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. |
| 8 (அ) | - சங்ககாலத்திற்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை சமயம் அற்ற, இயற்கை சார்ந்த அறிவியல் பூர்வமான வாழ்க்கையாக அமைந்திருந்தது.<br><br>**அல்லது**<br><br>- சங்ககாலத்திற்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை வானவியல், பூகோளவியல் மற்றும் கப்பலோட்டி வணிகம் செய்யும் வகையில் அமைந்திருந்தது. |
| 8 (ஆ) | - பாரம்பரியத்தை / பண்பாடுகளை / பழக்கவழக்கங்களை / நடைமுறைகளை<br>- உணர / அறிந்துகொள்ள / தெரிந்துகொள்ள<br>(எ.கா: பாரம்பரியத்தை உணர / அறிந்துகொள்ள / தெரிந்துகொள்ள |

| | |
|---|---|
| 9. | - இந்த உலகம் ஐம்பெரும் பூதங்கள் எனப்படும் ஐந்து வகை தனிமங்களால் ஆனது என்பதும் மேலைநாட்டவர் கண்டுபிடிக்கும் முன்னரே உலகமும் உயிரினங்களும் தோன்றிய வரலாற்றைக் குறித்து வைத்ததும் உலகம் உருண்டை வடிவானது என்பதை முதலில் கண்டுபிடித்ததும் பழங்காலத் தமிழர்களின் அறிவியல் அறிவின் உச்சத்தைக் காட்டும் சான்றுகள் ஆகும்.<br><br>**(ஏதாவது இரண்டு சான்றுகள்)** |
| 10. | - வலைத்தளங்கள் / வலையொளி / வானொலி / தொலைக்காட்சி மூலம் உணர்த்துதல்<br>- அச்சு ஊடகங்கள் - பத்திரிகை, இதழ்கள், நூல்கள்<br>- ஆய்வாளர்கள், அறிஞர்கள் உரையைச் செவிமடுத்தல்<br>- பாடப்புத்தகத்தில் இடம்பெறச் செய்தல், ஆசிரியர்களின் போதனை<br>- வீட்டில் பெற்றோர், மூத்தோர் இளையோருக்கு எடுத்துக் கூறுதல்<br><br>**(பிற ஏற்புடைய பதில்கள்)** |
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (வினா 7 முதல் 10 வரை)** | |
| 7 | - தனக்கு உவமை இல்லாத இறைவன்போல் தனக்கு உவமை இல்லாத அன்பும் இருப்பதால் இறைவனோடு அன்பை இணைத்துச் சான்றோர் கூறினர். |
| 8 (அ) | - பிறர்படும் துன்பம் கண்டு உள்ளம் கலங்குவதும் பிற உயிர்களான தாவரங்கள், விலங்குகள் மீது பரிவு காட்டுவதன் மூலமும் அன்பின் வெளிப்பாடாய் அன்பர் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீர் மூலமும் அன்பு வெளிப்படுவதை உணரலாம். |
| 8 (ஆ) | - மலரும் / வெளிப்படும்/ தெரியும் / காணப்படும் |
| 9. | - அன்பு தன்னை உடையவனைக் கரைத்துக்கொண்டு வெளிப்படும் தன்மை கொண்டதாகவும் அதன் அளவின் பெருக்கத்திற்கு எல்லை இல்லாமலும் இருக்கிறது. ஆனால், அருளானது அன்பின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்கிறது என்பதே இவற்றின் வேறுபாடாக இருக்கிறது.<br><br>**(ஏதாவது இரண்டு சான்றுகள்)** |
| 10. | - பெற்றோர் இருவரும் இல்லற வாழ்க்கையில் அன்பை முதன்மையாகக் கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கும் அதை வழங்குதல்<br>- ஒன்றாகச் சேர்ந்து பொழுதைக் கழித்தல்<br>- ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளுதல்<br>- சிக்கல்களைக் குடும்ப உறுப்பினர்களோடு மனம்விட்டுப் பேசுதல் / சிக்கல்களைக் கலந்துபேசி முடிவெடுத்தல்<br>- விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளைக் கடைப்பிடித்தல்<br><br>**(பிற ஏற்புடைய பதில்கள்)** |

| கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்) - விடைப்பட்டி | | |
|---|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 11 முதல் 14 வரை)** | | |
| 11 | - குமரன் மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுக்காததால் பெற்றோர்களிடம் கோபபப்பட்டான். | |
| 12 | (அ) | - மோட்டார் சைக்கிள் வாங்கித் தர பணப்பற்றாக்குறை என்பதால்.<br>- மோட்டார் சைக்கிளால் ஏற்படும் பாதிப்பை அறிந்ததால்.<br>(ஏதேனும் ஒரு விடை) |
| | (ஆ) | i) குடும்ப உறுப்பினர்களின் மீது அக்கறை கொண்டவர். **(பண்பு)**<br>- அம்மா குமரனின் போக்கை விளக்கி கவலையில் இருக்கும் தம் கணவரைச் சமாதானப்படுத்தினார். **(சம்பவம்)**<br><br>ii) சிக்கனவாதி **(பண்பு)**<br>- போராட்டங்களுக்கிடையில் குடும்பச் செலவைச் சிக்கனமாக நடத்தினார். **(சம்பவம்)**<br>*(பிற ஏற்புடைய விடைகள்)* |
| 13 | (அ) | - மாதந்தோறும் தட்டுப்படும் குடும்பச் செலவு / மாதந்தோறும் பற்றாமல் போகும் பணம்<br>*(பிற ஏற்புடைய விடைகள்)* |
| | (ஆ) | - வாழ்ந்தாக வேண்டும் / வாழ்க்கையை நடத்தியே ஆக வேண்டும் |
| | (இ) | - அப்பாவின் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். இப்பொழுது இருக்கும் காலக்கட்டத்தில் படிப்பே ஒருவரின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். அதை உணர்ந்த பெற்றோர்கள் தங்களின் கஷ்டத்திலும் பிள்ளைகளின் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். தேவையற்ற செலவைக் குறைத்து கொள்வது வாழ்வைச் செம்மைப்படுத்தும். |
| 14 | - கல்வியே ஒருவரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.<br>- பிள்ளைகள் பெற்றோர்களின் அர்ப்பணிப்பையும் தியாகங்களையும் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.<br>- தகுதிக்கு மீறிய ஆடம்பர வாழ்க்கையை விட்டொழிக்க வேண்டும்.<br><br>*(பிற ஏற்புடைய பதில்கள்)* | |

| கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்) - விடைப்பட்டி | | |
|---|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 11 முதல் 14 வரை)** | | |
| 11 | | - தன் எஜமான் பவிக்கு இராமசாமி அண்ணாச்சியால் ஏதோ ஆபத்து என்று எண்ணிக் கொண்டு மல்லி அவரை நோக்கிக் குரைத்துக் கொண்டிருந்தது. |
| 12 | (அ) | - மல்லியைக் காப்பாற்றுவதற்கு வேறு ஏதும் வழிகள் இல்லாத்தால் பவி ஓட ஆரம்பித்தான். மல்லியும் கூடவே ஓடியது. |
| | (ஆ) | i) தனது வளர்ப்பு நாய் மல்லி மீது மிகுந்த அன்பு கொண்டவன். **(பண்பு)**<br>- தனது வளர்ப்பு நாய் மல்லிக்கு ஏதோ ஆகிவிட்டது என எண்ணி “மல்லி... மல்லி” என்று கித்தா காடே அலறும்படி பவி ஓலமிட்டு அழைத்தான். **(சம்பவம்)**<br><br>ii) பிறருக்கு ஊக்கமூட்டுபவன் **(பண்பு)**<br>- மல்லியின் ஒரு கால் முடமாகிவிட்டாலும், தன்னால் முடியும் என்பதை மல்லிக்கு உணர்த்த அதை ஓட வைப்பதற்கு முயற்சித்தான். **(சம்பவம்)**<br><br>(பிற ஏற்புடைய பதில்கள்) |
| 13 | (அ) | - நாயைச் சுட்டு அதன் வாலை அடையாளத்திற்குக் கொண்டு செல்வது |
| | (ஆ) | - மிகுந்த சோகத்துடன் / அதிக துக்கத்துடன் |
| | (இ) | - காப்புரிமை வைத்திருந்தால் நாய்களைத் தைரியமாக வளர்க்கலாம் நாய்கள் சுட்டுக் கொள்ளப்படுவதிலிருந்து காப்பாற்ற இயலும்<br><br>(பிற ஏற்புடைய பதில்கள்) |
| 14 | | - வளர்ப்புப் பிராணிகளும் எல்லா உணர்ச்சிகளையும் உடையவை, அதை வளர்ப்பவர்கள் அவற்றை அன்புடன் வளர்க்க வேண்டும்<br><br>- வளர்ப்புப் பிராணிகளை மிக பாதுகாப்புடன் வளர்க்க வேண்டும். அதற்கு ஏதேனும் ஆபத்து நேரிடும் போது அதன் பாதுகாப்பை உறுதி செய்வது நமது கடமையாகும்.<br><br>(பிற ஏற்புடைய பதில்கள்) |

| **கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்) - விடைப்பட்டி** | | |
|---|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (வினா 11 முதல் 14 வரை)** | | |
| 11 | - முரளி சிற்றுண்டியைச் சரியாகக் கண்காணிக்காததைக் கட்டொழுங்கு ஆசிரியரிடம் கலைமதி புகார் செய்ததால் | |
| 12 | (அ) | - கலைமதி தயாரில்லாமல் சபையில் பேச முடியாமல் தடுமாறி அவமானப்படுவதைப் பார்க்கவே முரளி மயங்கி கீழே விழுந்தான். |
| | (ஆ) | i) பொறுப்பானவள் **(பண்பு)**<br>- தன் நண்பனாகவே இருந்தாலும், முரளி முறையாகக் கடமை செய்யவில்லை என்பதைக் கட்டொழுங்கு ஆசிரியரிடம் கூறினாள். **(சம்பவம்)**<br><br>ii) நட்பைப் போற்றுபவள் **(பண்பு)**<br>- தன் நண்பன் மயங்கி விழுந்தவுடன் நலம் விசாரித்தாள். **(சம்பவம்)**<br><br>*(பிற ஏற்புடைய பதில்கள்)* |
| 13 | (அ) | - பயத்துடன் / பதட்டத்துடன் |
| | (ஆ) | - குற்றவுணர்ச்சியுடன் காண முடியாமல்/ தவறை உணர்ந்து |
| | (இ) | - முரளி செயலை ஏற்றுக்கொள்கிறேன். தவறு செய்தால் மனம் வருந்தி , அத்தவறைச் சரி செய்ய வேண்டும். நண்பர்களோடு உண்மையாகப் பழக வேண்டும்.<br><br>*(பிற ஏற்புடைய பதில்கள்)* |
| 14 | - செய்த தவறை உணர்ந்து திருந்த வேண்டும்.<br>- நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நேர்மையாகச் செய்ய வேண்டும்.<br>- உண்மையான நட்போடு பழக வேண்டும்.<br>- நண்பர்களின் நலனில் அக்கரை செலுத்த வேண்டும்.<br><br>*(பிற ஏற்புடைய பதில்கள்)* | |

| கவிதை – தொகுத்தல் | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 15)** | |
| முன்னுரை | தலைப்பு - பசியின் கொடுமை. |
| தெரிநிலைக் கருத்து | - ஒருவேளை உணவுகூட கிடைக்காமல் துன்பப்படும் மனிதர் உண்டு.<br>- அவர் பலநேரம் பட்டினியால் துன்பத்தில் வாடுவதும் உண்டு.<br>- தேவைக்கும் மேலாக உண்பவர் அதிகம் உள்ளனர்.<br>- ஆசையாய் வாங்கிய உணவில் மிஞ்சியதைக் குப்பையில் கொட்டுகின்றனர். |
| புதைநிலைக் கருத்து | - உலகில் பட்டினியில் வாடும் மனிதர் நிறைய உண்டு.<br>- அவர்களைப் பலரும் கண்டுகொள்வதில்லை.<br>- அளவுக்கு மீறி உண்ணும் மனிதரும் அதிகம் உண்டு.<br>- உணவை வீணாக்கும் மக்கள் நிறைய உள்ளனர். |
| முடிவுரை | - பசியில் வாடுவோரின் துன்பம் தீர்க்க வேண்டும்.<br>- உணவை வீணாக்கக் கூடாது. |

| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 15)** | |
|---|---|
| முன்னுரை | தலைப்பு - உணவுப் பழக்கம். |
| தெரிநிலைக் கருத்து | - உடல் தேவைக்கேற்ப உணவுண்ணும் பழக்கம் கொள்வோம்.<br>- தட்டில் அளவுக்கு மீறிய உணவை எடுப்பதைத் தவிர்ப்போம்.<br>- ஒருபிடி உணவுகூட இல்லாமல் உலகில் இறப்போரும் உண்டு.<br>- உலகநலம் காக்க இதனை மனத்தில் கொள்வோம். |
| புதைநிலைக் கருத்து | - அளவோடு உண்ண வேண்டும்.<br>- உணவின்றி மடியும் மனிதரை எண்ணிப் பார்த்தல் நலம்.<br>- சுயநலம் நீக்கி, பொதுநலம் கருதும் நிலை நல்லது. |
| முடிவுரை | - உணவுப் பழக்கத்தில் கூடுதல் கவனம் தேவை.<br>- உணவின்றி வாடும் மக்கள் இல்லா உலகம் காண்போம். |

| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (வினா 15)** | |
|---|---|
| முன்னுரை | தலைப்பு - நிமிர்ந்து நில். |
| தெரிநிலைக் கருத்து | - புலி முன்னே துணிந்து நின்றால் அதுகூட அஞ்சி ஓடும்.<br>- பழிச்சொல்லுக்குப் பயந்தால் சாதாரண எலிகூட நம்மை ஏளனம் செய்யும்.<br>- விழிப்போடு இருந்தால்தான் வாழ்வில் மறுமலர்ச்சி காணலாம்.<br>- நம் பேச்சு உறுதிமிக்கதாக இல்லாவிடில் துன்பமே சேரும். |
| புதைநிலைக் கருத்து | - எதைக் கண்டும் அஞ்சக் கூடாது.<br>- முயற்சியின்றி முடக்கிக் கிடந்தால் முன்னேற்றம் இல்லை.<br>- பேச்சிலும் செயலிலும் உறுதி வேண்டும். |
| முடிவுரை | - எதிலும் துணிவோடு செயல்பட வேண்டும்.<br>- முயற்சியே ஏற்றத்திற்கு வழி. |

| உரைநடை – தொகுத்தல் | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 15)** | |
| முன்னுரை | தலைப்பு - சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு. |
| தெரிநிலைக் கருத்து | - வள்ளுவனின் கூற்றுப்படி தூய்மை நமக்கு மிகவும் அவசியம்.<br>- குறிப்பாக, புறத்தூய்மையான சுற்றுச்சூழல் தூய்மை. அதிமுக்கியம்.<br>- நெகிழியைப் புதைப்பதால் நிலம் மலட்டுத்தன்மை அடைந்துள்ளது.<br>- தொழிற்சாலைக் கழிவுகளின் நச்சு, மண்ணையும் நீரையும் நாசமாக்குகிறது.<br>- மாசுபட்ட நீரைக் குடிப்பதால் குடல், தோல் நோய்கள் ஏற்படுகின்றன. |
| புதைநிலைக் கருத்து | - சுற்றுச்சூழல் தூய்மை மனிதனுக்கு அவசியம்.<br>- நெகிழியால் நிலம் கெட்டுள்ளது.<br>- தொழிற்சாலைக் கழிவு நிலத்தையும் நீரையும் வெகுவாகப் பாதித்துள்ளது.<br>- மாசுபட்ட நீரால் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. |
| முடிவுரை | - சுற்றுச்சூழலைக் காப்பதில் அனைவருக்கும் பங்குண்டு.<br>- நம்மிடையே அதிக விழிப்புணர்வு தேவை. |

| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 15) | |
|---|---|
| முன்னுரை | தலைப்பு - சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள். |
| தெரிநிலைக் கருத்து | - அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இக்காலத்தில் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.<br>- இன்றைய இளைஞர்கள் பொருளீட்டுதல் ஒன்றையே வாழ்வியல் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.<br>- இவ்வாறான இளைஞர்களுக்குத் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகளை நினைவூட்ட வேண்டும்.<br>- இன்று புலால் உண்பது, உயிர்பலி கொடுப்பது, மது அருந்துவது போன்றவற்றை யாரும் தவறாகக் கருதவில்லை.<br>- இச்செயல்கள் கூடாதென வள்ளுவர் சொன்னதை மக்கள் மறந்தேவிட்டனர். |
| புதைநிலைக் கருத்து | - சமுதாயத்தில் மாற்றம் தவிர்க்க இயலாது<br>- இளைஞர்களின் சிந்தனையும் செயலும் மாறியுள்ளது<br>- மக்களின் போக்கும் மாற்றம் கண்டுள்ளது<br>- வள்ளுவரையும் குறளையும் மறந்த சமுதாயமாக மாறியுள்ளோம் |
| முடிவுரை | - மாற்றம் தேவை என்றாலும் பழம்பெருமையைக் காக்க வேண்டும்<br>- வள்ளுவரையும் குறளையும் வாழ்க்கை நெறியாகக் கொள்வது நலம் பயக்கும் |

| பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (வினா 15) | |
|---|---|
| முன்னுரை | தலைப்பு - சுற்றுலாத்துறை வளர்ச்சியின் பயன்கள் |
| தெரிநிலைக் கருத்து | - இன்று பல நாடுகள் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி வெற்றிகண்டு வருகின்றன<br>- நம் நாடும் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது<br>- சுற்றுலாத்துறை வளர்ச்சியினால் பொருளாதாரம் பெருகி, நாடு மேம்பாடு காண்கிறது<br>- மக்களுக்கும் வேலை வாய்ப்புகள் கிடைத்து அவர்களின் வாழ்க்கை வளமாகிறது<br>- தனிமனிதன் சுற்றுலா செல்வதால் அவன் பொழுது இன்பமாகக் கழிகிறது<br>- வீட்டிலேயே முடங்கிக் கிடக்காமல் வெளியே சென்று வருவது மனத்திற்கு இன்பம் கூட்டும்<br>- படித்த, கேட்ட இடங்களை நேரில் சென்று காண்பதால் பொது அறிவும் வளர்கிறது |
| புதைநிலைக் கருத்து | - சுற்றுலாத்துறை முக்கியத் துறையாக மாறியுள்ளது<br>- இத்துறை நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை பயக்கிறது<br>- தனிமனித வளர்ச்சிக்கும் துணையாக உள்ளது |
| முடிவுரை | - ஒவ்வொரு நாட்டு வளர்ச்சியிலும் சுற்றுலாத்துறை முக்கிய இடம் வகிக்கிறது<br>- சுற்றுலா செல்வதை யாரும் தவிர்க்க வேண்டாம் |

| புள்ளிவிவரப் பட்டியல் – தொகுத்தல் | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 15)** | |
| முன்னுரை | தலைப்பு - 31/08/2021 வரையிலான பேரா மாநிலக் கோவிட் 19 நிலவரம் |
| தெரிநிலைக் கருத்து | - கோவிட் 19 நோயால் மொத்தம் 65,921 பேர் பாதிப்பு,<br>- குணமடைந்தோர் அதிகம், 53,820 பேர்<br>- இறந்தோரும் அதிகம்தான், 472 பேர்<br>- சிகிச்சை பெற்று வருபவர், 10,277 பேர்<br>- அவசரச் சிகிச்சைப் பிரிவில், 144 பேர்<br>- புதிய பாதிப்பு, 1,208 பேர் |
| புதைநிலைக் கருத்து | - நோய் கண்டவர் அதிகம்<br>- இறப்பு அதிகம், வேதனைக்குரியது<br>- நிறைய புதிய பாதிப்பு, தொடர்கதையாக உள்ளது |
| முடிவுரை | - அனைவரும் கவனமாக இருக்க வேண்டும்<br>- பாதிக்கப்பட்டவருக்காக வேண்டுதல் |

| | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 15)** | |
| முன்னுரை | - தலைப்பு - 2020 தோக்கியோ ஒலிம்பிக்கில் தென்கிழக்காசிய நாடுகள் பெற்ற பதக்கங்கள் |
| தெரிநிலைக் கருத்து | - தென்கிழக்காசிய நாடுகள் பெற்ற மொத்தப் பதக்கம் 13 மட்டுமே<br>- பிலிப்பினா, இந்தோனீசியா, தாய்லாந்து தலா ஒரு தங்கப் பதக்கம் பெற்றுள்ளன<br>- மலேசியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் பெற்றுள்ளது<br>- ஏனைய 7 நாடு ஒரு பதக்கம் கூட பெறவில்லை |
| புதைநிலைக் கருத்து | - பிலிப்பினா, இந்தோனீசியா, தாய்லாந்து பெருமை சேர்த்துள்ளன<br>- மலேசியா வெறுங்கையோடு திரும்பாதது நமக்குப் பெருமையே<br>- தென்கிழக்காசிய நாடுகள் அவ்வளவாக மிளிரவில்லை |
| முடிவுரை | - தென்கிழக்காசிய நாடுகள் பயிற்சியையும் முயற்சியையும் இரட்டிப்பாக்க வேண்டும்<br>- ஒலிம்பிக்கில் பங்கேற்பது உலகளவில் நம்மைப் பிரபலப்படுத்தும் |

| | |
|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 3 (வினா 15)** | |
| முன்னுரை | - தலைப்பு - பொங்கல் விழா பாரம்பரிய விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்ட இளையோர் விவரம் |
| தெரிநிலைக் கருத்து | - பங்குகொண்ட ஆண்கள் 143, பெண்கள் 109, மொத்தம் 252 பேர்<br>- மொத்தத்தில் பெண்களைவிட ஆண்கள் அதிகம்<br>- பல்லாங்குழி, தட்டாங்கல், கிளிதட்டு விளையாட்டில் பெண்கள் அதிகம்<br>- உறி அடித்தல், கபடி, சிலம்பம் விளையாட்டில் ஆண்கள் அதிகம்<br>- வழுக்கு மரம் ஏறுதல், ஆண்கள் மட்டுமே |
| புதைநிலைக் கருத்து | - பெண்களுக்குரிய விளையாட்டில் பெண்களும் ஆண்களுக்குரிய விளையாட்டில் ஆண்களும் அதிகம் பங்கேற்பு<br>- வழுக்கு மரம் தவிர, மற்ற விளையாட்டில் இருபாலரும் பங்கேற்பு |
| முடிவுரை | - பாரம்பரிய விளையாட்டுப் போட்டியில் இளையோரின் பங்கேற்பு பெருமையளிக்கிறது<br>- பாரம்பரிய விளையாட்டுகள் மறையாமல் இருக்க அதிகளவில் நடத்த வேண்டும் |

| செய்யுளும் மொழியணியும் - விடைப்பட்டி | | |
|---|---|---|
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1 (வினா 16 முதல் 18 வரை)** | | |
| 16 | (அ) | - கோறனி நச்சால் தன் தந்தையை இழந்து தவித்த அமுதன், சில நாள்களில் தாயையும் இழந்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல கவலையில் துடித்தான். **(ஏற்புடைய பிற விடைகள்)** |
| | (ஆ) | - அன்று நடந்த சாலைவிபத்தைப் பற்றி ஆதி அந்தம் வரை வழக்கறிஞர் முழுமையாக விளக்கி நீதிமன்றத்தில் கூறியதால் வேந்தன் தவறு இழைக்கவில்லை என்று அனைவருக்கும் புரிந்தது. **(ஏற்புடைய பிற விடைகள்)** |
| 17 | (அ) | - இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்<br>என்ன பயத்ததோ சால்பு. |
| | (ஆ) | - கடல் கடந்து சென்றும் செல்வம் தேட வேண்டும். |
| 18 | - கூர்விழியுடைய நாட்டியப் பெண்கள் ஆடலரங்கத்திற்கு அழகு செய்ய ஆடுவதைப் போன்று மயில்கள் மரக்கிளைகளில் நாட்டியமாடவும். | |
| **பயிற்சிக்கும் முயற்சிக்கும் 2 (வினா 16 முதல் 18 வரை)** | | |
| 16 | (அ) | - போட்டியில் வெற்றி பெறாத மாணவர்களை ஆசிரியர் திருமதி அரசநேசி தட்டிக் கொடுத்து, தைரியத்துடன் கலந்து கொண்டதற்கு அவர்களைப் பாராட்டினார். **(ஏற்புடைய பிற விடைகள்)** |
| | (ஆ) | - வாழ்க்கையில் வரும் பல இன்ப துன்பங்களைக் கடந்து முன்னேறி வெற்றிப் பெறும் மனிதர்களை அனைவரும் விரும்புவர். **(ஏற்புடைய பிற விடைகள்)** |
| 17 | (அ) | - படிக்கப் படிக்க ஒரு நயமான நூலின் சிறப்பு அதிகரிப்பதுபோல, நல்ல குணமுடையவர்களின் நட்பு பழகப் பழக இன்பத்தை அதிகரிக்கும். |
| | (ஆ) | - நொறுங்கத் தின்றால் நூறு வயது. |
| 18 | - எல்லா ஊரும் எமக்குச் சொந்தமான ஊரே. எல்லாரும் எம் சுற்றத்தார்களே. எமக்கு உண்டாகும் துன்பமும் நன்மையும் பிறர் கொடுப்பதால் வருவன அல்ல. அனைத்தும் நம்மாலேயே விளைவனவாகும். | |
| | | |

## செய்யுளும் மொழியணியும் - வினா 19 பயிற்சிக்கும் முயற்சிக்கும் 1

| **பயிற்சி 1** | |
|---|---|
| (i) | இனிப்புக் காட்டுதல் |
| (ii) | இலவு காத்த கிளி போல |
| (iii) | திமுதிமு |
| (iv) | ஏழை எளியோர் |

| **பயிற்சி 2** | |
|---|---|
| (i) | நெளிவு சுளிவு |
| (ii) | அகமும் புறமும் |
| (iii) | கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல |
| (iv) | அடாது செய்பவன் படாது படுவான் |

| **பயிற்சி 3** | |
|---|---|
| (i) | அரைப்படிப்பு |
| (ii) | குந்தித் தின்றால் குன்றும் மாளும் |
| (iii) | கொழு கொம்பற்ற கொடி போல |
| (iv) | சண்டை சச்சரவு |

| **பயிற்சி 4** | |
|---|---|
| (i) | வீடு வாசல் |
| (ii) | ஊண் உறக்கம் |
| (iii) | மனக்கவலை பலக் குறைவு |
| (iv) | வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல |

| **பயிற்சி 5** | |
|---|---|
| (i) | தட்டிக் கொடுத்த |
| (ii) | ஆடிக்கறப்பதை ஆடிக்கற பாடிக்கறப்பதை பாடிக்கற |
| (iii) | தங்கு தடை |
| (iv) | உள்ளங்கை நெல்லிக்கனி போல |


| பயிற்சி 6 | |
|---|---|
| (i) | இன்ப துன்பம் |
| (ii) | ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு |
| (iii) | வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல |
| (iv) | எள்ளளவும் |

| பயிற்சி 7 | |
|---|---|
| (i) | சிலுசிலு |
| (ii) | திரை கடல் ஓடியும் திரவியம் தேடு |
| (iii) | நீர் மேல் எழுத்து போல |
| (iv) | இன்ப துன்பம் |

| பயிற்சி 8 | |
|---|---|
| (i) | உயர்வு தாழ்வு |
| (ii) | நொறுங்கத் தின்றால் நூறு வயது |
| (iii) | மாலுமி இல்லாத கப்பல் போல |
| (iv) | பாட்டு வாங்குதல் |

## நன்றி

**தேர்வு வாரியம், மலேசியக் கல்வி அமைச்சு.**
**கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு, மலேசியக் கல்வி அமைச்சு.**
**பேரா மாநில இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள்.**



Hak Cipta Terpelihara.
Tidak dibenarkan mengeluar ulang mana - mana bahagian artikel, ilustrasi dan isi kandungan modul ini dalam apa juga bentuk dan cara sama ada secara elektronik, fotokopi, mekanik rakaman atau cara lain sebelum mendapat izin bertulis daripada Jabatan Pendidikan Negeri Perak.

Penerbit :
©Sektor Pembelajaran,
Jabatan Pendidikan Negeri Perak
Jalan Tawas Baru Utara, Tasek Damai,
30010, Ipoh, Perak Darul Ridzuan
Tel: 05-292 2745 / 05- 292 3603
Faks : 05 – 292 3851
2022